KALKI 28.4.91 ரூ. 2.50

கல்கி



கிரெடிட் கார்ட்:
வசதியா? வேதனையா?

க்ளியரேஸில் சருமம் தெள்ளத் தெளிவான சருமம் க்ளியரேஸில் சருமம் தெள்ளத் தெளிவான சருமம்

நான் எனது சருமத்தைப் பற்றி கவலைப்படுகிறேன் பிற்பாடு கவலையே பட அவசியமிருக்காது



பருக்கள் வராம இருக்க, வெறும் சோப்பும் தண்ணியும் மட்டும் கொண்டு முகத்தை கழுவினா போதாது. அதெல்லாம் சருமத்துக்கு அடியில் போய் சுத்தம் செய்யாது.

அதனால் எப்ப முகத்தை கழுவணும்னாலும், க்ளியரேஸில் மெடிகேட்டட் க்ளென்ஸரால் சுத்தம் செய்யறேன். க்ளியரேஸில் மெடிகேட்டட் க்ளென்ஸர் நம்ம சருமத்துக்குள் நன்றாக ஊடுருவி சருமத்துக்கடியில் இருக்கும் எண்ணெயையும் அழுக்கையும் எடுத்துடும். வெறும் சோப்பும், நீரும் இதை செய்யாது. இப்ப என் முகம், முன்னைக் காட்டிலும் எத்தனை பளிச்சுனு இருக்கு தெரியுமா!

நீயும் எப்பவும் முகத்தைக் கழுவிய பிறகு கொஞ்சம் க்ளியரேஸில் மெடிகேட்டட் க்ளென்ஸர் உபயோகித்துப் பார். என்னைப் போலவே நீயும் உன் சருமத்தில் அக்கறை காட்டினால், பிறகு கவலைப்பட அவசியமே இல்லை.



க்ளியரேஸில் மெடிகேட்டட் க்ளென்ஸர்

கவலை வேண்டாம். தெள்ளத் தெளிவான சருமம் பெறலாம்.

தெள்ளத் தெளிவான சருமம் பற்றிய கூடுதல் விவரங்களை தபால் செலவின்றி இலவசமாகப் பெற எழுதுவீர் இம்முகவரிக்கு:
Clearasil Adivisor, P.O. Box No. 1919, Bombay-400 001.

க்ளியரேஸில் சருமம் தெள்ளத் தெளிவான சருமம் க்ளியரேஸில் சருமம் தெள்ளத் தெளிவான சருமம்

Enterprise/CMC/1/Tm r



வித்தையல்ல, வாழ்க்கை...!

வல்லி



சென்ட்ரல் ரயில் நிலையத்தை ஒட்டி அந்தக் குழு கூடாரம் அடித்திருந்தது. பகலில் சுற்றுப்புறப் பகுதிகளில் 'தகரதரகபிம்ம்' என்று இசையடித்து, கம்பி கட்டி அந்தரத்தில் வித்தைகாட்டி, தரை சில்லறைகளைப் பொறுக்கிக் கொண்டு அரிசி, இத்தியாதிகள். அடுப்பு மூட்டி சமையல், பேச்சு, பாட்டு, தூக்கம். மறுநாள் மற்றொரு மறுநாள் என்று தினங்கள்.

ராதா ஓட ஆரம்பித்தாள். திசை தெரியவில்லை. மூச்சு வாங்குகிறது. வாய் உலர்ந்து, சக்தி தீர்ந்து தளர்ந்து விடுவது போல.. ராதாவுக்குக் கடைசி விநாடிகளில்தான் அந்தக் கூடாரப் கண்ணில் தென்படுகிறது. சட்டென்று அதில் புகுந்து கொள்கிறாள். சப்தமிட முயன்ற கழைக்கூத்தாடிகளைக் கெஞ்சுகிறாள். மூச்சிரைக்க, தப்பித்தன வார்த்தைகள்: "ஆபத்து. ரவுடி பசங்க. என்னை, என்னை... காப்பாத்துங்க!"

காலடி ஓசைகள் இப்போது அந்தக் குழு படுத்திருந்த இடத்தை நெருங்குகின்றன. அங்கே இங்கே தேடி, தடுமாறி நடக்கின்றன. இரை தப்பி விடுமோ என்கிற ஆத்திரம் அந்தக் காலடிகளில் பிரதி

பலிக்கிறது.

''டேய்! எழுந்திருடா!'' — இருதா ஆசாமி. படுத்திருந்த ஒருவனைக் காலால் உதைத்து எழுப்புகிறான்: ''இந்தப் பக்கம் ஒரு பொண்ணு ஓடி வந்தாளே பாத்தீங்களா?''

''பொண்ணா? இல்லைங்களே. என்ன விஷயம்? அதுக்குள்ள விடிஞ்சிருச்சா?''

முரடனிடமிருந்து கெட்ட வார்த்தை வருகிறது.

அப்போது சாலையில் இரவுப் பேருந்து வந்து நின்று ஒரு கும்பல் அதில் ஏறிக் கொள்ள, முரடர்கள் அதை நோக்கி ஓடுகிறார்கள்.

கூடாரம்.

''உன் பேரு என்னம்மா?''

''ராதா.''

''எப்படி இவங்ககிட்டே மாட்டினே?''

''நா வெளியூர். வீட்டுல பிரச்னைகள். இம்சைகள். இப்ப பரீட்சையில வேற தோத்துட்டேன். இன்னும் என்ன வாருமோன்னு ஓடி வந்திட்டேன். இங்கே...''

''பதற்றமா இருக்கே. இங்கியே தூங்கிக்க. காலைல பேசிக்கலாம்!'' நாங்களே உன்னை ஊருக்கு அனுப்பி வைக்கறோம்!''

வேளச்சேரி — தாம்பரம் சாலையில் ஜல்லடன் பேட்டையிலிருந்து கைக்கு எட்டுகிற தூரத்தில் கழைக்கூத்து நகர் இருக்கிறது.

நகர் என்றால் விஸ்தாரமாக யோசித்து விட வேண்டாம். பதினெட்டு இருபது சிக்கன வீடுகள். **Roofs for the Roofless** அமைப்பின் முயற்சியால் மத்திய அரசு உதவி பெற்று கட்டின வீடுகள். ஒரு மையக் கட்டடம். சின்னக் கோயில், கிணறு, கையகல மணல்வெளி என்று அந்தப் பகுதியில் ஒரு சின்னத் தீவாய்... குஜராத்திலிருந்து பிழைப்புத் தேடி நாற்பது வருடங்களுக்கு முன் வந்தவர்கள். இப்போது சுமார் நூறு பேர் மிச்சமிருக்கின்றனர்.

இவர்களுக்கு குஜராத்தி இப்போது மறந்து விட்டது. எளிய பேச்சுத் தமிழைச் சற்றே விநோத பாணியில் பேசுகிறார்கள். அது தவிர எழுத்தில்லாத சொந்த பாஷை ஒன்றும் வைத்திருக்கிறார்கள். முருகேசன், சந்துரு, ஜரினா என்று நிகழ்காலப் பெயர்கள்தான். ஆனால் அதனுடன் ஆண்களாய் இருந்தால் 'ஜி' என்றும், பெண்ணாய் இருந்தால் 'பாய்' என்கிற அடைமொழியும் சேர்ந்து கொள்கிறது.

அவ்வளவு பேரும் இருபத்தி நாலு குடும்பங்களாக அமைந்து வாழ்கிறார்கள். குடும்பத்திற்கு ஒருவர் அங்கிருக்க, மற்றவர்கள் தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிந்து வேறு வேறு பகுதிகளுக்கு, பாண்டிச்சேரி போன்ற வெளியூர்களுக்குச் சென்று வித்தை நடத்தி கிடைக்கும் தொகையில், உணவுக்குப் போக மிச்சத்தைச் சேர்க்கிறார்கள். மாதம் ஒரு முறை அமாவாசை அன்றும், வருடம் ஒருமுறை பொங்கலை ஒட்டியும் சொந்தப் பகுதியான இந்த கழைக்கூத்து நகர் திரும்புகிறார்கள். குலதெய்வமான 'கம்பத்தடி கருப்பனுக்கு' — விழா எடுத்து வணங்குகிறார்கள். வருமானத்தை எல்லோரும் சமமாய்ப் பிரித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்குத் தலைவர்: பாபுஜி!

அந்த மாத அமாவாசை பாபுஜியிடம் பிரச்னை கொண்டு வரப்பட்டது: ராதா!

''நாங்க எவ்வளவோ எடுத்துச் சொன்னோம் தலைவரே. அடுத்த நாள் விடிஞ்சதிலிருந்து இந்தப் பொண்ணு அழுது அடம் பிடிக்கிறா. ஊருக்கு அனுப்பினா செத்துடுவேன்னு சொல்லுது. வேற யாரையும் தெரியாதுன்னும் சொல்லுது. புத்தி சொல்லி அனுப்பி வையுங்க தலைவரே.''

''இங்க வாம்மா'' — பாபுஜி அழைக்கிறார். ''இவங்க சொல்றது நிஜமாம்மா?''

தலையசைக்கிறாள் ராதா.

''எங்க கூட்டத்துக்குன்னு சட்ட திட்டங்கள், பழக்க வழக்கங்கள் இருக்கு. உனக்கு இது சரிவராது. ஊர் போய்ச் சேரு. ஒரு ஆளை வேணா துணைக்கு அனுப்பி வைக்கறேன். எந்த ஊரு?''

''சொல்ல மாட்டேன. அங்க போனா... வேணாம்! அங்க எனக்கு நிம்மதியில்லை!''

''சின்னப் பொண்ணா இருக்கியேம்மா போலீஸ், விசாரணைன்னு நாளைக்கு வந்தா? எங்க நிம்மதி போயிடுமே.''

''நா சின்னப் பொண்ணு இல்லைன்னு சொல்லிடுங்க. அதை விட யார்கிட்டேயும் என்னை வேத்து ஆளாச் சொல்லாம இருந்தாலே பிரச்னை வராதே!''

நாங்க நாகரிகம் தெரியாதவங்க. சரியாக் குளிக்கக் கூட இப்பதான் கத்துக்கிட்டோம். உடைகள், சோப்பு, மருந்துன்னு ஒரு சமூக அமைப்பு தருது. வெளில இளம் பிட்டா வானம்தான் கூரை. மழைக் காலத்துல வருமானமே இருக்காது. அரைப் பட்டினி. வேணுமா உனக்கு?''

''இதுல ஒரு புது வாழ்க்கை, புது நிம்மதி இருக்கறதாப் படுது எனக்கு. ரெண்டு நாள் இவங்களோட தங்கி இருந்திருக்கேனே.''

பாபுஜி குழப்பமடைகிறார். ''கொஞ்சம் பொறுத்து முடிவு சொல்றேன்.''

எல்லோருடனும் ராதா சுற்றி வருகிறாள். குழந்தைகளுடன் கலந்து விளையாடுகிறாள். அவர்களைப் பற்றி மேலும் தெரிந்து கொள்கிறாள்.

''எங்கள்ல பொம்பளைக்குத்தாம்மா மரியாதை. கல்யாணம் செய்துக்கிட்டா மாப்பிள்ளை, பொண்ணு வீட்டோட போயிடணும். மாமனார் — மாமியார்க்குக் கடைசி காலத்துல கஞ்சி ஊத்தணும். அதனால இதில பொண்ணு பெத்துக்கிறவங்கதான் அதிர்ஷ்டசாலி.''

''அட!''

"அதே மாதிரி முறைப்பொண்ணுங்களைத்தான் கல்யாணம் செய்துக்க முடியும். அப்படி ஒருத்தருக்கு யாரும் அமையலைன்னா, வேற நாடோடிக் குழுவுல பொண்ணு கேட்டுப் பாப்போம். அதுவும் இல்லைன்னா அந்த ஆள் பிரம்மச்சாரியா இருந்திட வேண்டியதுதான்."

"ஒருத்தரை எப்படி வித்தைக்குப் பழக்கறது?"

ஆபத்தான வேலைம்மா இது. கரணம் தப்பினா மரணம். எத்தனையோ பேர் விழுந்து அடிபட்டுப் பிழைச்சும் இருக்காங்க. போய்ச் சேர்ந்தவங்களும் உண்டு. இயற்கையாக் கத்துக்கறதுதான். கவனிச்சுப் பார்த்துக்கிட்டு, தைரியமா பயிற்சி செய்தா வித்தை வந்துடும். ஆறு மாசக் குழந்தையில இருந்து நாங்க பழகிடுவோம்."

"ஆறு மாசக் குழந்தையிலையா? எப்படி?"

"அந்தரத்துல விசிப் பிடிப்போம். வயித்துல கால் வச்சுத் தாண்டுவோம். ஆ! பயப்படாத. சும்மா மிதிக்கிற மாதிரி இருக்கும். ஆனா, கால், குழந்தை வயித்தைத் தொட்டுத்தான் கொடுக்கும். நல்லதோ கெட்டதோ எல்லாம் கம்பத்தடி கறுப்பன் முடிவு."

"வேற வேலை செய்ய முயற்சி பண்ணக் கூடாதா?"

"என்ன செய்யறது? ஒண்ணு ரெண்டு பேர் மூணு சக்கர சைக்கிள் பாங்குக் கடன்ல வாங்கி ஓட்ட ஆரம்பிச்சிருக்காங்க. மத்தபடி ஒரே ஒரு பையன் இங்கிலீசு படிக்கறான். சமூக சேவகியம்மாதான் படிக்க வைக்கறாங்க. நமக்குத் தெரிஞ்சது இந்த வித்தைதாம்மா. இது மத்தவங்களுக்கு வேடிக்கை. எங்களுக்கு வாழ்க்கை!"

சாயங்காலம் மறுபடி பாபுஜி அழைத்துப் பேசினார்.

"உன் முடிவை மாத்திக்க..."


"விரும்பலை."

"சரி, கடவுள் மேல பாரம். இனி நீ நம்ப இனம். உன் பேரு ராதாபாய்.

முதலில் ராதாபாய் இசைக் கருவிகள் வாசிக்கப் பழகினாள். கூச்சமில்லாமல் தட்டு ஏந்தி வலம் வந்தாள். நடனமாடிக் கவர்ந்தாள். அவள் ஆர்வம் கரணம், கம்பி மேல் நடை என்று வித்தைகளில் தேர்ச்சி பெற வைத்தது.

நாட்கள். மாதங்கள். ராதாபாய் அந்தக் குழுவில் ஒரு இளைஞனை நேசித்தாள். தன் விருப்பத்தைத் தலைவர் பாபுஜியிடம் தெரிவித்தாள். ஒரு சந்தோஷ நாளில் திருமணம். கறுப்பு மணி கட்டி புதுமண வாழ்க்கை. ராதாபாய்க்கு அதிருஷ்டமிருந்தது. அவளுக்குப் பிறந்தது பெண் குழந்தை! லல்லி!

மேலும் நாட்கள். நகரம். அன்றைக்கு வித்தை முடிந்தும் அந்த ஆள் போகாமல் நின்று கொண்டிருந்தான். ராதாவை அணுகினான். சரியாகப் பெயர் சொன்னான். தயங்கித் தயங்கிப் பேச ஆரம்பித்தான்:



கட்சி என்பது சிலரது நன்மைக்காகப் பலரை முட்டாள்களாக்குவதாகும்!

— போப்.

உன் கையிலுள்ள ஓட்டு ஒரு யோக்யனுக்கு விழுந்தால் உன் எதிர்காலம் காப்பாற்றப்படுகிறது. ஓர் அயோக்கியனுக்கு விழுந்தால் அவனது எதிர்காலம் காப்பாற்றப்படுகிறது!

— கண்ணதாசன்.

— குடியாத்தம் அரிகோபி.

"அம்மா! உனக்குத் தலையெழுத்தா? வசதியா இல்லை? இப்படி ஆடிப் பொழைக்க என்னம்மா விதி? உறவுக்காரங்க இப்ப மாறிட்டாங்க. அப்பா படுக்கையில கிடக்கார். ஒருதரம் எட்டிப் பாத்திடும்மா. உடம்பு வேகும்!"

ராதாவுக்கு முகம் மாறி விட்டது. தொடர்ந்து அவள் கவலைப்படுவதை முக ஜன்னல் வெளிப்படுத்திற்று! பெற்றவர்கள் நினைப்பு வந்து விட்டதோ? குழுவினர் விசாரித்தனர். ராதாபாய் தலையசைத்தாள். அவர்கள் அனுமதித்தனர். ராதா அவள் பெற்றோரை போய்ப் பார்த்து வர பணத்திற்கு ஏற்பாடு செய்தனர்.

இவர்களில் ஒரு சின்ன குழு இப்போது வி. ஜி. பி. தங்கக் கடற்கரையில் நிரந்தரமாக வித்தை காட்டிக் கொண்டிருக்கிறது. கழைக்கூத்து நகரிலிருந்து வி. ஜி. பி. கடற்கரை வந்து அந்தக் குழுவை நாம் சந்தித்தோம். அங்கேதான் 'லல்லி' இருந்தாள்.

"இடைவெளிக்குப் பிறகு ஊருக்குப் போகுதே; கணவன் — குழந்தைன்னு போய் நின்னா அதிர்ச்சியா இருக்குமேன்னு யோசிச்சோம். பணம் வாங்கிக்கிட்டு ராதாபாய் தனியாத்தான் போனா. ரெண்டே நாள்ல திரும்பி வர்றதாச் சொன்னா. வரவே இல்லை!"


"அப்புறம்?"

"குழந்தை லல்லியும், ராதாபாய் புருஷனும் இதோ இவங்கதான். எங்களுக்கு ராதாபாய் முகவரி தெரியாது. ஊருக்குப் போனவ மனசைப் பெத்தவங்க மாத்திட்டாங்களா, தெரியாது. ஆனாலும் குழந்தையை நெனச்சாவது ராதாபாய் என்னிக்காவது திரும்பி வந்து சேருவான்னு எங்க எல்லோருக்கும் நம்பிக்கை இருக்கு. காத்திருக்கோம்."

'தகரதகரபம்ம்' என்று இசையுடன் அவர்கள் வித்தை மறுபடி ஆரம்பமாகி விட்டது. குழந்தை லல்லி அந்தரத்தில் பறந்து விட்டு வந்து நம்மைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

— சுந்தர்ஜி

படங்கள்: ரமணன்



வாசகர் யோசனை:


இரா. செண்பகராஜ்.
காரைக்குறிச்சி.

எடுத்தோம், பார்த்தோம் ஜவ்வு மாதிரி இழுத்தோம்!

அரசுத் துறை நிறுவனமாகட்டும், அரசாங்கமாகட்டும், 'ஒரு விஷயத்தை எடுத்தோம்; நேர்த்தியாகச் செய்து முடித்தோம்' என்று கிடையாது. இங்குள்ள அதிகாரிகள் ஒவ்வொரு காரியத்தையும் ஜவ்வு மாதிரி இழுத்துக் கொண்டே போவதில் நிபுணர்கள்!

உதாரணத்துக்கு இரு சம்பவங்கள்:

ஆயுதச் சிகிச்சைக்கு உள்ளாகி சில காலம் முன் நான் மருத்துவமனையில் இருக்க நேர்ந்தது. என் சக்திக்கு மீறிய செலவு. நல்லவேளை நான் மெடிகல் இன்ஷூரன்ஸ் செய்திருந்தேன். எனவே செலவான தொகையைத் திரும்பப் பெற மனு செய்தேன். இரண்டு வாரங்கள் சென்று எனக்கு இன்ஷியூரன்ஸ் நிறுவனத்திலிருந்து தபால் வந்தது. 'அட, அதற்குள் காசோலை அனுப்பி விட்டார்களா!' என்று வியந்து கொண்டே உறையைப் பிரித்தால், நான் அனுப்பியிருந்த மருத்துவமனை ரசீதுகள் எனக்கே திரும்ப வந்திருந்தன! ''இவற்றில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டப்படவில்லை; ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்ட ரசீதுகளை அனுப்பவும். பிறகு உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கிறோம்!'' என்று கடிதம் கூறியது! ஆயுத சிகிச்சை செய்யும் எந்த டாக்டர், மயக்கம் கொடுக்கும் எந்த டாக்டர், எக்ஸ்ரே எடுக்கும் எந்த நபர் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி ரசீது தருகிறார்? இப்போது இவர்கள் ஒவ்வொருவரையும் நான் மறுபடி தேடிச் சென்று, ''ஐயா, என்னை நினைவிருக்கா? ரசீதில் ஸ்டாம்பு ஒட்டியிருக்கேன். தயவு செய்து கையெழுத்துப் போடுங்கள்'' என்று கேட்க வேண்டும். அப்படியே சேகரித்து, மீண்டும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிக்கு அனுப்பினால், அவர்கள் புதிதாக இன்னும் என்ன பிரச்னையை எழுப்புவார்களோ!



எனக்குக் கடந்த பல ஆண்டுகளில் மொத்தமாக ஐயாயிரத்துக்கும் அதிகமான தொகை வருமான வரி இலாக்காவிலிருந்து திரும்ப வர வேண்டியிருக்கிறது. 'அட்வான்ஸ் டாக்ஸ்' என்று வரியை முன்கூட்டியே கட்ட வேண்டியிருப்பதாலும், வருமானத்தைத் துல்லியமாக முன்னதாகவே கணிக்க முடியாதாகையாலும், அதிகப்படியாகக் கட்ட நேர்ந்து, பின்னர் திரும்பப் பெறக் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. சமீபத்தில்தான் அதிகாரி, பெரிய மனது பண்ணி, நான் சமர்ப்பித்துள்ள வருமான வரிக் கணக்குகளை எல்லாம் ஆராய்ந்து, திருப்பித் தரப்பட வேண்டிய தொகையையும் சரியாகவே நிர்ணயித்தார். ஆனால் என் போதாத காலம் பாருங்கள். ''இதற்கு முந்தைய இரு ஆண்டுகளில் இத்தனை வரி பாக்கியிருக்கிறது; அதை இதிலிருந்து குறைத்துக் கொண்டு, பாக்கியை அனுப்புகிறேன்'' என்று குறிப்பிட்டு, நாலாயிரத்துச் சொச்சம் ரூபாய் மட்டுமே அனுப்பியிருக்கிறார்! 'வருமான வரி கணக்குகளைச் சமர்ப்பிக்கும்போதே, வரி பாக்கியைக் கட்டி, ரசீதை இணைத்து அனுப்ப வேண்டும்' என்று சட்டம் இருக்கும்போது, வரி பாக்கி எப்படி இருக்க முடியும்? பிந்தைய ஆண்டுகளில் அதிகப்படியாகச் செலுத்திய வரியைத் திரும்பக் கேட்கிறவன், அதற்கு முந்தைய ஆண்டுகளில் வரி பாக்கி வைத்திருப்பேனா? யோசிப்பதில்லை. ஃபைல்களை ஒழுங்காக வைத்திருப்பதும் இல்லை. ஒழுங்காக இருந்தால், வரி பாக்கி இல்லை என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாமே! இப்போது நான், ஐந்தாறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ரசீதுகளைத் தேடி எடுத்து, அவற்றின் ஜெராக்ஸ் பிரதியுடன் மறுபடி மனு செய்து, மறுபடி எத்தனை ஆண்டுகளுக்கோ காத்திருக்க வேண்டும்!

என் கதை கிடக்கட்டும்; என்னைப் போல் எத்தனை ஆயிரம் பேர் அவதிப்படுகிறார்கள்! அசிரத்தை காரணமாக எத்தனை கால விரயம்! இத்தகைய மெத்தனம் எத்தனை துறைகளில் புகுந்து கொண்டு நாட்டின் முன்னேற்றத்தைத் தடை செய்கிறது! அதிகாரிகளின் அலட்சியம் தொழிலதிபர்களுக்கு எவ்வளவு பெரிய முட்டுக்கட்டை! ஒட்டுமொத்தமாக தேசத்துக்கு எவ்வளவு நஷ்டம்!

'செய்வன திருந்தச் செய்வோம்; தகுந்த காரணமின்றி மக்களைச் சந்தேகிக்காதிருப்போம்; நேரம் பொன்னானது. அதை நாமும் வீணடிக்காமல் பிறருக்கும் வீணாகாமல் சேமிப்போம்' என்றெல்லாம் பொறுப்புணர்ந்து அதிகாரிகள் செயல்பட்டால் நாடு முன்னேறி விடுமே!

அனுமதிக்கலாமா அதை!



ஆம். சரியாக சாப்பிடாமல் இருப்பது குழநதையின் வளர்ச்சியை பாதிக்கலாம்.

சரியாக சாப்பிடாமலிருக்கும் குழந்தை தனது உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தையும் முழுமையாகப் பெறுவதில்லை. இப்பற்றாக்குறை அவனது வளர்ச்சியை பாதிக்கக் கூடும். அவனுக்கு அளிப்பீர் காம்ப்ளான். அவன் இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய காம்ப்ளான் உதவுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்குத் தலைசிறந்த புரதமாகிய பால் புரதம் 20% மற்றும் உடலுக்குத் தேவையான 22 அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் அடங்கியதாகும் காம்ப்ளான்.

காம்ப்ளான் நாவிற்கினிய
5 சுவைகளிலே கிடைக்கிறது.



காம்ப்ளான்®

திட்டமிட்ட பரிபூரண உணவு.

GX/27/203 TAM



— ராஜ்குமார், வேலூர்.



○ அன்று டீ.வி.யில் ஒரு இந்திப் படப் பாடல் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அதில் பாடிக் கொண்டே கதாநாயகி, மிளகாயை வெயிலில் வைத்து நன்றாகக் கையால் துழாவிக் காய வைத்து விட்டு, அதே கையுடன் பக்கத்தில் கொடியில் உலர்ந்து கொண்டிருந்த புடைவையை எடுத்தாள்.

''ஐயய்யோ, மிளகாய்க் கையோடு புடைவையை எடுத்து விட்டாளே,'' என்று என் மகன் கூவ,

அருகில் இருந்த அவன் அப்பா, ''அது அவ மாமியார் புடைவை,'' என்று பளிச்சென்று சொல்ல, சிரிப்பு அலை ஓய வெகு நேரமானது.

— மாலதி கணேசன், சென்னை.

● ● ● ●

கடத்தல்காரன் (டெலிபோனில்): ''உன் பையனை நாங்க கடத்திக்கிட்டுப் போய் வச்சுக்கிட்டு இருக்கிற விஷயம் போலீசுக்குத் தெரியக் கூடாது...''

''ஏன்?''

கடத்தல்காரன்: ''தெரிஞ்சா நீ கொடுக்கப் போற ஒரு லட்சத்துல அவங்களுக்கு வேற ஒரு பங்கு அழ வேண்டியிருக்கும்.''

— வி. கிருஷ்ணகுமார், சென்னை — 73.



'ஜெ'க்குப் பிடிக்காத டீ.வி.நிகழ்ச்சி!

○ எம். எஸ். ஸி., கணித வகுப்பில் பேராசிரியர் ஒரு கடினமான கணக்கை விளக்கிக் கொண்டிருந்தார். ஒரு மாணவர் அதைக் கவனிக்காமல் பக்கத்தில் பேசிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த பேராசிரியர், ''கணக்கைக் கவனி.



நாளை நீ லெக்சரர் ஆகி வகுப்பில் இப்படிப் பட்ட கஷ்டமான கணக்கைப் போட முடியா விட்டால் என்ன செய்வாய்? '' என்று கேட்டார்.

உடனே அந்த மாணவர், ''நான் அந்தக் கணக்கை மாணவர்களுக்கு ஹோம் ஒர்க் ஆகக் கொடுத்து விடுவேன்'' என்று சளைக்காமல் சொல்லவும் வகுப்பே சிரிப்பில் ஆழ்ந்தது. பேராசிரியர் உட்படத்தான்!'

— ஏ. நடராஜன், சிதம்பரம்.

● ● ● ●

○ கணவருடன் கடைக்குச் சென்று 'ஆனியன் கட்டர் ஜார்' வாங்கி வந்தேன். வெங்காயத்தை ஜாடியினுள் போட்டு கைப்பிடியைச் சுற்றினால் நொடியில் வெங்காயம் பொடிப் பொடியாகி விடுகிறது.

பக்கத்து வீட்டுத் தோழியிடம் காட்டி, ''சொட்டுக் கண்ணீர் கூட வராமல் நறுக்க முடிகிறது.'' என்று பெருமையாகக் கூறினேன்.

அருகிலிருந்த என் கணவர், ''உனக்கு எப்படி கண்ணீர் வரும்? பணம் கொடுக்கும் போது ஒட்டுமொத்தமாக எனக்கு வந்து விட்டதே'' என்றார்!

— என். குணவதி, ஈரோடு.





ஒருவர்: பிரதமர் சந்திரசேகர் கட்சியும் டி. ராஜேந்தர் கட்சியும் தமிழ் நாட்டில் கூட்டு வைக்கப் போறாங்களாமே! இருவருக்கும் அப்படி என்ன கொள்கை ஒற்றுமை?

அடுத்தவர்: ரெண்டு பேரும் தாடி வச்சிருக்காங்களே!

— க. நாகராஜன், பரமக்குடி.

● ● ● ●



○ சமீபத்தில் திருச்செந்தூர் சென்ற உறவினரின் இரண்டரை வயதுச் சிறுவன் காணாமல் போய் விட்டான். போலீசார் அவனை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று பிஸ்கெட், சாக்லேட் கொடுத்துச் சமாதானப்படுத்தி வைத்திருந்து திரும்பக் கிடைத்தான்.

''நீ இனிமே காணாமப் போனா என்ன செய்வே? '' என்று கேட்க, ''பிஸ்கெட் தின்பேன்'' என்றானே பார்க்கலாம்!

— இரா. ஜோதி, மதுரை.

● ● ● ●

''உங்க நண்பரிடமிருந்து செகண்ட் ஹாண்ட் ஸ்கூட்டர் வாங்கினீங்களே! வீட்டருக்கு என்ன கொடுக்குது?''

''ஏகப்பட்ட ட்ரபிள்!''

— எஸ். சுந்தரராஜ், பாளையங்கோட்டை.

யாருக்கு வோட்டு?

சிறப்பான முறையில் எழுதப்பட்டதற்காக ரூ. 50 முதல் பரிசு பெறும் கட்டுரை — பரிசு வழங்கப்படுவது கட்சிக் கண்ணோட்டத்தில் அல்ல.

எனது வோட்டு கொள்கை அரசியல் நடத்தும் — "பாரதீய ஜனதா கட்சி" க்கே. மேலும் பல காரணங்கள் இதோ!

பி. ஜே. பி., மதச் சார்பின்மை பற்றித் தெளிவான கொள்கைகளைக் கொண்டிருக்கிறது. அரசு எந்த ஒரு மதத்தையும் சாராமல், அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவது, மதத்தின் அடிப்படையில் யாருக்கும் எந்தவிதமான விசேஷ சலுகைகளையும் தராமல் நடப்பது ஆகியனவே மதச்சார்பின்மை என்னும் தத்துவம் என்று பி. ஜே. பி. விளக்குகிறது.

பி. ஜே. பி. இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் தனது நிலையைத் தெளிவாக விளக்குகிறது. பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர்களுக்கு இட ஒதுக்கீட்டில் எந்தவிதமான இடையூறும் வரக் கூடாது. ஆனால் உயர் வகுப்பு ஏழைகள், அவர்கள் உயர்ந்த வகுப்பினர் என்ற ஒரே காரணத்திற்காக, ஒதுக்கப்படுவதையும் எதிர்க்கிறது. எனவே இட ஒதுக்கீடு பொருளாதார அடிப்படையிலும் இருக்க வேண்டும் என்று கூறுவதோடு இதையும் ஒரு காலவரம்புக்குள் முடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.



பாரதீய ஜனதா கட்சி சிறந்த வெளியுறவுக் கொள்கைகளைக் கொண்டுள்ளது. அணிசேரா நாடு என்னும் கொள்கையை நேரு முதல் ராஜீவ் வரை உள்ள பிரதமர்கள் வார்த்தை அளவில் மட்டுமே கடைப்பிடித்தனர். ஆனால் 1977ல் ஜனதா ஆட்சியின் போதுதான் தற்போது பி.ஜே.பி.யின் மூத்த தலைவரான வாஜ்பாய் வெளியுறவு அமைச்சராக இருந்து அதுவரை ரஷ்யாவின் பக்கம் சாய்ந்திருந்த 'அணிசேரா' நாடான இந்தியாவின் பக்கம் அமெரிக்காவும் நெருங்கி வரச் செய்தார். இந்தியாவை உண்மையிலேயே அணிசேரா நாடாகத் திகழச் செய்து, அண்டை நாடுகளுடன் நட்புறவை வளர்த்தார்.

பி. ஜே. பி. யின் பொருளாதாரக் கொள்கை குழப்பமில்லாதது. இக்கொள்கைகளைப் பின்பற்றினால் நமது நாடு செழிப்புறும். கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு விளங்க வேண்டிய நமது பொருளாதாரம், நகரங்களை அடிப்படையாகக் கொண்ட ஐரோப்பியப் பொருளாதாரத்தைப் போல் இருப்பதாகவும், இதனால்தான் நாம் குறிப்பிட்ட முன்னேற்றத்தை அடைய முடியவில்லை என்றும் பி.ஜே.பி. கூறுகிறது.

அனைத்து மக்களுக்கும் பொதுவான சிவில் சட்டம் தேவை என பி. ஜே. பி. வலியுறுத்துகிறது. ஒன்றுபட்ட இந்தியாவின் ஒரு பகுதிதான் காஷ்மீர் என்று நாம் அடித்துக் கூறும் போது, அம்மாநிலத்துக்கு விசேஷ அதிகாரம் வழங்கும் சட்டத்தின் 370வது பிரிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறுகிறது.

நிலையான ஆட்சி தருவதாகக் காங்கிரஸ் கூறுகிறது. சுதந்திர இந்தியாவிலேயே மிகப் பெரும்பான்மையான — 415 உறுப்பினர்கள் கொண்ட — ஒரு ஆட்சியை மக்கள் அவருக்கு அளித்தும், அதை ஐந்து வருடங்களில் 195 ஆகக் குறைக்கும் வகையில்தான் ராஜீவ் காந்தி செயல்பட்டு ஊழல்கள் பல புரிந்ததாகவும் சந்தேகத்துக்கு இடமளித்தார். ஆக அவரால் நிலையான ஆட்சியும் வழங்க முடியாது. திறமையான ஆட்சியும்

கொடுக்க முடியாது; நேர்மையான ஆட்சியும் அவரிடம் எதிர்பார்க்க முடியாது.

காங்கிரசுக்கு மாற்று ஜனதா தளம் என்று மக்கள் 1989 தேர்தலில் கருதினர். சந்திரசேகரைக் கவிழ்க்க, தேவிலாலைக் கொண்டு வந்து, அஜீத் சிங்கின் புகழைத் தட்டி வைக்க முலாயம் சிங்கை முன்நிறுத்தி, உணர்ச்சிபூர்வமான ராமஜன்மபூமி பிரச்னையில் போதிய முன் கவனம் இல்லாமல் அசட்டை செய்து, வோட்டு வாங்க மண்டலை உபயோகித்து, தான் காங்கிரஸ் என்னும் குட்டையில் ஊறிய மட்டைதான் என்று நிரூபித்து விட்டார் வி. பி. சிங். எனவே காங்கிரசுக்கு உண்மையான மாற்று பி. ஜே. பி. தான். சந்திரசேகரின் செயல்பாடுகள் ஓரளவு நன்றாக இருந்த போதிலும்காங்கிரஸின் தயவில் பதவியில் அமர்ந்த பிறகு அவரை எப்படி நாம் காங்கிரஸின் மாற்றாகக் கருத முடியும்?

ராமஜன்மபூமி பிரச்னையில் சற்று அதிகமாக மூக்கை நுழைத்தாலும், பி.ஜே.பி. யின் மற்ற பல தெளிவான உறுதியான அறிவுபூர்வமான கொள்கைகள் அதை ஈடுசெய்கின்றன.

ஏன் பி. ஜே. பி.க்கு ஒரு வாய்ப்பு அளித்துப் பார்க்கக் கூடாது?

— இரா. மன்மதன்,
இளங்கலை வணிகவியல் இறுதி ஆண்டு, ஸ்ரீ. எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி,
சாத்தூர் — 626 203.
காமராசர் மாவட்டம்.

குறைகளை மறந்து; நிறைகளை நினைந்து...

தி. மு. க. ஊழலே செய்யாத கட்சி என்று கூறி விட முடியாது. ஆனால் எந்தக் கட்சியில்தான் லஞ்ச — ஊழல் இல்லை? எல்லாரையும் பார்த்தாகி விட்டது! தி. மு. க. மலிவு விலையில் மதுவை மக்களுக்கு வழங்கியது தவறுதான். இது போல கொள்கை அளவில் தி. மு. க. பல தவறுகளைச் செய்துதான் இருக்கிறது. தி. மு. க. தலைவர்களிடம் சகிப்புத்தன்மை இல்லை என்பதும் உண்மை. சட்டசபை சம்பவங்கள், கறுப்புக் கொடிக்குச் செருப்படி போன்றவை உதாரணங்கள். ஆனால் மாற்றுக் கட்சி இதை விட மோசமாயிருக்கிறதே!

உலகளவில் போஃபர்ஸ் விவகாரத்தில் பெயர் பெற்ற ராஜீவ் காந்தி, புரட்சியே செய்யாமல் புரட்சித் தலைவியாகி விட்ட அ. தி. மு. க. தலைவி ஜெயலலிதா ஆகிய இருவரும் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டுள்ளனர். இரு தலைவர்களும் ஒரு விஷயத்தில் ஒன்றுபட்டு இருக்



கிறார்கள். அது, கட்சித் தொண்டர்களை நினையாமலும், மூத்த தலைவர்களை மதியாமலும் தான்தோன்றித்தனமாக முடிவெடுப்பது. இன்றைய இந்தியாவின் பிரச்னைகள் அனைத்திற்கும் வித்திட்டது இ. காங்கிரஸே. பஞ்சாப் பிரச்னை பாபர் — மசூதி பிரச்னை என்று எதை எடுத்தாலும் தீர்வு காணாமல் வளர விட்டதே இ. காங்கிரஸ்தான்.

இந்தக் கட்சியுடன் உறவு கொண்டுள்ள அ. தி. மு. க. தலைவர், ஜெயலலிதாவோ பொறுப்பற்றவர். அகம்பாவம் கொண்டவர் என்பதைப் பல முறை தமது பல செயல்களால் நிரூபித்திருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் என்று சொல்லிக் கொண்டு சட்டசபை நடவடிக்கையில் ஈடுபடுவதே கிடையாது. தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட போடித் தொகுதிப் பக்கம் சென்றது கூட கிடையாது. தமது தொகுதி மக்களின் பிரச்னை என்ன என்று கூடத் தெரியாத இவர், ஆட்சிக்கு வந்தால் பொறுப்புடன் நடந்து கொள்வாரா?

தி. மு. க. கட்சியிடம் சில குறைகள் இருந்தாலும் கடந்த இரண்டரை ஆண்டு ஆட்சிக் காலத்தில் தன் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டது! பள்ளி மாணவ மாணவியர்களுக்குச் சத்துணவுடன் முட்டை, பேருந்துகளில் இலவசப் பயணம், சீருடை, காலணி, உதவித் தொகை, கல்லூரி இளநிலை பட்டப் படிப்பு வரை இலவசம், பாடங்களைத் தமிழிலேயே நடத்த முயற்சி செய்வது, முதல் பட்டதாரி மாணவனுக்கு இலவசக் கல்வி போன்ற பல சலுகைகளை மாணவர்களுக்கு வழங்கி ஊக்கப்படுத்தியுள்ளது. அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று வாரத்தில் ஐந்து நாள் வேலை, சம்பள உயர்வு போன்ற சலுகைகளை அளித்தது. பெண்களுக்குச் சொத்துரிமை, முப்பது சதம் இட ஒதுக்கீடு, திருமண உதவி, விதவை மணம், தொடக்க நிலை ஆசிரியர்களாகப் பெண்களையே நியமனம் செய்தல் என்று பல திட்டங்களைக் கூறிக் கொண்டே செல்லலாம்.

இந்தக் கட்சி தேசிய அளவில் தேசிய முன்னணியுடன் தொடர்பு கொண்டுள்ளது. தேசிய முன்னணி மண்டல் கமிஷன் அறிக்கையைச் செயல்படுத்த முழுமூச்சுடன் போராடி வருகிறது. பிற்படுத்தப்பட்ட மக்கள் பெரும் பயன் அடைவார்கள். இந்தி எதிர்ப்புக்கு முழு ஆதரவாக இக் கட்சி விளங்குகிறது. இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்க்கத் தீவிர முயற்சி செய்து வருகிறது. மாநிலங்களுக்குச் சுய ஆட்சி, அதிக அதிகாரம் ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து போராடி வருகிறது. மாநில அரசுகளைத் தேவையில்லாமல் கலைக்கும் அரசியலமைப்பு 356 வது விதியைத் திருத்தத் தி. மு. க. முயற்சி செய்யும். மதவாத கட்சிகளை ஒடுக்க இக் கட்சி பாடுபட்டு வருகிறது. மதச்சார்பின்மைக் கொள்கையைப் பின்பற்றி அனைத்து மக்களுக்கும் நன்மை செய்கிறது. கட்சியில் அனைவருக்கும் மதிப்பு, மரியாதை தரப்படுகிறது. மூத்த தலைவர்கள் அச்சமின்றிக் கருத்துக்களை வெளியிட, விவாதத்துக்குப் பின் ஏற்கப்படுகின்றன. இக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தன் தவறுகளைத் திருத்திக் கொண்டு, மலிவு விலை மதுத் திட்டத்தை நீக்கி, மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்தி, மேலும் நன்முறையில் ஆட்சி செய்யும் என்னும் நம்பிக்கையுடன் அக் கட்சிக்கு வாக்களிக்க விரும்புகிறேன்.

— ஆர். கதிரேசன்,
அரசியல் அறிவியல், இளங்கலை
முதலாண்டு, அரசு கலைக் கல்லூரி,
கோவை — 18.

ஆட்சியைத் துறந்த கொள்கைப் பிடிப்பு!

'ஏன் என் வோட்டு தேசிய முன்னணிக்கு?' என்று கூறுவதைக் காட்டிலும், 'ஏன் என் வோட்டு மற்ற அணிகளுக்குக் கிடையாது' என்பதை முதலில் விளக்குவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

பி. ஜே. பி. ஒரு 'மதச்சார்பான' கட்சியாக நடந்து கொள்கிறது. இவ்வாறு வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அதன் நடவடிக்கைகள் இதனைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. ராம ஜென்ம பூமி பிரச்னையில் பி. ஜே. பி. யின் போக்கு மதத்துவேஷத்தைத் தாண்டுவதாகவே உள்ளது. நாளை இக் கட்சி ஆட்சிக்கு வந்தால் அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து விட்டு ராமர் கோவில் கட்ட நிச்சயம் முயற்சிகள் எடுக்கப்படும். இதன் விளைவாகத் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறுநேர்ந்திடும்.

நிலையான ஆட்சி தருவதாகக் கூறித் தேர்தல் களத்தில் குதித்திருக்கிறது காங்கிரஸ் அணி. கடந்த காலத்தில் பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்த காங்கிரஸ், நிலையான ஆட்சிதான் தந்தது. ஆனால் அது நாட்டிற்குச் செய்திருக்கும் நன்மைகளும் சேவைகளும் என்ன? ஊழலையும், லஞ்சத்தையும் நாட்டில் பெருக்கெடுக்க விட்டது; பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர் மற்றும் அயோத்தி ராமர் கோவில் பிரச்னைகளை ஆரம்பித்த உடனே தீர்வு காணாமல் ஆபத்துமிக்க பிரச்னைகளாக வளர விட்டது. இன்னும் நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். மேலும் காங்கிரஸ் கட்சியே ஒரு தனி மனிதரின் சர்வாதிகாரப் போக்கில் நடத்தப்படுகிறது. தமது கட்சியைச் சேர்ந்தவர்களிலேயே தமக்குப் பிடிக்காத முதலமைச்சர்களையும் மாநிலத் தலைவர்களையும் மாற்றி விட்டு வேறொருவரை நியமிப்பது காங்கிரஸ் கட்சித் தலைவரின் பொழுதுபோக்கு! தமக்குப் பிடிக்காத பிற கட்சி அரசுகளையும் சட்டப் பிரிவு 356 ஐப் பயன்படுத்திக் கலைப்பதே அவர் வாடிக்கை. எனவே நிலையான ஆட்சியைக் காங்கிரஸ் அணி தந்தாலும் திறமையான, தூய்மையான ஆட்சியை நிச்சயம் அதனால் தர முடியாது.

பதினோரு மாத காலமே ஆட்சி புரிந்தாலும் மிகத் தெளிவான, ஒரு சீரான ஆட்சியைக் கொடுத்துச் சென்றது தேசிய முன்னணி. எந்த ஒரு நிர்ப்பந்தத்துக்கும் கட்டுப்படாத முதுகெலும்புள்ள அரசாக நின்று, ஆட்சி நடத்தியது. உதாரணமாக, பாபர் மசூதியை இடித்து விட்டு ராமர் கோவில் கட்ட அனுமதி கொடு; இல்லாவிட்டால் அரசுக்குத் தரும் ஆதரவை விலக்கிக் கொள்வோம் என்று பி. ஜே. பி. மிரட்டிய போது அதனுடைய நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து விடாமல் சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்தது தேசிய முன்னணி அரசு. அதன் விளைவாக மந்திரி சபையே கவிழ்ந்து விட்டது! ஆயினும் தேசிய





முன்னணி கவலைப்படவில்லை. அது நினைத்திருந்தால் பி. ஜே. பி. யின் விருப்பத்துக்கு வளைந்து கொடுத்து ஆட்சியில் இருந்திருக்க முடியும். ஆனால் அதை விட கொள்கையையே முக்கியமாகக் கருதியது.

பதினொரு மாதகால ஆட்சியில் குறைகள் சில இருந்தாலும் மக்களுக்குப் பயன்படும் வகையில் பல திட்டங்களைக் கொண்டு வந்தது தேசிய முன்னணி. உதாரணத்துக்கு வானொலி, தொலைக்காட்சி போன்றவைகளுக்குத் தன்னாட்சி கொடுக்கும் மசோதா, பிற்படுத்தப்பட்டோரின் நல்வாழ்வுக்காக மண்டல் கமிஷன் அறிக்கையை நிறைவேற்ற முயன்றது ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஒருவருக்கு ஒரு பதவி என்ற கொள்கையில் தேசிய முன்னணி செயல்படுவது மிகவும் வரவேற்கத்தக்க நிலையாகும். தேசிய முன்னணியில் ஜனதா தளத்தைத் தவிர கம்யூனிஸ்டு, தி. மு. க. தெலுங்கு தேசம் போன்ற பலதரப்பட்ட கட்சிகள் அங்கம் வகிப்பதனால் அனைத்துத் தரப்பின் உரிமைகளையும் மதித்துத் தேவைகளையும் கவனிப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. மதச்சார்பின்மையுடன் செயல்படுவது தேசிய முன்னணி ஒன்றுதான். இப்படிப்பட்ட கட்சியே ஆட்சிக்கு வர வேண்டும். அப்பொழுதுதான் நாடு நலம் பெறும்.

— ஈ. முத்துக்குமார், இரண்டாம் ஆண்டு, ஆங்கில இலக்கியம், ந. க. ம. கல்லூரி, பொள்ளாச்சி — 642001.

நெருக்கடிகள் நீங்க நிலையான ஆட்சி!

பெரும் நெருக்கடிகளுக்கும், சவால்களுக்கும் மத்தியில் இந்தத் தேர்தல் வந்துள்ளது. வளைகுடாப் போரின் காரணமாக நாட்டில் ஏற்பட்டு விட்ட பொருளாதார நெருக்கடி தவிர, மும்முனைகளில் பிரிவினை சக்திகளுடன் நாம் போராட வேண்டியிருக்கிறது. தவிர, விலைவாசி உயர்வு, அன்னிய செலாவணிக் குறைவு போன்றவற்றால் சொல்லி முடியாத அளவு துன்பம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வு காணப்பட வேண்டுமென்றால், மத்தியில் ஒரு பெரும்பான்மைக் கட்சியின் ஆட்சிதான் வர வேண்டும்.





''உங்க மூணு பெண்ணையும் எப்படித்தான் கரை ஏத்தப் போறீங்களோ?''

''அதுக்கு ஏன் கவலைப்படுறே; நீச்சல் கத்துக் குடுத்துட்டாப் போச்சு!''

— ஞா. ஞானமுத்து.

நிலையான ஆட்சி மலர வேண்டும். அதை அகில இந்திய தேசியக் கட்சியான காங்கிரஸ்தான் அளிக்க முடியும்.

பல கட்சிகள் சேர்ந்து (மீண்டும்) ஆட்சியை அமைப்போம் என்பதெல்லாம் இறுதியில் ஆபத்தில்தான் முடிவடைந்திருக்கிறது. பிராந்தியக் கட்சிகளின் கூட்டணியான தேசிய முன்னணிக் கட்சி போஃபர்ஸ் பீரங்கி ஊழலை அம்பலப்படுத்துவதாகச் சொல்லித்தானே முன்பு ஆட்சியைப் பிடித்தது? சொன்னபடி செய்ததா? இல்லையே?

பாரதீய ஜனதா கட்சி ராமர் கோவில் பிரச்னையை வைத்துத்தானே கணிசமான இடங்களைப் பெற்றது. பிரச்னையைத் தீர்க்க முயன்றதா? இல்லையே? வளர்த்துத்தானே விட்டது?

ஆனால் காங்கிரஸ் கட்சி ஆரம்ப காலத்திலிருந்தே வலியுறுத்தி வருவது வறுமை ஒழிப்பு, விலைவாசிக் கட்டுப்பாடு, மதச்சார்பின்மை ஆகியவற்றைத்தான்.

எனவே, இப்போது இக்கட்டான கால கட்டத்தை அபாயமின்றி நாம் கடந்து செல்ல, நாட்டின் முன்னேற்றம், ஒற்றுமை, மதச்சார்பின்மை ஆகியவை முழுவதுமாகக் காக்கப்பட, வரும் தேர்தலில் மக்கள் அனைவரும் ஜாதி, சமய, மொழி வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு காங்கிரஸ் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்.

— கே. சிவஞானம், பி. எஸ். ஸி., பத்திரிகைத் துறை — பட்ட மேற்படிப்பு டிப்ளோமா, மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மாலைக் கல்லூரி, மதுரை — 2.

தனி மரங்கள் தோப்பாகும்!

வி. பி. சிங் குறுகிய காலமே பதவியில் நிலைக்க முடிந்தது. அதிலும் அவருடைய ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே அவருக்குப் பொழுதெல்லாம் போய் விட்டது. ஆனால் அதற்கிடையிலும் அவர் தந்த தேர்தல் வாக்குறுதிகளை நிஜமாகவே நிறைவேற்ற முயற்சி செய்தார். வானொலி மற்றும் தொலைக்காட்சிக்குத் தன்னாட்சி தருவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கினார். மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல்படுத்த முயன்றார். ராமஜென்ம பூமி விஷயத்தை முடிந்தவரை நாசுக்காகக்

கையாண்டார். ஒவ்வொரு பிரச்னையையும் அவர் அணுகிய விதத்தில் ஒரு முதிர்ச்சியைக் காண முடிந்தது. இவருக்கு ஐந்து ஆண்டுகள் ஆளக் கூடிய தனிப் பெரும்பான்மையைக் கொடுத்துப் பார்க்கலாம் என்று தோன்றுகிறது.

ஆனால் இந்த அடிப்படை தவிர களத்தில் நிற்கும் ஒவ்வொரு வேட்பாளரையும் தனித்தனியாக அலசுவதும் அவசியம். அரசியல் தரம் உயர வேண்டுமென்றால் கண்ணியமானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நல்ல ஆட்சி அனுபவமும், பண்பும் வாய்ந்தவர்கள் தோல்வியுறுவது நமது ஜனநாயகத்திற்கே இழுக்கு. கண்ணியமான ஒருவர் சுயேச்சையாக நின்றாலும் அவருக்கே என் வோட்டு. தனிமரம் தோப்பாக முடியாதுதான். ஆனால் பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் குறைந்தபட்ச ஒழுங்கையாவது உடையவர்களாக இருக்க வேண்டும் என்ற மரபை வாக்காளர்கள்தான் ஏற்படுத்த வேண்டும்.

— மு. செந்தில், மூன்றாம் ஆண்டு, கம்ப்யூட்டர் ஸைன்ஸ் மெப்கோ பொறியியற் கல்லூரி, அர்னாத்தூர் போஸ்ட், சிவகாசி — 626 005.

ஓடிக் களைத்த கன்று

இ. காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணிக்கே வாக்களிக்க விரும்புகின்றேன்! முக்கிய காரணம் தி. மு. க. மீதுள்ள வெறுப்பே! அதன் திராவிட மொழிப் பற்றுக்குத் தமிழகக் கடற்கரையை அண்டை நாட்டுச் சகோதரனுக்குக் குத்தகைக்குக் கொடுத்ததைச் சான்றாகக் கூறலாம்! நாளொரு கொள்ளையும், பொழுதொரு கொலையும் தலைநகரில் ஏ. கே. 47 முன்னிலையில் நடைபெற்றது. தமிழ் நாட்டில் துப்பாக்கி கலாசாரத்தைக் கொண்டு வந்த திராவிட நாகரிகத்தின் தன்மானச் சிங்கங்கள் இவர்கள்.

ஜனநாயக நாட்டிலே ஒரு குடிமகன் கறுப்புக் கொடி காட்டினால் கழகத் தலைவர்கள் செருப்பால் அடிப்பார்கள். அரசாங்கம் இத்தகையவர்களின் தலைமையின் கீழ் நடக்கும் சர்க்கஸ் கூடாரம். கழகத்தின் தோழமைக் கட்சியான திராவிடக் கழகமோ அநாகரீகமான கொள்கைகளைக் கொண்டுள்ளது. பூணூல் அறுப்பதும், குடுமிகள் கத்திரிப்பதும், மதங்களின் புனிதத்தைக் கொச்சைப்படுத்துவதும் இவர்களின் நடைமுறைக் கொள்கைகள்.

பெண்களைப் பொறுத்தவரை கழக அரசு காலம் ஒரு கற்காலம்! எதிர்க் கட்சியின் பெண் தலைவிக்கு ஏற்படுத்தப்பட்ட மானபங்கங்கள், கொலை முயற்சிகள், மேலும் பொதுவாகப் பெண்களைப் பற்றிய இழிவான மேடைப் பேச்சுகள் இவை பெண்களை வெறுப்படையச் செய்திருக்கும். மதுவிலக்கினை ரத்து செய்ததன் மூலம் பெண்கள் பலரின் மாங்கல்யத்தைக் கழற்றி அடகுக்கு வைத்து அழகு பார்த்தது தி. மு. க. விலைவாசி ஏற்றமும், நுகர்பொருள் தட்டுப்பாடும் மேலும் பெண்களை வெறுப்படையச் செய்திருக்கின்றன.

தி. மு. க. தேசிய முன்னணி கூட்டணி மக்களை ஜாதி, அடிப்படையில் பிளவுபடுத்துகிறது. இட ஒதுக்கீடு எனக் கூறி ஏமாற்றுகிறது.

அ. தி. மு. க. கட்சியானது ஓடிக் களைத்த கன்றைப் போல் உள்ளது. அனுபவம் பெற்று, பித்தம் தெளிந்து, பண்பட்டு உள்ளது. அராஜகம் அடங்கியுள்ளது. அ. தி. மு. க. வின் தலைமை நமக்கு மிகவும் புரியாத புதிராய்த் தோற்றமளிக்கலாம். ஆனால் அவருடைய இப்போதைய அரசியல் அணுகுமுறையானது சாதுரியமாகத்தான் இருக்கிறது. அ. தி. மு. க. அணியானது ஒரு தலைமையின் கீழ் வழிநடக்கத் தயாராய் உள்ளது. தமிழக இ. காங்கிரஸ், கோஷ்டிகளால் பாழடைந்து இருந்தாலும், அவர்களும் ராஜீவின் தலைமையின் கீழ வழிநடத்திச் செல்லப்படுகிறார்கள். கட்சியின் மாநில தலைமை எதிர்க் கட்சியாக நன்கு பிரகாசித்தது. எனவே நான் இ. காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணித் தலைமையின் கீழ் ஓர் அரசியல் மாறுதலைக் காண விரும்புகிறேன்

— எஸ். சிங்காரவேலு, பி. எஸ். ஸி., கணிதம், சுவாமிமலை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்.

மாணவ மணிகளின் வாதங்களைப் படித்தீர்கள். உங்கள் கருத்து என்ன? யாருக்கு உங்கள் வோட்டு? அருகே வெற்றிடத்தில் கட்சி அல்லது அணியின் பெயரை மட்டும் எழுதி உங்கள் விலாசத்துடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். குலுக்கல் முறையில் பத்து பேருக்குத் தலா ரூ. 25 பரிசு! முடிவு தேதி: மே, 2. உறை மேல் 'யாருக்கு வோட்டு' என்று குறிப்பிடுக.

என் வோட்டு:

பெயர்: ....

விலாசம்: ....

....

....

சொத்துக்களை விற்கிறீர்களா ?



என் எச் பி 9% கேபிடல் பாண்டுகளை வாங்குங்கள். நிலம், வீடுகள், பங்குகள், பிணையங்கள், நகைகள் போன்ற நீண்டகால சொத்துக்களை விற்று மூலதன இலாபத்திலே 100% வரி விலக்குப் பெறுங்கள். என்எச்பி 9% கேபிடல் பாண்டுகளினால் உங்களுக்கும் சரி, உங்கள் மூலதனத்திற்கும் பெருமளவு ஆதாயங்கள் உண்டு.

- உங்கள் முதலீடு ஆண்டொன்றுக்கு 9% வட்டி ஈட்டும். இது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும்.
- அல்லது முதலீடு செய்த தேதியிலிருந்து ரூ. 1000-க்கு ரூ. 240 என்னும் விகிதத்தில், முழு கால வரம்பாகிய 3 ஆண்டுகளுக்கும் தள்ளுபடியின் அடிப்படையில் முன் கூட்டியே ஆண்டொன்றுக்கு 9% என்னும் விகிதத்தில் வட்டியை பெற்றுக் கொள்ளவும் செய்யலாம். இதில் இடைக்காலமாகிய 3 மாதங்களுக்கான வட்டியும் முழுமையாக அடங்கும். அதனால் ஒரு நாளைய வட்டியைக்கூட நீங்கள் இழப்பதில்லை.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 54 E-ன் கீழ் மூலதன இலாப வரிக்கு விலக்குண்டு.
- வட்டித் தொகையின் மீது, அது வழங்கப்படும் நிலையில் வரி கழிக்கப்படாது.
- சொத்து வரி சட்டம் 1957, பிரிவு 5 (1)(xvi) மற்றும் 5(1A) இவற்றின் கீழ் ரூ. 5 இலட்சம் வரையிலான தொகைக்கு, இதர தகுதியுள்ள ஆஸ்திகளுடன் வரி விலக்கு உண்டு.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 80L-ன் கீழ் வட்டித் தொகைக்கு வரி விலக்கு உண்டு.
- இது சம்பந்தமான, செலுத்தும் செலவுகள் என் எச் பியைச் சார்ந்ததாகும்.
- நாட்டிலுள்ள 150க்கும் மேற்பட்ட இடங்களில் ஆண்டு முழுதும் விற்பனைக்கு இது கிடைக்கும்.
- வீடு கட்ட நிதியுதவி வழங்குவதில் நாட்டின் தலையாய நிறுவனமாகிய எமது முக்கிய குறிக்கோளே, அனைவரும் வீடு கட்ட வேண்டும். அதற்கான நிதியுதவியை அதிகரிக்க உதவ வேண்டும் என்பதே. ஆகையால் இதிலே முதலீடு செய்வதால், நாட்டில் பலர் வீடு கட்ட நிதியுதவி செய்த மன நிறைவும் கிடைக்கும்.

NATIONAL HOUSING BANK
YOU GAIN THE NATION GAINS
9% CAPITAL BONDS

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும்/ஏற்கப்படும் இடங்கள் : நேஷனல் ஹவுஸிங் பேங்க் அலுவலகங்கள் (பம்பாய் & டில்லி) • **கேன்ஃபினா அலுவலகங்கள்** • இந்த இஷ்யூவிற்கான 9 பாங்கர்களது, 51 இடங்களிலுள்ள 142, கிளைகள் : அலகாபாத் பாங்க், ஆந்திரா பாங்க், பாங்க் ஆஃப் பரோடா, கனரா பாங்க், விஜயா பாங்க் (சாகர் பவன், பம்பாய்), ஃபேர்க்ரோத் பைனான்ஷியல் சர்வீஸஸ், இந்தியன் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர் மற்றும் தி வைஸ்யா பாங்க் லிட்.

நேஷனல் ஹவுஸிங் பேங்க்


(ரிஸர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவினால் முற்றும் உடைமையாக்கப்பட்டது)

வீடு கட்டும் துறைக்கு புதிய பாதை வகுக்கிறது


3 வது மாடி, பாம்பே லைஃப் பில்டிங், அக்பரலீஸ் மென்ஸ் வேர், 45 வீர நரிமன் ரோடு, பம்பாய் 400 023. போன் : 222702, 224347

6 வது மாடி, இந்துஸ்தான் டைம்ஸ் ஹவுஸ், 18-20, கஸ்தூர்பா காந்தி மார்க், புதுதில்லி 110001. போன் : 3712016, 3712036

FORTUNE 45 Tam


சந்திரசேகர்
அத்வானி
வி.பி.சிங்
ராஜீவ்
தேர்தல் அறிக்கை
தேர்தல் அறிக்கை
தேர்தல் அறிக்கை
படிச்சுப் பாரேன்... உன்னோட எதிர் காலம் எப்படி ஜம்முனு பிரமாதமா அமர்க்களமா அட்டகாசமா இருக்கப் போவுது...!


இ.காங்கிரஸின் குற்றச்சாட்டு


கபடி... கபடி.... கபடி...
நாங்க ரெடி...
நாங்களும் ரெடி...



கல்கி



1991 ஏப்ரல் 28
மலர்: 49 இதழ்: 39
பிரஜோத்பத்தி சித்திரை 15

மலர்ந்தது தாமரை; பிறந்தது பெருமூச்சு!

"பாரதிய ஜனதா கட்சி தாமரைச் சின்னத்தைப் பயன்படுத்தலாமா கூடாதா என்ற வழக்கைத் தேர்தலுக்கு அப்புறம் விசாரித்துக் கொள்ளலாம்; இந்தத் தேர்தலைப் பொருத்தமட்டில் அவர்கள் தாமரைச் சின்னத்திலேயே போட்டியிடட்டும்' என்ற தேர்தல் கமிஷனரின் தீர்ப்பு வந்ததும் அத்வானி ஒரு நீண்ட நிம்மதிப் பெருமூச்சு விட்டதாக நாளிதழ்கள் கூறுகின்றன. அவரோடு சேர்ந்து தேசமே ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடத்தான் செய்தது! நிலைமை அப்படி நாளுக்கு நாள் கவலைக்கிடமளிப்பதாக மாறி வந்தது. உணர்ச்சிகள் கொந்தளித்து, விபரீதம் ஏதும் நிகழாதிருக்க வேண்டுமே என்ற அச்சம் மக்களிடையே பரவியது.

'அயோத்திக்கு ரதயாத்திரை சென்ற போது அத்வானி தாமரைச் சின்னத்தைத் தமது ரதத்தில் உபயோகித்தது தவறு' என்பது காங்கிரஸ் வாதம். 'அதன் மூலம் மதமாச்சர்யங்களை அரசியலில் புகுத்தி ஆதாயம் தேடுகிறார்' என்பது குற்றச்சாட்டு. 'அப்படி தாமரைச் சின்னத்தை மதச் சார்புள்ள காரியத்துக்குப் பயன்படுத்தியதால் தேர்தலின் போது அதைக் கட்சிச் சின்னமாக உபயோகிப்பது மதச் சார்புள்ள வாதங்களைத் தேர்தல் பிரசாரத்தில் புகுத்துவதாகவே ஆகும்' என்பது காங்கிரஸின் கருத்து.

சுற்றி வளைத்து மூக்கைத் தொடுகிறவாதமானாலும் மூக்கை எப்படியோ தொட்டு விட்டது எனபதும் உண்மைதான்! அதனால்தான் பி. ஜே. பி., இந்த வாதத்துக்கு நேரடியாகப் பதில் கூறாமல், 'சின்னம் பற்றிய விவகாரம் பி. ஜே. பி.க்கும் தேர்தல் கமிஷனுக்கும் இடையே உள்ள பிரச்னையே தவிர, காங்கிரஸ் என்ற மூன்றாவது தரப்பு இந்தப் பிரச்னையில் புக இடமில்லை' என்று தர்க்கம் புரிகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக ஏற்கெனவே சேஷன் அளித்த ஒரு தீர்ப்பையே முன்வைக்கிறது.

இதற்கு சேஷன் என்ன பதிலளிக்கிறார் என்றால், 'ஏற்கெனவே அளித்த ஒரு தீர்ப்பு அந்த வழக்குக்கு மட்டும்தான் செல்லுபடியாகுமே தவிர, இந்த வழக்கில் இதனுடைய பிரத்யேக அம்சங்களையொட்டித்தான் நான் முடிவெடுக்க இயலும். அப்படி பார்க்கும் போது, தாமரைச் சின்னம் பற்றிய தீர்ப்பை நான் இப்போது வழங்கவில்லை; அதற்கு முன்னதாகக் காங்கிரஸ் கட்சி தனது வாதங்களைத் தேர்தல் கமிஷன் முன் சமர்ப்பிக்கலாம் என்று அதை அனுமதிக்கும் அளவுக்குத்தான் முடிவெடுத்திருக்கிறேன்' என்கிறார்.

இதற்குத்தான் அத்வானியும் அவரது தோழர்களும் மறியல் பண்ணி, கைதாகி, உடனுக்குடன் விடுவிக்கப்பட்டும் இருக்கிறார்கள். 'சேஷன் காங்கிரஸின் கையாள்; அதனால் அவர் காங்கிரஸ் சார்பாகப் பேசுகிறார், நடந்து கொள்கிறார்' என்கிறார்கள்.

நல்லவேளையாகத் தேர்தல் கமிஷனர் சேஷனின் சமீபத்திய அறிவிப்பு, எல்லாச் சர்ச்சைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்து இருக்கிறது. "இது அரசியல் நிர்ப்பந்தத்தால் எடுக்கப்பட்ட முடிவா?" என்று சேஷனைக் கேட்டதற்கு அவர், "உண்மை என் வயிற்றுக்குள் ஜீரணமாகி விட்டது" என்று தொந்தியைத் தடவி இருக்கிறார். காரணம் எதுவானாலும் முடிவு சரியானது. தேவையற்ற சண்டை சச்சரவுகளுக்கு முடிவு கட்டியிருக்கிறது.

காங்கிரஸின் வாதங்களைக் கேட்டிருந்தாலும் சேஷனின் தீர்ப்பு பி. ஜே. பி.க்கு எதிராக இருந்திருக்கும் என்று திடமாகச் சொல்ல முடியாது. ஒருவேளை சாதகமாகவே அமைந்திருக்கவும் கூடும். மேலும், பி. ஜே. பி. கருதுவது போல் சேஷன் ஒருவேளை காங்கிரஸின் கையாளாக இருப்பின், அப்போது நிச்சயமாகத் தாமரைச் சின்னத்தை பி. ஜே. பி. தொடர்ந்து உபயோகிக்கவே அனுமதித்திருப்பார்! ஏனெனில், கட்சிச் சின்னம் மறுக்கப்பட்டால் மறுகணமே மக்கள் மதிப்பில் பி. ஜே. பி. விண்ணளாவ உயர்ந்து விடும்! புதிய சின்னத்தில் வோட்டுக்கள் குவியும்! இது காங்கிரஸ் அறியாதது அல்ல! ஆக, எல்லாமே அரசியல் நோக்கில் ஒரு கலாட்டா நாடகம்தானேயன்றி வேறில்லை!

ஒன்று மட்டும் நிச்சயம். முன்னாள் ஸி. ஏ. ஜி. யை (பிரதமகணக்காயரை) — கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவரை — தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்டு, நல்ல மரபுகளை மண்ணிலே புரட்டிய பி. ஜே. பி.க்கு, சேஷனை 'இந்திரா காங்கிரஸின் கையாள்' என்று வர்ணிக்க அருகதை இல்லை!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



* 'சிரிப்புச் சிறப்பிதழ்' சிந்தனையைத் தூண்டும் இதழாகவும் அமைந்தது.

சிரிப்பு இதழுக்குப் பொருத்தமாக, 'சிவகாமியின் சபதம்' தொடரும் இந்த வாரம் 'குண்டோதரன்' பாத்திரம் மூலம் கலகலப்பாக அமைந்தது மிகவும் வியப்பு!

இராணிப்பேட்டை, பேப்பர். கார்த்திக்.

* எலப்பாக்கத்தின் மண்வாசனை பாரதிராஜாவுக்குப் புரிந்ததோ இல்லையோ, நிச்சயம் எங்களுக்கு நெடி ஏறிப் போச்சு! ஆமாம் எலப்பாக்கத்தை நாங்கள் நேரில் போய்ப் பார்த்து விட்டு, வந்தது போலல்லவா இருந்தது கட்டுரையின் நயம்!

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

O அட்டையில் எங்கள் பாசத்துக்குரிய "ஜனகராஜ்" அவர்களின் நகை முக போட்டோவை வெளியிட்ட தங்களுக்கு நன்றிகள்.

மயிலாடுதுறை, கே. கணேசன்.

O சிரிப்புச் சிறப்பிதழின் ஒவ்வொரு பக்கமும் 'கல்கி'க்கு மெருகேற்றியது என்றால், ஆசிரியரின் கடைசிப் பக்கம், அமரர் கல்கிக்கு, இந்தப் பொன் விழா ஆண்டின் புகழாரமாய் விளங்கியது.

திருச்சி – 2, வெஸ்ப்பி.

O ஸ்ரீப்ரியா எழுதிய ஒரு வரியை வைத்துக் கொண்டு ஒன்றரைப் பக்கத்திற்குச் சிரிப்பு மழை பொழிந்த 'தமாஷ்வாலா'வின் கட்டுரையை ஸ்ரீப்ரியாவே கூடப் படிக்க நேர்ந்தால் மனம் விட்டுச் சிரிப்பார் என்பது சர்வ நிச்சயம்!

கும்பகோணம், எஸ். மங்களம்.

O கின்னஸ்ஸில் இடம்பெறாத துரதிர்ஷ்டசாலிகள் குறித்த கற்பனைச் செய்தித் தொகுப்பு சுவாரஸ்யமாக இருந்ததோடு, வித்தியாசமாகவும் இருந்தது. அவற்றையே யாராவது நிஜமாக்கினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை!

கொணவட்டம், கே. ஆர். தேவேந்திரன்.

O தலையங்கம் பிஜூ பட்நாயக் பேச்சை நியாயப்படுத்தினாலும் அவர் கூறியது தேச ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் இருந்தது என்பதைத் தாங்கள் எடுத்துக் கூறியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

திருத்துறைப்பூண்டி, க. ஜெயசுகந்தி.

வட்டமேஜை

O ஒவ்வொரு பத்திரிகையும் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு 'தேர்தல் கணிப்பு, தேர்தல் மதிப்பீடு' எனப் பல ஆதாரங்களுடன் கணித்துக் கொண்டிருக்கையில் உங்கள் தேர்தல் ஆட்டம் வித்தியாசமாக இருந்தது. 'உதய சூரியன்' வெற்றியே மக்கள் தீர்ப்பாகவும் மாறினால் இந்த ஆட்டம் 'தமிழ்நாட்டின் விளையாட்டாக' அறிவிக்கப்படலாம். (தேசிய விளையாட்டு ஹாக்கி என்பது போல்!)

திருச்சி, பொன். இரவிச்சந்திரன்.

O திரையில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் நடிப்பவர்களைத் தோலுரித்துக் காட்டி அதை நிஜமென நம்பும் அப்பாவி ரசிகர்களையும் கோடிட்டுக் காட்டிய நல்லதொரு சிறுகதை 'நடிப்பு'

திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

O அகிலா கார்த்திகேயனின் 'சிக்கனத்துக்காக ஒரு ஜி. ஓ!' என்ற சிறுகதை, தற்போது அரசு அலுவலகங்களில் நடந்து வரும் 'உண்மை நாடக'த்தினைப் படம் பிடித்துக் காட்டுகிறது. 'முத்துசாமி அந்த அலுவலகத்தின் கடைநிலை ஊழியர்களில் ஒருவன்தான். இருந்தாலும் மானேஜர் வரையிலான அனைத்து அலுவலர்களுக்கும் 'கடன்நிலை' வரும் போது கைகொடுத்து உதவுவதால்' என்ற வரி முற்றிலும் உண்மை! கதை வெகு ஜோர்...!

சங்கமங்கலம், பாலகிருஷ்ணன்ஜி.

O சுஜாதா எழுதிய 'சரளா' முழு நீள நாடகம் படித்தேன். ஒரே வீட்டில் பிறந்து ஒன்றாகவே வளர்ந்து ஆசைக் கனவுகளை உருவாக்கிக் கொண்ட அக்கா – தங்கை. ஒருத்தி அடக்கமான குடும்பப் பெண் என்று தன்னைக் காட்டிக் கொள்ள வெகுவாக பாடுபடுகிறாள். மற்றொருத்தியோ துணிந்து காதல் கணவனை எதிர்த்துப் போராடிச் சலிக்கிறாள். ஆண்களின் உள் மன வக்கிரங்களையும், பெண்களின் ஏக்கத் தவிப்புகளையும், சுஜாதா துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டி விட்டார். வேகஸ் கிளப்புகள் அனைத்திலும் இந்த நாடகத்தை அரங்கேற்றலாமே....

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

O சரளமான நடை...! இயல்பான வார்த்தைப் பிரயோகங்கள்...! 'சுஜாதா'வின் சரளா... உணர்ச்சிபூர்வமான, ஒப்பற்ற ஓரங்க நாடகம்.. நாடகமல்ல.. யதார்த்தம்! சாவித்திரியும், சரளாவும் எதிர் வீட்டில் இருப்பது போன்ற உணர்வு...

கோவை – 5, கலைக்கண்ணன்.

O எதையோ நினைத்துச் சிரிக்கும் மூப்பனாரின் சிரிப்பிற்கு நீர் எழுதிய அட்டகாசமான கமெண்டைப் படித்தால் மூப்பனார் என்ன... ராஜீவ்காந்தியே கூட சிரித்து விடுவார்!

சேலம் – 5, என். சுரேஷ்.

O தராசு பதிலில், 'தர்மதுரை, வசூலில் தர்மசங்கடதுரை' எனத் தவறாகக் கூறியுள்ளீர்கள். தர்மதுரை, நாற்பதுக்கும் மேற்பட்ட திரையரங்குகளில் ஐம்பது நாட்களைத் தாண்டி நல்ல வசூலுடன் ஓடியது. பல திரையரங்குகளில் நல்ல வசூலுடன் நூறாவது நாளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது. நடிப்பில் மட்டும் அல்ல, வசூலிலும் தர்மதுரைதான். தராசுதான் தமது பதில் மூலம், தர்மசங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்!

மதுரை – 10, டாக்டர். வி. பாலசுப்ரமணியன்



• வர்ஷாவுடன் வனஜா...

''மருத்துவ நிபுணர்களுக்கும் பெரும் சோதனையாக அமைந்த ஒரு ஆபரேஷன் பற்றி விவரிக்கிறார் டாக்டர் லக்ஷ்மி நாகராஜன். ''மருத்துவ சாதனை ஐம்பது சதம்; கடவுள் அருள் ஐம்பது சதம்'' என்கிறார்!




"கருக்கலைப்புக்குச் சம்மதிக்க முடியாது டாக்டர்!" "குழந்தைக்குப் பாலூட்ட நீ இருக்கணுமே அம்மா?"

வனஜா என்னிடம் வந்த போது அவளுக்கு வயது முப்பத்தாறு. தாமதமான திருமணம். கண்ணனுக்கும் அவளுக்கும் திருமணமாகி இரண்டாண்டுகளாகியும் குழந்தை பிறக்கவில்லையே என்ற ஏக்கம். எப்படியும் தாயாகி விட வேண்டும் என்கிற வெறி, வனஜாவின் உள்ளம் முழுதும் வியாபித்திருந்தது.

தாய்மைக்கு ஏங்கி வரும் பெண்கள் 'ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியான பிரச்னைகள், குறைகள். வனஜாவுக்கு என்னவாயிருக்கும்...? அவள் கணவனையும் அவளையும் சில பரிசோதனைகளுக்கு உட்படுத்தினேன். வனஜாவுக்கு டி அண்ட் சி செய்வதென்று முடிவாகியது. அப்போதுதான் அவளுக்குக் கடுமையான இதயக் கோளாறு இருப்பது எனக்குத் தெரிய வந்தது. சாதாரணமாகச் சிறு வயதில் தாக்கும் முடக்குவாதத்தால் (ருமாட்டிக் நோய்) படிப்படியாக இதயத்தின் வால்வு பழுதாகிப் பிற்காலத்தில் பெரிய அளவில் உபாதை தரும் இதய நோய். சுமார் இரண்டு வருடங்களாக இப் பிரச்னை இருந்து வருவதாகத் தெரிவித்தாள் வனஜா. இதய நோய் நிபுணர்களைக் கலந்தாலோசித்த போது, இதயத்தின் mitral valve பழுதாகியிருப்பதாகவும் valvotomy என்ற இதய

டாக்டர் லக்ஷ்மி நாகராஜன்



''ஆபீஸுக்கு போன் பண்ணாதே!''
''ஏன், வேலைக்கு இடைஞ்சலா இருக்கா?''
''ஊஹூம், நான் சீட்ல இல்லேங்கிறது ஆபீசருக்குத் தெரிஞ்சு போகும்.''
— கல்யாணி.

அறுவைச் சிகிச்சை செய்து valveவைச் செப்பனிட வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

நேபாளத்தில் வசித்த வனஜா, இதய அறுவைச் சிகிச்சைக்கு நாள் குறித்துக் கொண்டு, ஊருக்குப் போய், மீண்டும் சென்னை திரும்பத் தீர்மானித்தாள். டி அண்ட் சி பரிசோதனையை மட்டும் செய்து அவளுக்கு மலட்டுத் தன்மை இல்லை என்பதை உறுதிப்படுத்தினேன். இதய அறுவைச் சிகிச்சை முடியும் வரையில் கர்ப்பம் தரிக்கக் கூடாது; அது உயிருக்கே ஆபத்தாக அமைவதோடு கருவையும் பாதிக்கும் என்றும் எச்சரிக்கை செய்தனுப்பினேன்.

அடுத்து நான் வனஜாவைச் சந்தித்தது டிசம்பர் '89இல். அந்த மாதம்தான் அவளது இதய அறுவைச் சிகிச்சைக்குத் தேதி குறிக்கப்பட்டிருந்தது. அவளுக்குத் தெம்பும் தைரியமும் ஊட்டும் வகையில் பேச ஆரம்பித்தேன். வனஜா என்னை இடைமறித்துக் கூறினாள்:

''டாக்டர் நான் குளித்து மூன்று மாதங்களாகிறது....''

எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் வனஜாவைக் கோபித்துக் கொள்ளக் கூட நா எழவில்லை. வனஜா பிழைக்க வேண்டுமானால் குழந்தையை அவள் இழந்தே ஆக வேண்டும். கருக்கலைப்புக்குச் சிறிது தாமதமாகி விட்ட போதிலும் வனஜாவின் உடல்நிலை கருதி அதை வலியுறுத்தினேன்.

அவள் பிடிவாதமாக மறுத்தாள். ''டாக்டர்! எனக்கு இந்தக் குழந்தை வேண்டும்... கட்டாயம் வேண்டும்....''

''குழந்தையைத் தாலாட்டி, பாலூட்ட நீ இருக்க வேண்டாமாம்மா...? தாயில்லாத குழந்தையை விட்டு விட்டு... உன் கணவரின் கதியை எண்ணிப் பார்த்தாயா...?''

''என்னால் இந்தக் குழந்தையை இழக்க முடியாது டாக்டர்... என்றைக்கிருந்தாலும் நான் இதய நோயாளிதான். அப்படியிருக்கும் போது, நான் போய் விட்டாலும் என் கணவரின் ஆறுதலுக்குக் குழந்தையாவது இருக்குமல்லவா...?''

வாயடைக்கச் செய்த வாதம்! வனஜாவின் கணவர் கண்ணனும் எடுத்துச் சொல்லிப் பார்த்தார். ஆனால் வனஜா இம்மியளவும் தளரவில்லை; தன் முடிவில் உறுதியாக இருந்தாள்.

வனஜாவை எனக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியது அவளுடைய நாத்தனார் காமாக்ஷி. அவள் என் கைகளைப் பற்றிக் கொண்டு கண்ணீர் மல்க ''நீங்க தான் தெய்வம் போல இருந்து எங்க வனஜாவையும் அவள் குழந்தையையும் காப்பாத்திக் குடுக்கணும்'' என்று கெஞ்சிய போது, நான் செய்வதறியாது திகைத்தேன். பிறகு மெல்ல சுதாரித்துக் கொண்டு இறைவனைப் பிரார்த்தித்தபடி படிப்படியாக நடவடிக்கைகளில் இறங்கினேன்.

வனஜாவை இதய நோய் நிபுணர்களிடம் காண்பித்த போது Congestive Cardiac Failure என்கிற மூன்றாவது நிலையை அவள் ஏற்கெனவே எட்டிவிட்டிருந்ததாகக் கூறினார்கள். அதாவது, இதயம் சீராக ரத்தத்தைப் 'பம்ப்' செய்து வெளியேற்றாததால் படிப்படியாக அதன் வேலைப் பளு அதிகரித்து, செயலிழப்பின் விளிம்பில் இருந்தது. அறுவைச் சிகிச்சை மூலம் இந் நிலையைச் சீர்செய்திருக்க முடியும். ஆனால், குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்பதால் வனஜா அதற்கு ஒப்பவில்லை.

எனவே, இதய நோய்க்கான மருந்துகள், தொற்றுநோய்க் கிருமிகள் மூலம் தொண்டை அழற்சியோ, ஜுரமோ வராமல் காக்க பெனிஸிலின் மாத்திரைகள்; இதயம் சீராக வேலை செய்யாததால் நுரையீரலிலும் பழுது ஏற்படக்கூடும் என்பதால் அதைத் தவிர்க்க Digoxin,Diuretics போன்ற மருந்துகள்... என்று முன்னெச்சரிக்கையாக ஒரு மினி மருந்துக் கடையையே வனஜாவின் உடம்புக்குள் செலுத்த ஆரம்பித்தார்கள் இதய நோய் நிபுணர்கள். அவள் முழுக்க முழுக்க மருத்துவர்களின் கண்காணிப்பிலேயே இருந்து வந்தாள்.

கர்ப்பத்தின் ஏழாம் மாதம் மிகவும் சோதனையான மாதமாக இருக்கும் என்று எதிர்பார்த்தோம். இந்தக் காலகட்டத்தில் தான் தாயின் வயிற்றில் உள்ள குழந்தை கர்ப்பப் பையில் மேல் நோக்கித் திரும்புகிறது. (அதன் பிறகு மெல்ல அரை வட்டமடித்துத் தலை இறங்குகிறது) மேல் நோக்கித் திரும்பிய நிலையில் குழந்தை இருக்கும் போது தாயின் இதயத்தின் பேரில் அழுத்தம் அதிகரிக்கிறது.

எதிர்பார்த்தபடியே வனஜாவுக்குப் புதிய பிரச்னைகள் ஏற்பட்டன. இதய இயக்கம் பலவீனமடைந்திருந்ததால், அதிலிருந்து உடலின் பல்வேறு பகுதிகளுக்கு வெளியேற்றப்பட வேண்டிய ரத்தம் வேக

மாக வெளியேறவில்லை. அதனால் நுரையீரலில் சுத்திகரிக்கப்பட்டு இதயத்தை அடைந்த ரத்தம் தேக்கமடைந்து மெல்ல நுரையீரலுக்கே திரும்ப ஆரம்பித்தது. நுரையீரலின் பாரம் அதிகரித்து மூச்சுத் திணறல் ஏற்பட்டது. தினமும் ஆக்ஸிஜன் செலுத்துவதன் மூலமும் 'டையூரடிக்ஸ்' என்ற சிறுநீர் வெளியேற்றும் மருந்துகளை அதிகப்படுத்திக் கொடுத்ததன் மூலமும் ரத்த சுத்திகரிப்புப் பணியைச் சிறுநீரகங்களுக்கு அதிகப்படுத்தி, நுரையீரல் மற்றும் இதயத்தின் பளுவைக் கொஞ்சம் குறைக்க முடிந்தது.

இவ்வளவையும் மீறி வனஜா ஏழாவது மாதத்தில் இரண்டு முறை எமலோகத்தை எட்டிப் பார்த்துத்தான் திரும்பினாள் என்று சொல்ல வேண்டும்.

இத்தனை கலாட்டாவுக்கிடையிலும் கர்ப்பத்தில் இருந்த குழந்தையைக் கண்காணித்த போது, அந்தக் குழந்தை எந்தவித பாதிப்பும் இன்றிச் சரியான விகிதத்தில் வளர்ந்து வந்தது கடவுள் கிருபையால் தான்!

வனஜா மருத்துவமனையிலேயே இருந்ததால் பலவீனமான நிலையிலும் நோய்க் கிருமிகள் தாக்காமல் அவளைக் காக்க முடிந்தது. ஆனால் இதய நோய் நிபுணர்களும் சரி, அந்த மருத்துவமனைக்கு வந்த இதர டாக்டர்களும் சரி, என்னை வசைபாடித் தீர்த்தார்கள். 'இந்தக் கருவை ஏன் வளர விட்டாய்?' 'பேஷண்ட் கருக் கலைப்புக்குச் சம்மதிக்கவில்லையென்றால் பேசாமல் கேஸைக் கை கழுவி விட வேண்டியதுதானே!' 'பிழைக்கத் தெரியாதவள் நீ!' போன்ற விமர்சனங்களைத் தினம் தினம் கேட்டேன். கேட்கக் கேட்க எனக்குக் கலக்கம்தான் அதிகமாயிற்று. என் குடும்பமே வனஜாவின் நலனுக்கும் அவள் சிசுவின் வாழ்வுக்கும் பிரார்த்திக்க ஆரம்பித்தது.

ஒன்பதாம் மாதம் நெருங்கிய போது, சகலவிதமான நவீன வசதிகளும் உள்ள டிரினிடி மருத்துவமனைக்கு வனஜாவை மாற்றினேன். ஸ்கானிங் செய்து பார்த்ததில் குழந்தையின் தலை தாயின் குறுகலான இடுப்புப் பகுதி வழியே வெளிவர மிகவும் சிரமப்படும் என்று புலப்பட்டது. வனஜாவுக்கு வயது முப்பதைத் தாண்டி விட்டதால், கடினப்பட்டுப் போன இடுப்புப் பகுதி இயற்கைப் பிரசவத்துக்கு ஓரளவுதான் ஒத்துழைக்கும். சிசேரியன் செய்வது தவிர வேறு வழியே இல்லை. ஆனால் முற்றிய இதய நோயாளிக்கு சிசேரியன் செய்வதில் பெரிய ஆபத்து உள்ளது:

ஒரு பலவீனமான இதயம், இயற்கைப் பிரசவத்தின் படிப்படியாக அதிகரிக்கும் அழுத்த நிலைகளை ஒரு மாதிரி தாக்குப் பிடிக்கக் கூடும். ஆனால் மூன்றே நிமிடங்களில் முடிவடைந்து, வயிற்றுப் பகுதியின் அழுத்தத்தில் தடாலென்ற மாற்றத்தை ஏற்படுத்தும் சிசேரியனைத் தாக்குப்பிடிப்பது ஒரு பலவீன இதயத்துக்கு ரொம்ப சிரமம். மேலும், நச்சுக் கொடியைத் துண்டிக்கும் போது, குழந்தையின் உடலுக்கு இதுவரை சென்று கொண்டிருந்த ரத்தம் தாயின் உடலுக்கே திருப்பி விடப்படுகிறது. அப்போது ஏற்படும் ரத்த அழுத்த அதிகரிப்பையும் வனஜாவின் சூம்பிய இதயம் தாங்க வேண்டும். சாதாரணமாக, தண்டுவடத்தில் ஊசி குத்தி இடுப்புக்குக் கீழே மரத்துப் போகச் செய்து சிசேரியன் அறுவைச் சிகிச்சையை முடித்து விடலாம். ஆனால் வனஜா இதய நோயாளி என்பதால் தண்டுவடத்தில் மயக்க ஊசி போடுவது சில ஆபத்துகளை ஏற்படுத்தும். ஜெனரல் அனஸ்தீஷியா (முழு மயக்கம்) கொடுத்தாலோ சிசேரியன் அறுவைச் சிகிச்சையின் போது இதயமோ நுரையீரலோ மேலும் பலவீனம் அடைந்தால் அதன் அறிகுறிகளே தெரியாமல் கூடப் போய் விட வாய்ப்புண்டு.

டாக்டர். ஆர். எஸ். ராஜகோபால், டாக்டர். ஜே. ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் அடங்கிய இதய அறுவைச் சிகிச்சை நிபுணர் குழுவுடன் கலந்து பேசினேன். எல்லோருமே இதய அறுவைச் சிகிச்சையை (valvotomy) முதலில் செய்து விட்டு, பிறகு கையோடு சிசேரியன் செய்து விடலாம் என்று அபிப்பிராயப்பட்டனர். ஆனால் இவ்வாறு செய்வதால் குழந்தையை இழக்கும் வாய்ப்பு மிக அதிகம். வனஜாவுக்கு இது நியாயம் செய்ததாகாது. முழு மயக்க நிலையிலும் இதய இயக்கத்தையும் நுரையீரல் இயக்கத்தையும் கணத்துக்குக் கணம் கண்காணித்துப் படம்பிடித்துக் காட்டும் நவீன இயந்திரங்கள் அந்த மருத்துவமனையில் இருந்தன. அதனால் துணிந்து சிசேரியனையே முதலில் செய்ய முடிவெடுத்தேன்.

குறித்த நாளில், சிசேரியனுக்குச் சில மணி நேரங்கள் முன்னரே வனஜாவின் இதயத்தைக் கண்காணிக்க cardiac catheter பொருத்தினோம். மயக்க மருந்து நிபுணர் டாக்டர். ம. வி. ஸ்ரீநிவாஸன், வழக்கமான சிசேரியன் உதவியாளர்கள் தவிர, இதய அறுவைச் சிகிச்சைக்குத் தயாரான நிலையில் கிளவுஸ், கவுன், முகமூடி அணிந்த

''ஏம்பா, உனக்குப் படிக்கத் தெரியாதா?''

''எப்படிக் கண்டுபிடிச்சே?''

'''புல் தரையில் நடக்காதீர்கள்'னு போர்டைப் பார்த்ததும் அதன் மேலே நடக்காம போறியேன்னுதான் கேட்டேன்...''

— ஆர். வசந்தகுமார்.



டாக்டர். ஸ்ரீமதி. டாக்டர். ஆர். எஸ். ஆர்., டாக்டர். ஜே. ஆர். எஸ். காத்திருக்க, சிசேரியன் ஆபரேஷனைத் துவக்கினேன். சிசேரியன் முடிந்த கையோடு இதயத்தின் செயல்பாடு பாதிக்கப்படும் என்று எதிர் பார்த்தோம். உடனே இதய அறுவைச் சிகிச்சையும் செய்து வனஜாவைக் காப் பாற்ற முழு மூச்சுடன் முயற்சி செய்யவே இவ்வளவு ஏற்பாடு. இதய, நுரையீரல் 'மானிடர்'களைக் கண்குத்திப் பாம்பாகக் கண்காணித்தபடி ஒரு குழு நின்றிருக்க, சிசேரியனைச் செய்தேன்.

3.2 கிலோ எடையுள்ள அழகான பெண் குழந்தை! பிறந்ததும் அழுதது. நச்சுக் கொடி யைத் துண்டித்தேன். அவ்வளவுதான்! அடுத்த வினாடியே 'மானிடர்' கருவிகள் வனஜா அபாயத்தின் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டதை உணர்த்தின. இதய அறுவைச் சிகிச்சை குழு நெருங்கி வந்தது. வனஜாவின் நெஞ்சில் வகிடு போல் கிழிக்கக் கத்தி வைத்தது. கடவுளின் பேரில் பாரத்தைப் போட்டு விட்டுச் சில கணங் கள் கண்மூடி ஜபித்தேன்... பிரசவம் முடிந்த கையோடு உடல் உறுப்புக்கள் எல்லாமே சற்று நிலைமாறியிருக்கும் என்பதால் அந்தச் சமயத்தில் இதய அறுவைச் சிகிச்சை செய்வது மிகவும் கடினம் என்று தெரி யும்... கடவுள்தான் கைகொடுக்க வேண்டும்...

திடீரென்று வியப்புடன் கூக்குரல்கள் எழுந்தன. இதய இயக்கம் அபாய எல்லை யிலிருந்து விடுபட்டு சகஜ நிலைக்குத் திரும் பிக் கொண்டிருப்பதை மானிடர்கள் உணர்த்துவதாகக் கண்காணிப்புக் குழுவினர் சொன்னார்கள். இது கனவா? நனவா? என்று வியந்தபடியே சிசேரியனை முடித்தேன். குழந்தையைத் தாயிடமிருந்து அப்புறப்படுத்தி நர்சரி பிரிவுக்கு அனுப் பினேன்.

ஆபரேஷன் தியேட்டரிலிருந்து வெளிப் பட்டதும் சுற்றியிருந்த மருத்துவர்களும் சிப்பந்திகளும் என்னை அப்படியே தோளில் தூக்கி விட்டார்கள்! கலங்கிய கண்கள் வழியே வனஜாவின் குடும்பத் தாரைத் தூரத்தில் பார்த்தேன். வனஜாவின் சந்தோஷ முகம் மனத் திரையில் வந்து போயிற்று.

மூன்று நாட்கள் இன்டென்ஸிவ் கேர் பிரிவிலும் பின்னர் ஒரு வாரம் சாதாரண மருத்துவப் பிரிவிலும் இருந்த வனஜா 'பெற்றுப் பிழைத்து' வீடு திரும்பினாள். மூன்று மாதங்கள் கழித்து இதய நிபுணர் டாக்டர் சாலமன் விக்டர் அவளுக்கு இதயத் தில் valvotomy செய்தார். மகிழ்ச்சியான அந்தக் குடும்பம் சமீபத்தில் குழந்தை வர்ஷாவின் முதல் பிறந்த நாளைக் கொண் டாடியதென்றால் அதற்கு முதல் நன்றியைக் கடவுளுக்குச் சொல்ல வேண்டும். மருத்து வர்களும் நவீன மிஷின்களும் இந்த அற்புதத்தில் வகிக்க பங்கு ஐம்பது சதவிகிதம்தான்!

சின்னதம்பி

"**பெ**ண்களை ஒரேயடியாக வீட்டுக் குள்ளேயே கட்டிப் போட்டு விடவும் கூடாது. அதற்காக இஷ்டப்படி வெளியே சுற்றித் திரியவும் விடக் கூடாது" என்கிறார் கலக்ஷனா, ஒரு கட்டத்தில்.

கதையின் முடிச்சே அதுதான். முந்தைய குற்றத்தைச் செய்கிறவர் ராதாரவி (மெரு கேறிய முரட்டுத்தனம்). அதற்குத் துணை, அந்த முரட்டுத் தனத்தில் அவருக்குச் சற்றும் சளைக்காத அவருடைய இரண்டு தம்பிகள் (உதயப் பிரகாஷ், ராஜேஷ் குமார்). அப்படிக் கட்டுப்படுத்தி வைக்கப் படும் தங்கை குஷ்பூ, தன்னுடன் பழகும் வாய்ப்பைப் பெற்ற ஒரே ஆண் பிள்ளை யான பிரபுவைக் காதலித்து ரகசியமாகக் கல்யாணம் செய்து கொண்டு விட, ஏகப் பட்ட சிக்கல்களுக்கு அது காரணமாகி விடுகிறது.

குழந்தைத்தனமான சிரிப்பு, காணும் எதிலும் வியப்பை வெளிப்படுத்தும் பார்வை — இப்படி முன் பாதியில் உலா வருகிறவர் குஷ்பூ. அப்பாவிப் பிரபுவின் அண்மையினாலும் அவ்வப்போது நேரும் தற்செயல் ஸ்பரிசங்களினாலும் படிப்படி யாகப் பருவம் தன்னை வெளிப் படுத்திக் கொள்ள, அதன் விளைவாகத் தன் வசம் இழக்கும் கட்டங்களில் அவரிடம் வெளிப் படுவது மென்மை. முடிவுப் பகுதியில் அனைவரையுமே எதிர்த்து நின்று, பிரபு வைத்தான் கணவனாக வரித்து விட்டதைத் தெரிவிக்கும் போது ஆக்ரோஷம் புயலாகச் சீறுகிறது.

வெகுளித் தனத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறார் பிரபு. உலகமே இன்னதென்று தெரியாமல் உலாவரும் அவருக்கு அம்மாதான் (மனோரமா) ஆதாரம். அந்த ஆதாரத்தையே நிலை குலைய வைக்கும் ராதாரவியின் உச்ச கட்டச் செயலைக் கேள்விப்பட்டவுடன் அந்தக் குழந்தைத் தனமே எரிமலையின் கர்ப்பமாக உருமாறிக் கொந்தளித்து வெடித்துச் சீறி ராதாரவியையும் அவரு டைய சகோதரர்களையும் துவம்சம் செய்து விடுகிறது. பாடும் போது குழந்தைத்தனமும் பாயும்போது சீற்றமும் அவரிடம் பளிச்.

கண்ணீரும் கம்பலையுமாக வெண்ணிற ஆடை மனோரமா, என்றாலும் அளவுக் குள் அடக்கி உணர்ச்சிகளுக்கு மெருகேற்று கிறார்.

நகைச்சுவைப் பொறுப்பு கவுண்டமணி யினுடையது. மாலைக் கண் என்பதை வெளியே தெரியாமல் மறைத்துக் கல்யாணம் செய்து கொண்டு மனைவியுடன் அல்லாடு கிறார். கவுண்டமணியின் நடிப்பைத் தெரித்

தவர்கள் மற்றவற்றை ஊகித்துக் கொண்டு விட முடியும்.

இறுக்கமான திரைக்கதை — கட்டுக் கோப்பான நிகழ்ச்சிகள். பொறுப்பு: கதை, வசனம் எழுதி இயக்கியுள்ள பி. வாசு. அவர் வெற்றிக்குத் துணை இளையராஜா வின் இசை.

பெரிய தம்பி.

— ரி. ஆர். கே.



அமைதியைத் தேடி...



இனிமேலும் இங்கே இருக்க முடியாது. சதா நேரம் ஒரே கூச்சல். சப்தம். ராத்திரி அப்பாடா என்று ஷிப்ட் முடிந்து அறைக்கு வந்தால் தூங்க முடியாது. பாட்டு! காதை அதிரடிக்கும் பாட்டு! ''ஒண்ணு ரெண்டு மூணு நாலு அஞ்சு ஆறு'' இல்லாவிட்டால் விட்னி ஹியூஸ்டன்.

கிருஷ்ணமூர்த்தியிடம் ஒரு தடவை ஜாடையாகச் சொல்லியாகி விட்டது. கிருஷ்ணமூர்த்திக்கு ஏன் இந்த கஷ்டம் புரியவில்லை? சப்தமாய்ப் பாட்டு வைக்கும் போதும் இரைச்சலாய் மனைவியுடன் சண்டை போடும் போதும் வாசலில் உட்கார்ந்து பத்து பேர் கேட்கிற மாதிரி ரேடியோ வைக்கிற போதும் பிறத்தியாருக்கு இது கஷ்டமாக இருக்குமே என்று தோன்றாதா?

''லக்ஷ்மீ...''

காது போகிற மாதிரி இரைவார். பக்கத்துக் காம்ப்பௌண்ட் பாக்யலக்ஷ்மி கூட ஒரு தடவை எட்டிப் பார்த்திருக்கிறாள்! இரண்டு நாள் மகன் கூட இருந்து விட்டுப் போகலாம் என்று வந்த அம்மா சப்தம் தாங்க முடியாமல் வந்த அன்றைக்கே போய் விட்டாள்.

எல்லோரும் கிருஷ்ணமூர்த்தி இல்லாத நேரத்தில் முணுமுணுப்பார்கள். ''என்ன மனுஷன்யா இவன்'' என்பார்கள். நேரில் பார்த்தால் ''ஹலோ ஸார்... சௌக்யமா? இந்தப் பாட்டு என்ன படத்துல?'' என்று சிநேகமாய்ச் சிரிப்பார்கள்!

கொஞ்ச நேரம் நிம்மதியாய் எதுவும் படிக்க முடியாது. ஏதாவது எழுதவோ பாட்டு கேட்கவோ முடியாது. கிருஷ்ணமூர்த்தி வீட்டில் என்ன பாட்டு போடுகிறாரோ அதைத்தான் கேட்டாக வேண்டும்.

அடுத்த வாரம் நாடகம் போட வேண்டும் — எழுதலாம், என்று அறைக்கு வந்த

தமயந்தி

சங்கரனால் எழுத முடியவில்லை.

''என்ன முரளி இது... எங்க வீட்டில் சிறிசும் பெரிசுமா கத்தும்னு உன் அறைக்கு வந்தேன். இங்கே அதை விடப் பயங்கரமா இருக்கே.''

''என்ன செய்யறது சங்கரன்?''

''சொல்ல வேண்டியதுதானே?''

''சொல்லலாம் சங்கரன். அதுக்குத்தான் எதிர்த்த வீட்டு விஜயசேகரன்ட்ட சும்மா சும்மா ஏன் தொணதொணக்கறேன் சார். உங்களுக்கு இஷ்டமில்லைன்னா காலி பண்ணிடுங்கோனுட்டார். வேற எங்க இந்த வாடகைல கிடைக்கும் சங்கரன்? எல்லாத்தையும் சகிச்சிக்கிட்டுப் போக வேண்டியது தான். அவர் வீடு. நாமெல்லாம் வாடகை ஒட்டுங்கதானே...''

அறையைத் திறந்து வெளியே வர முடியாது. அவஸ்தை. ஆனாலும் இருநூறு ரூபாய் வாடகைக்குச் சென்னையில் வேறு இடம் கிடைக்காது. கூட கொஞ்சம் இருக்கும். ஆனால் நிம்மதியாக இருக்க முடியும். எனக்கென்ற இடமாய் எனக்கென்ற கதவுகளோடு...

கீழே கிருஷ்ணமூர்த்தி இரைந்து கொண்டிருந்தார். வேட்டியை மடக்கிக் கொண்டு நடு கிணற்றின் திண்ணையில் உட்கார்ந்து வீட்டைப் பார்த்துக் கத்தினார்.

''மனசுல பெரிய இவனு நினைப்பு உனக்கு. வேணும்னா நீ கடைக்குப் போய் வாங்கிட்டு வரணும். ஐயோ பாவம்னு வாங்கிட்டு வந்தவன்ட்ட 'இதென்ன பருப்பு இப்பித்திப்பியா'னு முகத்தைக் காட்டினால் சப்புனு முகத்துல எறிஞ்சிதான் பதில் சொல்வேன்.''

சொல்வார் — கத்துவார். ஆனால் எறிய மாட்டார்! லக்ஷ்மியிடம் இரைவாரே தவிர முரட்டு அடியெல்லாம் கிடையாது. இதையே அவர் சாந்தமாகச் சொல்லியிருக்கலாம். ஏழு குடித்தனம் இருக்கிற இடத்தில் நடுமுற்றத்தில் சாவகாசமாக உட்கார்ந்து கத்தியிருக்க வேண்டாம். லக்ஷ்மிக்கு இது பழகியிருக்க வேண்டும். இல்லாவிட்டால்

இத்தனை இயல்பாக அவரையே பார்க்க முடியாது.

முரளி உள்ளே வந்து கதவைச் சாத்திக் கொண்டான். சங்கரன் எழுத முடியாமல் உட்கார்ந்திருந்தான். டேபிள் லைட்டைப் போட்ட போது ஓமே இரைச்சல் குறைந்து பாட்டுச் சப்தம் கேட்டது. லவுட் ஸ்பீக்கர் வைத்தது போன்ற ஒலியில்!

"நேத்து ஒருத்தர ஒருத்தர பார்த்தோம்.



பாத்து ஒருத்தர ஒருத்தர மறந்தோம்.''

சட்டென்று கோபம் உச்சிக்கு ஏறியது. கீழே போய் "ஆஃப் பண்ணுய்யா" என்று டேப் ரெக்கார்டரை உடைத்துப் போடுகிற கோபம். புரியுமா கிருஷ்ணமூர்த்திக்கு இதெல்லாம்?

"சங்கரன்... தாங்க முடியலை."

"வேற இடம் பார்ப்போமா? நந்தனத்துல எங்கப்பா நண்பர் வீட்ல ஒரு ரூம் இருக்காம்."

"நாளைக்குப் பார்ப்போம் சங்கரன்."

"வாடகை இதை விட கூட இருக்கும் முரளி."

முரளி ஜன்னல் வழியாக வானத்தை வெறித்தான்.

"அது கூடப் பரவாயில்லை சங்கரன்" என்றான்.

வேறு வீடு பார்த்தால் எப்படியும் நானூறு ரூபாய் ஆகி விடும். பரவாயில்லை. எப்படியும் சமாளிக்க வேண்டும். இனி இருநூறு ரூபாய் போல் வாடகை கூட கொடுக்க வேண்டியிருக்கும். அம்மாவுக்கு அனுப்புகிற பணத்தில்தான் கொஞ்சம் பிடிக்கும். நல்ல இடம் என்று எழுத வேண்டும்.

முரளி சாயங்காலம் ஆபீஸ் முடிந்ததும் சங்கரனோடு போய் வீடு பார்த்தான். மரக்கட்டை படி. சில இடங்களில் உளுத்து இருந்தது. மேலே அக்பர் வாழ்ந்த காலத்து அறை. ஓலையால் டெரஸிலேயே பாத்ரூம் கட்டி இருந்தார்கள். கிருஷ்ணமூர்த்தி வீட்டில் பொது பாத்ரூம். க்யூவில் நின்று நின்றே ஜீவன் போய் விடும். அதற்கு இது பரவாயில்லை.

வீட்டுக்காரர் பெரிய மீசையோடும் தடிமனான கண்ணாடியோடும் மேலும் கீழுமாய்ப் பார்த்தார்.

"பிடிச்சிருக்கா?"

"ம். வாடகைதான்..."

"சங்கரன் சொன்னானேன்னுதான் உங்களுக்குக் கொடுக்கறேன். ஐந்நூறு கொடுக்கவே ஆள் ரெடியாயிருக்கு."

கறாராய்ப் பேசி விட்டுத் திரும்பிக் கொண்டார். பின்வாசலில் கொலுசு அணிந்த பெண்ணின் கால் திரைச் சீலைக்கு அடிவழியாய்த் தெரிந்தது.

"ரூம்ல ஆணி அடிக்காதீங்க. வீட்டுக்குள்ள கறி மீன் சாப்பிடக் கூடாது. காலைல ஏழு மணிக்கு மேலதான் கீழே வரணும்."

சங்கரன் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

"ஏன் அங்கிள்?"

"கீழே வீட்ல உள்ளவங்க குளிச்சிட்டிருப்பாங்க."

"வர மாட்டேன்."

எல்லாவற்றுக்கும் ஒத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அந்த சப்த நரகத்திலிருந்து விடுபட்டால் போதும். இப்போதெல்லாம் தொடர்ச்சியாய்த் தலை வலிக்கிற மாதிரி இருக்கிறது.

வெளியே வந்ததும் சங்கரன் ஆச்சர்யப்பட்டான்.

"என்ன முரளி... எல்லாத்துக்கும் சரின்னு சம்மதிச்சிட்டே?"

"நீ கிருஷ்ணமூர்த்தி வீட்ல இருந்து பார்த்தா தெரியும் சங்கரன். இருபத்து நாலு மணி நேர வேதனை. காலைல நாலு மணிக்கே பாட்டுச் சப்தம் ஆரம்பிச்சிடும். ராத்திரி பன்னிரெண்டு வரை டி.வி... கடவுளே! எப்ப வெளியே வருவோம்னு இருக்குது."

அறைக்கு வருகிற வழியில் மனத்தில் ஆயிரம் கேள்விகள். எப்படி வாடகையைச் சமாளிக்க? புத்தகம் வாங்குவது, சினிமா போவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். கிருஷ்ணமூர்த்தியை விட்டுப் போனால் போதும். அந்த இரைச்சல், கத்தல், நிம்மதியில்லாத சூழ்நிலை, தலைவலி... இதெல்லாம் இல்லாமல் இருந்தால் கோடி சுகம். ஸ்வர்க்கம்.


வழக்கம் போல் கிருஷ்ணமூர்த்தி நடு முற்றத்தில் உட்கார்ந்திருந்தார். வீடு காலி பண்ணப் போவதைச் சொன்னதும் நிமிர்ந்து பார்த்தார்.

"ஏம்ப்பா?"

"அங்கிருந்து ஆபீஸ் கிட்டத்துல..."

பொய். சுத்தப் பொய். கிருஷ்ணமூர்த்தி உன் சப்தங்களிலிருந்து விலகத்தான் போகிறேன். என்னால் இருக்க முடியவில்லை.

கிருஷ்ணமூர்த்தி தலையசைத்தார். வேறொன்றும் சொல்லாமல் அட்வான்ஸைக் காலையில் கொடுத்து விடுவதாகச் சொன்னார். இவர்களை விட்டு விலகி... இந்த சப்தம், மனிதர்களை மறந்து — புது உலகத்தில்... நினைக்கவே மனத்தில் பறவை சிறகை விரித்துப் பறந்தது.



"கொஞ்ச நாள் முன்னால நம்ம அமைச்சர்கிட்ட 'அரசியல் ஒரு சாக்கடை'ன்னு சொன்னது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"அரசியல் சாக்கடைக்கு வடிகால் வசதின்னு சொல்லி ரெண்டு லட்சரூபா ஊழல் செய்துட்டார்."

— க. வேங்கடேசன்.

பட்டோபட்டு பொன்பட்டு மேனிக்கு



ரெக்ஸோனா

தூய தேங்காயெண்ணெய் செறிந்தது.



மென்பட்டு மேனி காக்க எளிய குறிப்புகள்

டாக்டர் பாரதி ஷா

கே : மங்கலான சோர்வான சருமத்தை, புது மலர்ச்சி பெறச் செய்யும் ஒரு மருந்து சொல்லுங்கள்.

ப : மோர் இரவு முழுவதும் இருக்கட்டும். காலையில் தயிரிலிருந்து நீர் பிரிந்துவிடும். இந்த நீரைவடித்து பாட்டிலில் அடையுங்கள். அதை ரெஃப்ரிஜெரேட்டரில் வைக்கவும். அதில் பஞ்சு உருண்டையை நனைத்து. அன்றாடம் ஒரு முறை முகத்தில் ஒத்தவும். அதை 10 நிமிடங்களுக்கு வைத்திருந்து பிறகு கழுவவும். இந்த மருந்தை ஒரு வாரத்திற்கு வைத்துக் கொள்ள முடியும்.

கே : எனது சருமம் எண்ணெய்ப்பசையுள்ளது. அதைக் கட்டுப் படுத்துவதற்கான பொருள் ஒன்றைக் கூறுங்கள்.

ப : சம அளவிலான எலுமிச்சஞ் சாறு மற்றும் வெள்ளரிச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தக்காளிச் சாற்றைக் கலக்கவும். அதை முகம் மற்றும் கழுத்து முழுதும் தடவவும். 15-20 நிமிடங்களுக்குப் பின்பு அதை கழுவவும். மேற்கண்ட கலவையும் தவறாமல் உபயோகிக்கவும்.

கே : நாள் முழுதும் வேலை செய்தபின்பு மாலையில் எனது சருமம் தூசி படிந்தும் பிசுபிசுப்பாகவும் இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?

ப : உங்கள் முகத்தை தினமும் 4 முதல் 5 முறை மென்மையான சோப்பினால் (குறிப்பாக கோடையில்) கழுவவும். ஒரு தேக்கரண்டி உவர் மண், ஒரு மஞ்சள் துண்டு, சில துளசி இலைகள் ஆகியவற்றை நீருடன் சேர்த்து அரைத்து பசை போலாக் கவும். பின்பு அதை முகத்தில் சீராக தடவவும். 20 நிமிடங்களுக்குப் பின்பு கழுவவும். இது உங்கள் சருமத்திற்கு புத்துயிரூட்டுகிறது. சருமத்தை சுத்தம் செய்கிறது.

கே : எனது மூக்கிலே நிறைய கருப்பு புருக்கள் உள்ளன. இதைப் போக்குவதற்கு சுலபமான வழி என்ன?

ப : மென்மையான சோப்பினால் உங்கள் முகத்தை நன்கு கழுவவும். ஒரு பஞ்சுருண்டையை குளிர்வான காய்ச்சாத பாலில் நனைத்து அதை மூக்கில் தடவவும். சூடான நீரில் ஒரு துண்டை நனைத்து முகத்தில் ஒத்தவும். இதை போல் 3-4 தடவை தொடரவும். பின்பு புருவை மெதுவாகப் பிதுக்கவும். பின்பு ஒரு பஞ்சை யூ-டி-கோலோனில் நனைத்து அதை, மூக்கிலே மெதுவாக தடவவும். இதைத் தொடர்ந்து எலுமிச்சஞ் சாற்றை தடவவும். அது உலர்ந்ததும் கழுவவும். மாதம் ஒரு முறை இவ்வாறு செய்தால் சிறந்த பலன் கிடைக்கும்.

கே : எனது முழங்கை, முழங்கால், கணுக்கால் ஆகியவை மிகவும் சொர-சொரப்பாக உள்ளன. இதற்கு நிவாரணம் என்ன?

ப : முழங்கை, முழங்கால், கணுக்கால் ஆகியவற்றை சுற்றியுள்ள சருமத்தை வழ வழப்பாக்குவதற்காக, சருமத்தின் மீது பழுத்த பப்பாளித் துண்டை தேய்க்கவும். பப்பாளியில் உள்ள பெப்பின் என்ற பொருள் சருமத்தை மென்மையாக்கும். அழிந்த அணுவை நீக்கவும்.

கே : என் கண்ணைச் சுற்றிலும் கருப்பு வளையங்கள் உள்ளன. அவை என் தோற்றத்தை கெடுக்கிறது. அதற்கு வழி?

ப : நன்றாக உறங்க வேண்டும். அத்துடன் ஆரோக்கியமான உணவு சாப்பிட வேண்டும். கண்ணைச் சுற்றிலும் முட்டைக் கோஸ் சாறு (துருவுதல் மற்றும் பிழிதல்) மூலம் தேய்த்துக் கொடுக்க வேண்டும். காய்ச்சாத பாலில் பஞ்சை நனைத்து கண் மீது வைக்கவும் 10-15 நிமிடங்களுக்குப் பின் எடுக்கவும்.

கே : என் பாதங்களில் பித்தவெடிப்பு அருவருப்பாக உள்ளது. அதை எப்படிப்-போக்குவது?

ப : இரவில் படுக்கைக்குச் செல்லும் முன், பித்தவெடிப்பில் சூடான தேங்காய் எண்ணெய் தடவிப் படுக்கவும். இரவில் சாக்ஸ் அணிந்து கொள்ளவும். காலையில் பாதங்களை சுடுநீரில் 15 நிமிடங்கள் வைத்திருக்கவும். பழைய டூத் பிரஷ் மூலம் பித்த வெடிப்பை மெதுவாக தேய்த்துக்-கொடுக்கவும். இதை தவறாமல் 10 நாட்களுக்கு தொடரவும்.

கே : கைகளில் சுருக்கம் விழுந்திருப்பதை எப்படி சரியாக்குவது?

ப : எப்போதுமே பாத்திரங்கள் துலக்கும்போது ரப்பரினாலான கையுறைகளை அணிந்து கொள்ளுங்கள்.

கீழ்க்கண்ட க்ரீமை உங்கள் கைகளில் குறிப்பிட்ட இடைவெளிகளில் தேய்த்து கொடுக்கவும்.

ஒரு தேக்கரண்டி வெண்ணையை குறைந்த நெருப்பில் உருக்கவும். அதில் சம அளவிலான கிளிஸரின் சேர்க்கவும். அதை நன்கு கலக்கி ஒரு புட்டியில் நிரப்பவும்.

அதை தினமும் 3-4 தடவை தாராளமாக தடவுங்கள்.

வாசகர்கள் தங்கள் கேள்விகளை அனுப்பவும் இம் முகவரிக்கு:

Rexona
P.O. Box 758 Bombay-1.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

அடுத்த நாள் விடிகாலையில் கிருஷ்ணமூர்த்தி தூக்கத்திலேயே இறந்து போனார். மாரடைப்பு என்று டாக்டர் சொன்னார். காலையிலேயே எல்லா போர்ஷன்களும் பரபரப்பாயின. ஆனாலும் அங்கே ஒரு நிர்சலனம். கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் புதுசாய் ஒரு தேஜஸ் கூடியிருந்தது. அவருக்காக நிஜமாகவே மனசு அழுதது. வேறு எந்த விரோதமும் அவரிடம் இல்லை. சப்தம் மட்டும்தான். இன்றைக்குச் சப்தம் அடங்கிக் கிடக்கிறார்! சாயங்காலமாய் அவரை எடுத்துப் போகும் போது கண்ணில் நீர் கட்டிக் கொண்டது.

லக்ஷ்மி வெளியே வரவே இல்லை. அந்த கிணற்றடி அவனுக்குக் கிருஷ்ணமூர்த்தியை ஞாபகப்படுத்தும். வெறும் பறவைகளின் இரைச்சலும் இலைகளின் சப்தமும் தவிர வேறு ஒன்றும் இல்லாமல் 'கேம்பஸ்' கிடந்தது. பஸ்ஸே போகாத ரோடு மாதிரி அமைதி.

ஆபீஸ் போகக் கீழே இறங்கின போது கிருஷ்ணமூர்த்தியின் மகன் கூப்பிட்டான்.

''அம்மா கூப்பிடுறாங்க சார்.''

உள்ளே இருட்டாயிருந்தது. ஜன்னல் அத்தனையும் மூடிக் கிடந்தது. லக்ஷ்மி ஓரமாய் உட்கார்ந்திருந்தாள். முரளியைப் பார்த்ததும் பக்கத்திலிருந்த பெட்டியைத் திறந்தாள். அட்வான்ஸாய்க் கொடுத்த பணத்தை நீட்டினாள்.

''அன்னைக்கு ராத்திரியே எடுத்து வச்சிட்டார். எனக்குத்தான்... மறந்திடுச்சி. மன்னிச்சிடுங்க.''

வேறொன்றும் அவளிடம் பேச முடியவில்லை.

கிருஷ்ணமூர்த்தி இறந்ததைக் கேள்விப்பட்டுச் சங்கரன் அறைக்கு வந்தான்.

''நம்பவே முடியலையேடா. கல்லு மாதிரி இல்லே இருந்தார்.''

அங்கு நிலவிய அமைதியைப் பார்த்து ஆச்சர்யப்பட்டான்.

''நீ இங்கேயே இருந்துடேன் முரளி? ஏன் வீணா கூட நூத்தம்பது, இருநூறு கொடுக்கிறே? இப்பத்தான் கிருஷ்ணமூர்த்தி கூட இல்லையே...''

முரளி ஜன்னல் வழியாய் வானத்தை வெறித்தான். வெளியே ஒரு சிட்டுக்குருவி கிணற்றடியில் தண்ணீர்த் தொட்டியில் மூங்கி 'கிரீச்' என்று சப்தமிட்டது. வேப்ப மர இலைகள் 'சரசர'வென்று அசைந்தன.

''அங்க வாடகை கூட இல்லே முரளி?''

முரளி ஜன்னல் கம்பிக்குள் முகத்தை இறுக்கிக் கொண்டான். முகத்தசை லேசாக வலித்தது.

''பரவாயில்லே சங்கரன்'' என்றான்.

அந்தச் சிட்டுக்குருவி சட்டென்று சிறகை விரித்துப் பறந்தது. தண்ணீர் மட்டும் கொஞ்ச நேரம் சலசலத்துக் கொண்டிருந்தது. பிறகு அசையாமல் நின்றது... மௌனமாக, அமைதியாக.



பெட்டிக் கடை பங்காருவின் தேர்தல் பயங்கள்

விஷ்ராம்

தேர்தல் வரப் போகிறது என்றதும் எங்கள் தெருவில் பங்குக் கடை (பெட்டிக் கடை) வைத்திருந்த பங்காருவுக்கு வயிற்றைக் கலக்க ஆரம்பித்துவிட்டது. கண்களில் சதா ஒரு மிரட்சி. பயம். இரண்டே நாளில் மனுஷன் கவலையில் துரும்பாய் இளைத்து விட்டார்.

''ஏன் பங்காரு இப்படி ஆகிவிட்டீர்கள்?'' என்று அவரை விசாரித்தேன்.

''தேர்தல்னா உங்களுக்கெல்லாம் தெரியாதுங்க. எல்லாக் கட்சிக்காரர்களும் நிதி வசூலுக்கு வந்துடுவாங்க. கொடுத்துக் கட்டுப்படி ஆகாதுங்க. கொடுக்கலைன்னா, இங்கே கடையே இருக்க முடியாதுங்க.'' பங்காரு பொலபொலவென்று கண்ணீரைக் கொட்டினார்.

ஆனால் அடுத்த தெருவில் இவர் மாதிரியே பங்குக் கடை வைத்திருக்கும் கபாலி மட்டும் சிரித்த முகத்துடன் இருந்தார். தேர்தல் என்றதும் அவர் முகம் பேயறைந்த மாதிரி ஆகவில்லை. விழியில் மிரட்சி இல்லை.

''உங்கள் அமைதியின் ரகசியம் என்ன?'' என்று கபாலியைக் கேட்டேன்.

கபாலி சொன்னதை அப்படியே தருகிறேன். தேர்தல் சமயத்தில் எல்லாக் கடைக்காரர்களுக்கும் பயனுள்ளதாயிருக்கும்.

கபாலி சொன்னார்:

''சார்,.. நம்ம நாடு ஜனநாயக நாடு; அடிக்கடி தேர்தல் வந்துகினுதான் இருக்கும். புதுசில்லே. பல கட்சிகள் இருக்கும். தொண்டர்கள் தினுசு தினுசாக வருவாங்க. தேர்தல் நிதி வசூலிப்பாங்க. நாம கொடுத்துத்தான் ஆகணும். அப்பத்தான் ஜனநாயகம் செழிக்கும்.

இதெல்லாம் நமக்குத் தெரிஞ்ச விஷயம் தானே? ஏதோ புதுசா நடக்கிற மாதிரி திமுர்னு பயப்பட்டா எப்படி? நான் முன் யோசனைக்காரன். மேஜைக்கு உள்ளே பார்த்தீங்களா? ஒரு உண்டியல் வெச்சிருக்கேன்.

''தினமும் தவறாமல் இந்த உண்டியலிலே பத்து ரூபாய் போட்டுடுவேன். வருஷத்துக்கு ரூ. 3650 சேர்ந்துடும். ரெண்டு வருஷத்துக்கு ஏழாயிரத்து முந்நூறு ரூபாய் எப்படியும் நம்ம நாட்டிலே இடைத்தேர்தல் அது இதுன்னு ரெண்டு வருஷத்துக்கு ஒரு தேர்தல் வந்துடுது.

''தமிழ்நாட்டிலே பெயர் சொல்லிக்க நாப்பலே எட்டுக் கட்சிகள் இருக்குன்னு வையுங்க. தேர்தல்னு அறிவிச்சவுடனே கட்சிக்கு இவ்வளவுன்னு என் தேர்தல் நிதியைப் பிரிச்சு வெச்சிடுவேன். ரொம்ப மிரட்டற கட்சிக்கு மூவாயிரம், அதைவிடக் கொஞ்சம் குறைவா மிரட்டறவாளுக்கு ரெண்டாயிரம், அப்புறம் அனுதாபக் கட்சிக்கு ஆயிரம்... இப்படி என் பகுத்தறிவை உபயோகப்படுத்திப் பங்கு போட்டு வைச்சுப்பேன்.

''கும்பலாகத் தொண்டருங்க நிதி வசூலுக்கு வந்தவுடனே, மலர்ந்த முகத்தோட, 'வாங்க அண்ணாச்சி. இந்தாங்க. ஐந்நூறு' என்று ஐந்நூறைத் தருவேன். முக்கியமாகக்

நடந்தது நடந்தபடி...

●● 'தாட் பூட்'டென்று அதிகாரத்தை வெளிப்படுத்துவதில் பிரசித்திபெற்ற டி. என். சேஷன், பதவி ஏற்ற முதல் நாள், தேர்தல் கமிஷன் காரியாலயம் அமைந்துள்ள கட்டிடத்துக்குள் கிடுகிடுவென்று நுழைந்தார். அதிகாரிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என விளக்கி மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தார். பத்து நிமிஷம் யாரும் வாய் திறக்க முடியவில்லை. கடைசியில், ''ஏதாவது சந்தேகம் இருக்கா?'' என்று கேட்டார் சேஷன். அப்போதுதான் ஒருவர் தைரியத்தைத் திரட்டிக் கொண்டு,

''ஒரே ஒரு சந்தேகம்; தேர்தல் கமிஷன் காரியாலயம் மூணாவது நாலாவது மாடி; இது முதல் மாடி என்பது உங்களுக்குத் தெரியுமா சார்?'' என்றார்!

சொன்னது சொன்னபடி...

●● ''இன்றைய பிரதம மந்திரிக்கு ஒரு பெரிய சௌகரியம். நம்முடைய படுமோசமான பொருளாதார நிலைக்கு அவரை யாரும் குற்றம் குறை சொல்லவே முடியாது!''

— முன்னாள் ரிஸர்வ் வங்கி கவர்னர் ஐ. ஜி. பட்டேல்.

●● ''சென்ற முறை நான் இங்கு வந்த போது டீ. வி. வேண்டும் என்று கேட்டீர்கள். இப்போது பருப்பு கூட உங்களால் வாங்க முடியாத நிலை! பதினைந்து மாதங்களில் நீங்கள் எவ்வளவு தாழ்ந்து போய் விட்டீர்கள் என்பதை யோசித்தீர்களா?''

— ராஜீவ் காந்தி ராஜஸ்தான் கிராமப்புறங்களில் தேர்தல் பிரசாரம்.

●● ''தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் முதல் அமைச்சராக வருவதா, வேண்டாமா? அதற்கு ஆதரவு எவ்வளவு? எதிர்ப்பு எவ்வளவு? என்பதை அறியும் ஒரு திமர் கணிப்புதான் இந்தத் தேர்தல்!''

— டாக்டர். ராமதாஸ்.

கவனிக்க வேண்டியது இங்கேதான் இருக்குது.

''ஒரு கட்சிக்கு ஒரு தரம்தான் வசூலுக்கு வருவாங்கன்னு நினைச்சு, அந்தக் கட்சிக்கு ஒதுக்கி வெச்ச மொத்தத்தையும் அப்படியே முதல்லே வர்றவங்ககிட்டே கொடுத்துடக் கூடாது. ஒரு பகுதியைத்தான் கொடுக்கணும். மறுபடியும் அதே கட்சியைச் சேர்ந்த வேறு தொண்டர் கும்பல் வரும். 'இப்பத்தானே வாங்கிட்டுப் போனாங்க. உங்க கட்சி ஆளுங்க,' என்று சொன்னால் இந்தக் கோஷ்டிக்காரங்க என்ன சொல்லுவாங்க தெரியுமா? அவுங்க எங்க கட்சிப் பேரை மிஸ் யூஸ் பண்ணி வசூல் 'பண்றாங்க. தலைமை அலுவலகத்திலிருந்து அறிக்கை வுட்டிருந்தாங்களே பார்க்கலையா?' என்பாங்க. 'ரசீது கூடக் கொடுத்தாங்களே,' என்று ரசீதைக் காட்டினால் சிரிப்பாங்க. 'இது போலி ரசீது... எங்ககிட்டே ஒரு வார்த்தை கேட்கிறதில்லையா? இந்த ஆளை வட்டப் பொருளாளர் பதவியிலிருந்து எப்பவே நீக்கியாச்சே?'ன்னுவாங்க.

''அவங்களோட வாதம் செய்யாம (ஆனா செய்வது போலச் சிறிது காட்டி விட்டு) ஒரு ஐந்நூறை அவங்களுக்குத் தரணும்.

''இந்தத் தொல்லையே வேண்டாம் என்று ஒரு தரம் தலைமை அலுவலகத்துக்கு நேரில் போய்த் தலைவர் கையிலேயே கொடுத்து அவர் கைப்பட ரசீது வாங்கி வந்துட்டேன். அந்த ரசீதை வசூல் தொண்டர்களிடம் காட்டினதும் அவர்களுக்கு வந்ததே கோபம்! 'ஏய்யா... ரொம்பச் சாமர்த்தியமா வேலை செஞ்சுட்டதாக நெனைப்பா? கட்சித் தொண்டருங்கன்னு நாங்க இங்கே எதுக்கு இருக்கோம் பாட்ஜ் குத்திக்கினு? நீ வுடுவுடுன்னு தலைவர் கிட்டேயே நேராப் போயி அவரை டிஸ்டர்ப் பண்ணிட்டியே? அவரு இன்னா நினைச்சிப்பாரு? 'இந்த வட்டத்துலே வசூல் பண்ணறவங்க மேலே மக்களுக்கு நம்பிக்கை இல்லை. அதான் நேரிலே கொண்டாந்து தர்றாங்க'ன்னு இம்ப்ரஸன் விழுந்துடுமில்லே? எங்களை நம்பி அப்புறம் தலைமை அலுவலகத்திலேருந்து துட்டு அனுப்புவாரா'ன்னு என் கடையைப் போட்டுத் தரை மட்டம் பண்ணிட்டாங்க!

''அதனாலே தேர்தலுக்குன்னு ஒதுக்கி வெச்ச பணத்தை, வசூலுக்கு வர்ற தொண்டருங்ககிட்டேதான் கொடுக்கணும். இப்படியெல்லாம் புத்திசாலித்தனமா நடந்துக்கிட்டா, தேர்தல் வருதேன்னு கவலைப்பட வேண்டாம். பயந்து நடுங்கிக்கினு கடையை மூட வேண்டாம்.

கபாலி சொன்னதை அப்படியே போய்ப் பங்காருவிடம் சொன்னேன். ''நானும் கபாலி மாதிரி இன்னிக்கே தேர்தல் நிதி சிறு சேமிப்புலே இறங்கறேங்க!'' என்று பங்காரு பத்து ரூபாயை ஒரு தகர டப்பாவில் போட்டு மூடினார்.

சிவகாமியின் சபதம்

இருபத்து நான்காம் அத்தியாயம்

புள்ளலூர்ச் சண்டை

கண்ணபிரான் ரதத்தை விட்டுக் குதித்துக் குதிரைகளின் தலைக் கயிறுகளைப் பிடித்துக் கொண்டே, சிவகாமியை நெருங்கி வந்து, "தங்கச்சி! இதென்ன? இங்கே எப்போது வந்தீர்கள்? இது என்ன ஊர்?" என்று துரிதமாய்க் கேட்டான்.

"சிதம்பரம் போகலாமென்று கிளம்பி வந்தோம், அண்ணா! வழியில் இங்கே தங்கினோம். இந்த ஊருக்கு அசோகபுரம் என்று பெயராம். அதோ அசோக மகாராஜாவின் ஸ்தம்பம் தெரிகிறதே; நீங்கள் பார்க்கவில்லையா?" என்றாள் சிவகாமி.

"அதையெல்லாம் பார்க்க எனக்கு இப்போது சாவகாசமில்லை. ஆமாம், நீங்கள் என்னத்திற்காக இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு யாத்திரை கிளம்பினீர்கள்!...."

"அந்தக் காட்டு வீட்டில் இந்த யுத்த காலத்திலே தனியாக இருப்பானேன் என்றுதான் கிளம்பினோம். குமார சக்கரவர்த்தியுந்தான் எங்களை அடியோடு மறந்து விட்டாரே!....."

"என்ன வார்த்தை, அம்மா சொல்கிறாய்? மாமல்லராவது, உங்களை மறப்பதாவது? போர்க்களத்துக்குப் போகும்படி சக்கரவர்த்தியிடமிருந்து அனுமதி வந்ததும், முதலில் உங்கள் வீட்டைத் தேடிக் கொண்டு தானே வந்தோம்! வீடு பூட்டிக் கிடந்ததைக் கண்டதும் மாமல்லருக்கு என்ன கோபம் வந்தது தெரியுமா?"

"எட்டு மாதம் எங்களை எட்டிப் பாராமலே இருந்தவருக்குக் கோபம் வேறேயா? போகட்டும், எங்கே இப்படி எல்லோரும் தலைதெறிக்க ஓடுகிறீர்கள்?"

"புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிக் கேள்விப்படவில்லையா?" என்று சொல்லிக் கொண்டே கண்ணன் ரதத்தில் ஏறினான்.

"ஓகோ! சண்டைக்குப் பயந்து கொண்டா இப்படி ஓடுகிறீர்கள்?" என்று சிவகாமி பரிகாசச் சிரிப்புடன் கேட்டாள்.

"இல்லை, அம்மா, இல்லை. சண்டைக்குப் பயந்து ஓடுகிறவர்களை நாங்கள் துரத்திக் கொண்டு ஓடுகிறோம். தங்கச்சி! நீ மட்டும் இங்கேயே இருந்தால், நான் திரும்பி வரும் போது இந்த ரதத்தின் சக்கரத்திலே கங்கபாடி அரசன் துர்விநீதனைக் கட்டிக் கொண்டு வருவதைப் பார்ப்பாய்!" என்றான்.

"அண்ணா! நான் கட்டாயம் இங்கேயே இருக்கிறேன். மாமல்லரிடமும் சொல்லுங்கள்!" என்று சிவகாமி கூறி, மறுபடியும் தயக்கத்துடன், "நான் ஏதாவது தவறு செய்திருந்தாலும் மன்னித்துக் கொள்ளும்படி சொல்லுங்கள்!" என்றாள்.

அதே சமயத்தில் கண்ணன் சாட்டையைச் சுளீர் என்று சொடுக்கவே, குதிரைகள் பிய்த்துக் கொண்டு கிளம்பின. கண்ணன் தலையை மட்டும் திருப்பி, 'ஆகட்டும்' என்பதற்கு அறிகுறியாகக் குனிந்து சமிக்ஞை செய்தான்.

அமரர் கல்கி

மறுகணம் ரதம் மாயமாய்ப் பறந்து சென்று விட்டது.

அப்போது உள்ளே இருந்து வந்த ஆயனர், "சிவகாமி! யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்? ரதத்திலே போனது யார்?'' என்று கேட்டார்.

"கண்ணபிரான், அப்பா! ரதத்துக்கு முன்னால் குதிரை மேல் மாமல்லரும் பரஞ்சோதியும் போனார்கள்!''

''அப்படியா? நாம் அவர்களை விட்டு விட்டு வந்தாலும் அவர்கள் நம்மை விட மாட்டார்கள் போலிருக்கிறதே?''

''அவர்கள் நமக்காக வரவில்லை, அப்பா!''

''நமக்காக அவர்கள் ஏன் வரப் போகிறார்கள்? சிற்பியின் வீட்டைத் தேடிச் சக்கரவர்த்திகள் வந்த காலம் எல்லாம் மலை ஏறிப் போய் விட்டது, சிவகாமி!''

''அப்படிச் சொல்லாதீர்கள், அப்பா! கோட்டையை விட்டுக் கிளம்ப அனுமதி கிடைத்தவுடனே மாமல்லர் நம்முடைய வீட்டைத் தேடிக் கொண்டுதான் வந்தாராம்.''

''அப்படியானால் குண்டோதரன் சொன்னது உண்மைதானா?'' என்று கேட்டார் ஆயனர்.

''ஆமாம், நாம் வீட்டில் இல்லாமற் போனதில் மாமல்லருக்குக் கோபம் என்பதும் உண்மைதான்.''

''அதனால்தான் நான் சொன்னேன், இருக்கும் இடத்திலேயே இருப்போம் என்று. நீ பிடிவாதம் பிடித்து, தேச யாத்திரை கிளம்ப வேண்டுமென்று ஒற்றைக் காலால் நின்றாய்! அதன் பலனைப் பார்!''

ஆயனருக்கு மனம் கசந்து போயிருந்தபடியால் இப்படியெல்லாம் பிறர் மேல் குறை சொல்வது கொஞ்ச நாளாக வழக்கமாய்ப் போயிருந்தது. எனினும், இப்போது அவர் கூறியது உண்மையானபடியால், சிவகாமிக்குப் பெரிதும் வேதனை உண்டாயிற்று.

''போனதைப் பற்றிச் சொல்லி என்ன பயன், அப்பா?''

''ஒன்றுமில்லைதான்; இருந்தாலும், இந்த வழியாய்ப் போனவர்கள் சற்று நின்று நம்மைப் பார்த்து விட்டுப் போகக் கூடாதா? ஒரு காலத்தில் மாமல்லர் நம்மிடம் எவ்வளவு பிரியமாயிருந்தார்?''

''பிரியத்துக்கு இப்போதுதான் என்ன குறைவு வந்தது? இது யுத்த காலமல்லவா? அதனால் எல்லாருக்கும் அவசரமாயிருக்கிறது. திரும்பி வரும் போது மாமல்லர் இங்கே வந்து நம்மைப் பார்ப்பார் என்று கண்ணபிரான் சொன்னான், அப்பா!''

''அந்தமட்டில் சந்தோஷம். ஆனால், எதற்காக இப்படி எல்லாரும் ஓடுகிறார்களாம்?''

''புள்ளலூர் 'என்னுமிடத்தில் பெரிய யுத்தம் நடந்ததாம்!....''

''ஓகோ! யுத்தகளத்திலிருந்துதான் இப்படி ஓடுகிறார்களாக்கும்! ஆஹா! காலம் எப்படி மாறி விட்டது! முன்காலத்தில் போருக்குப் புறப்படுகிறவர்கள் வெற்றி அல்லது வீரசொர்க்கம் என்று உறுதியுடன் கிளம்புவார்கள். போர்க்களத்தில் முதுகு காட்டி ஓடுவதைப் போல் கேவலம் வேறொன்றுமில்லை என்று நினைப்பார்கள்...''

''அப்பா! இந்த யுத்தத்தில் போர்க்களத்திலிருந்து ஓடியவர்கள் எதிரிகள்தான்; அது உங்களுக்குத் திருப்திதானே?''

''அதிலே என்ன திருப்தி? சுத்த வீரர்களை வென்று ஜயக்கொடி நாட்டினால் புகழும் பெருமையும் உண்டு. புறமுதுகிட்டு ஓடுகிறவர்களைத் துரத்தி ஜயிப்பதில் என்ன கௌரவம் இருக்கிறது?''

எந்த வழியிலும் ஆயனரைத் திருப்தி செய்ய முடியாது என்பதைக் கண்ட சிவகாமி அவருடன் பேசுவதில் பயனில்லையென்று தீர்மானித்து மௌனம் பூண்டாள். இருவருடைய உள்ளங்களும் வெவ்வேறு சிந்தனையில் ஆழ்ந்தன.

அன்று சூரியன் அஸ்தமிக்க ஒரு நாழிகை இருக்கும்போது குண்டோதரன் திடும்பிரவேசமாக வந்து சேர்ந்தான். அவன் எங்கே போயிருந்தான், புத்த பிக்ஷுவைக் கண்டுபிடித்தானா, குதிரை திரும்பக் கிடைத்ததா என்னும் விஷயங்களைப் பற்றி ஆயனரும் சிவகாமியும் ஆவலுடன் அவனை விசாரித்தார்கள்.

''அதை ஏன் கேட்கிறீர்கள், போங்கள்! உங்களுடைய சொல்லைத் தட்டி விட்டு, புத்த பிக்ஷுவைப் பிடிப்பதற்காக ஓடினாலும் ஓடினேன்; நேரே யுத்த களத்திலேயே போய் மாட்டிக் கொண்டேன். அப்பப்பா! இந்த மாதிரி பயங்கர யுத்தத்தை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!'' என்றான் குண்டோதரன்.

சிவகாமி, ''என்ன சண்டை? எங்கே நடந்தது? சண்டை முடிவு என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள்.

அதன்பேரில் குண்டோதரன் புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி விவரமாகக் கூறினான். பழந்தமிழ் நாட்டின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற அந்தப் புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி இப்போது வாசகர்களும் தெரிந்து கொள்வது அவசியமாகும்!

வாதாபிப் புலிகேசியின் சைன்யம் பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த சில நாளைக்கெல்லாம் கங்கநாட்டு அரசன் துர்விநீதனுடைய சைன்யம் திரண்டு பல்லவ இராஜ்யத்தின் மேற்கு எல்லையில் வந்து நின்றது. வாதாபி சைன்யத்தினால் பல்லவர் படை முறியடிக்கப்பட்டது என்ற செய்தி வந்ததும் பல்லவ இராஜ்யத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமாக அந்தச் சைனியம் காத்துக் கொண்டிருந்தது. ஆனால், திடீரென்று துர்விநீதனுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, தெரியவில்லை. ஒருநாள் கங்கநாட்டுச் சைனியம் பல்லவ இராஜ்யத்துக்குள் நுழைந்து விட்டதென்றும் காஞ்சியை நோக்கி முன்னேறி வருகிறதென்றும் தெரிந்தது. இதையறிந்த மகேந்திர பல்லவர் வடக்குப் போர் முனையிலிருந்து குமார சக்கரவர்த்திக்குக் கட்டளை அனுப்பினார். திருக்கழுக்குன்றத்திலுள்ள பாதுகாப்புப் படையுடன் சென்று கங்க நாட்டுச் சைனியம் காஞ்சியை அணுகுவதற்கு முன் அதை எதிர்க்கும்படியாகச் சொல்லி அனுப்பினார். இத்தகைய கட்டளைக்காக எட்டு மாத காலமாகத் துடிதுடித்துக் கொண்டிருந்த மாமல்ல நரசிம்மர் தளபதி பரஞ்சோதியுடன் உடனே கிளம்பிச் சென்று திருக்கழுக்குன்றத்திலிருந்த படைக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்றார். காஞ்சி நகருக்குத் தென்மேற்கே இரண்டு காத தூரத்தில் புள்ளலூர்க் கிராமத்து எல்லையிலே இரண்டு சைன்யங்களும் சந்தித்தன.

மாமல்லர் தலைமை வகித்த பல்லவ சைனியத்தைக் காட்டிலும்கங்கநாட்டுச் சைனியம் மூன்று மடங்கு பெரியது. ஆனாலும், மாமல்லரின் வீரப்படை கங்கநாட்டுச் சைன்யத்தின் மேல் எதிர்பாராத சமயத்தில் இடி விழுவது போல் விழுந்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் கையாண்ட யுத்த தந்திரங்களும், போர்க்களத்தில் முன்னணியில் நின்று நிகழ்த்திய வீரச் செயல்களும், பல்லவ வீரர்களுக்கு இணையில்லாத உற்சாகத்தையும் துணிச்சலையும் அளித்தன.

போர் உச்சநிலை அடைந்த போது கங்க சைனியத்தை மற்றொரு பக்கத்தில் இன்னொரு புதிய படை தாக்குவதாக வதந்தி உண்டாயிற்று. அவ்வளவுதான்! அத்தனை நேரமும் ஒருவாறு தைரியமாகப் போரிட்டு வந்த கங்க சைனியத்தின் வீரர்களைப் பீதி பிடித்தது. உயிர் பிழைத்தாற் போதும் என்று கங்க வீரர்கள் சிதறி ஓட ஆரம்பித்தார்கள்.

கங்க நாட்டரசன் துர்விநீதன் பட்டத்து யானை மேல் ஏறிக் கொண்டு தெற்குத் திக்கை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததாகச் செய்தி வந்தது. அவனை எப்படியாவது சிறைப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்து மாமல்லரும் பரஞ்சோதியும் பல்லவ சைனியத்தைச் சிறு சிறு படைகளாகப் பிரித்துத் தெற்கு நோக்கிப் பல வழிகளிலும் போகச் சொல்லி விட்டுத் தாங்களும் அதே திசையில் அதிவேகமாகச் சென்றார்கள்.

போர்க்களத்தில் தறிகெட்டு ஓடிய ஒரு குதிரையைக் கைப்பற்றி அதன் மேல் ஏறிக் கொண்டு குண்டோதரனும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தான். துரதிருஷ்டவசமாக வழியில் அவன் ஏறி வந்த குதிரை காலை ஒடித்துக் கொண்டது. அதனால் அவன் பின்னால் தங்கிவிடும்படி நேர்ந்தது. குதிரையை அப்படியே விட்டு விட்டுக் கால்நடையாக நடந்து அசோகபுரம் வந்து சேர்ந்ததாகக் கூறிக் குண்டோதரன் அவனுடைய வரலாற்றை முடித்தான்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

"திருப்பாற் கடல்"

புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிக் குண்டோதரன் கூறிய விவரங்களைக் கேட்கக் கேட்க, மேலும் மேலும் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆவல் ஆயனருக்கும் சிவகாமிக்கும் பொங்கிப் பெருகியது. முக்கியமாகப் போர்க்களத்தில் மாமல்லர் நிகழ்த்திய அதி அற்புத வீரச் செயல்களைப் பற்றிக் கேட்பதில் சிவகாமி அடங்காத தாகம் கொண்டிருந்தாள். குண்டோதரனும் குதூகலத்துடன் அந்த வீரச் செயல்களை வர்ணித்தான்:

"ஆஹா! போர்க்களத்தில் எதிரிகளுக்கிடையில் புகுந்து மாமல்லர் வீர வாளைச் சுழற்றிய போது எப்படியிருந்தது தெரியுமா? அது கேவலம் வாளாகவே தோன்றவில்லை. திருமாலின் சக்ராயுதத்தைப் போலவே சுழன்று ஜொலித்தது! அந்த வாளிலிருந்து கணந்தோறும் நூறு நூறு மின்னல்கள் மின்னின. ஒவ்வொரு மின்னலும் ஒவ்வோர் எதிரியின் தலையைத் துண்டித்து எறிந்தது..."


இப்படி வர்ணித்துக் கொண்டே இருந்த குண்டோதரன் திடீரென்று நிறுத்தி,

"குருவே! * இந்த விஹாரத்திலிருந்த வயோதிக புத்த பிக்ஷு எங்கே?" என்று கேட்டான்.

"அப்பனே! நாங்கள் வந்ததிலிருந்து அவர் பெரும்பாலும் இங்கே இருப்பதில்லை. அநேகமாக சைத்யத்திலேயே இருக்கிறார். தினம் இரண்டு தடவை இங்கே வந்து எங்களுக்கு என்ன வேண்டும் என்று விசாரித்து விட்டுப் போய் விடுகிறார்!" என்றார் ஆயனர்.

"குருவே! அவரை அவசரமாகப் பார்க்க வேண்டும். பார்த்து விட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனான்.

குண்டோதரன் விஹாரத்திலிருந்து கிளம்பி வாசலில் வந்த போது சூரியன் அஸ்தமித்து அந்தி மயங்கிக் கொண்டிருந்த நேரம். ஆனால், அன்று சாதாரண அந்திநேரமாகக் காணப்படவில்லை. இரவானது திடீரென்று இருண்டு திரண்டு நாற்புறமும் சூழ்ந்து



வந்ததாகத் தோன்றியது. இதற்குக் காரணம் என்னவென்று குண்டோதரன் வானத்தை நோக்கிய போது, வடக்குத் திக்கில் மை போல் கருத்த கொண்டல்கள் திரள் திரளாக மேலே எழுந்து வருவதைக் கண்டான். "ஆஹா! இன்றிரவு பெருங் காற்றும் மழையும் திருவிளையாடல் புரியப் போகின்றன. பகலெல்லாம் அவ்வளவு புழுக்கமாயிருந்த காரணம் இதுதான் போலும்!" என்று குண்டோதரன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவர்கள் தங்கியிருந்த விஹாரத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தனித்திருந்த பாழடைந்த புத்த சைத்யத்தைக் குண்டோதரன் நெருங்கிய போது உள்ளேயிருந்து பேச்சுக் குரல் வந்தது.

வெளியிலேயே இருள் கவிழ்ந்து சூழ்ந்

* "விஹாரம்" என்பது புத்தபெருமானின் கோயிலும் பௌத்த பிக்ஷுக்கள் தங்கும் மடமும் சேர்ந்து அமைந்தது. "சைத்யம்" என்பது புத்த பகவானின் தனிப்பட்ட ஆலயமாகும்.



திருந்த நிலையில், சைத்யத்துக்குள் குடி கொண்டிருந்த அந்தகாரம் எப்படியிருந்திருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டியதில்லை. அந்தக் கன்னங்கரிய இருளின் உதவியால் குண்டோதரன் பேச்சுக் குரல் வந்த இடத்துக்கு வெகு சமீபத்தில் போய் மூச்சுக் கூடக் கெட்டியாக விடாமல் தூண் மறைவில் நின்றான். பின்வரும் சம்பாஷணை அவன் காதில் விழுந்தது:

''உடனே, இந்தக் கணமே, அவர்களை

அழைத்துக் கொண்டு கிளம்புங்கள். பொழுது விடிவதற்குள்ளாக வராக நதியைத் தாண்டி விட வேண்டும். வழியிலுள்ள கிராமங்களில் வண்டி கிடைத்தால் ஏற்றிக் கொண்டு போங்கள். எப்படியும் நாளைச் சூரியோதயத்துக்குள் வராக நதியைத் தாண்டி விடுங்கள்.''

''அவர்கள் கிளம்ப மறுத்தால்.....?''

''தொல்லைதான், ஏதோ ஒரு பிசகினால் நான் போட்ட திட்டமெல்லாம் வீணாய்ப் போய் விட்டது. ஆனாலும், புத்த பகவான் அருளால் எல்லாம் ஒழுங்காகி விடும். அவர்களிடம் எதையாவது சொல்லிப் புறப்படச் செய்யுங்கள். இங்கே பெரிய சண்டை நடக்கப் போவதாகச் சொல்லுங்கள். இதெல்லாம் ஒன்றும் பலிக்கா விட்டால், திருப்பாற்கடல் உடைப்பு எடுத்துக் கொண்டு விட்டதாகச் சொல்லுங்கள்!''

''சுவாமி! இது என்ன சொல்கிறீர்கள்?''

''ஆம்; திருப்பாற்கடல் ஏற்கெனவே அலைமோதிக் கொண்டிருக்கிறது. புத்த பகவான் கருணையினால் இன்று மழை பெய்தால் கட்டாயம் கரை உடைத்துக் கொள்ளும்...'' என்று கூறி, நாகநந்தி தமது ஆழ்ந்த பயங்கரக் குரலில் சிரித்தார்.

புத்த பிக்ஷு மேலும் கூறிய மொழிகள் முன்னைக் காட்டிலும் மெதுவான குரலில் வெளி வந்தன!

''அப்படியும் அவர்கள் கிளம்பாமல், உடைப்பு எடுத்து வெள்ளமும் வந்து விட்டால், என்ன செய்ய வேண்டும் தெரியுமா? விஹாரத்தில் இன்னும் ஒரு தெப்பம் மீதி இருக்கிறதல்லவா? அதில் ஏற்றிக் கொண்டு, போன மாதம் பார்த்த பாறை மேட்டுக்குப் போய்ச் சேருங்கள். மற்றவர்கள் எப்படியானாலும் சிவகாமியைக் கட்டாயம் காப்பாற்றியாக வேண்டும். தெரியுமா சுவாமி!''

மேற்படி சம்பாஷணையில் கடைசிப் பகுதியைக் கேட்டுக் கொண்டிருந்த போது, குண்டோதரனுக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. நாகநந்தியின் சிரிப்பு அவனுடைய தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது. அன்று ராத்திரி ஏதோ பெரிய விபரீதம் ஏற்படப் போகிறதென்பதையும், அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு தன்னுடைய தலையில் சார்ந்திருக்கிறதென்பதையும் அவன் உணர்ந்தான். அந்தக் காரியத்தில் தனக்கு உதவி புரியும்படி தான் வழிபடும் தெய்வமாகிய பழனி மலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளை வேண்டிக் கொண்டான்.

சம்பாஷணை முடிந்ததும் பிக்ஷுக்கள் இருவரும் சைத்யத்திலிருந்து வெளியில் வந்தார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து குண்டோதரனும் வந்தான். இதற்குள்ளாக மாலை போய் இரவு வந்து, நன்றாக இருட்டி விட்டது. வடகிழக்கிலிருந்து திரண்டு வந்த மேகங்கள் வானத்தைப் பெரும்பாலும் மூடியிருந்தாலும், தெற்கிலும் மேற்கிலும் இன்னும் சில நட்சத்திரங்கள் தெரிந்தன.

சைத்தியத்திலிருந்து வெளியேறிய பிக்ஷுக்களில் ஒருவர் அருகிலிருந்த விஹாரத்தை நோக்கிச் சென்றார். மற்றொருவர் சைத்யத்தைச் சுற்றிக் கொண்டு தென்மேற்குத் திசையை நோக்கிச் சென்றார்.

ஒருகணம் குண்டோதரனுடைய மனத்தில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது. விஹாரத்துக்குப் போய் ஆயனருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டாமா என்று எண்ணினான். ஆனால், என்ன விதமாக எச்சரிக்கை செய்வது? எப்படியும் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்று மேற்படி பிக்ஷுக்களின் சம்பாஷணையிலிருந்தே நன்கு தெரிந்தது. எனவே, அச் சந்தர்ப்பத்தில் தன்னுடைய வேலை நாகநந்தியைப் பின் தொடர்வதுதான் என்று குண்டோதரன் தீர்மானித்தான்.

அவ்விதமே அவரைப் பின்தொடர்ந்து குண்டோதரன் சற்று தூரத்திலேயே நடந்து சென்றான்.

கொஞ்ச தூரம் போனதும் ஒரு மரத்தின் பின்னால் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து அதில் நாகநந்தி ஏறிக் கொண்டார்.

'ஆஹா! இருட்டு போன குதிரை மறுபடியும் கிடைக்கப் போகிறது!? என்று குண்டோதரன் எண்ணிக் கொண்டான்.

கணத்துக்குக் கணம் வேகமாகிக் கொண்டிருந்த காற்றினாலும் இருட்டினாலும் நாகநந்தி குதிரை மேல் ஏறியபோதிலும் மெதுவாகவே போக வேண்டியிருந்தது. எனவே அவரைத் தொடர்ந்து போவது கஷ்டமாயில்லை. சில சமயம் குதிரை அடிச் சத்தம் முன்னால் கேட்கிறதோ பின்னால்

மனைவி: இன்னைக்கு வெயில் கடுமையா இருக்கு; நீங்க ஆபீஸ் போக வேண்டாங்க.

கணவன்: என்னை நம்பு மாலா... சத்தியமா எனக்கு வடாம் பிழியத் தெரியாது!

— சீர்காழி வி. ரேவதி.



கேட்கிறதோ என்பது சந்தேகமாயிருந்தது. இரண்டு பக்கத்திலும் கேட்பது போலவும் இருந்தது. இது வீண் பிரமை என்று எண்ணிக் கொண்டு மேலே சென்றான்.

ஏறக்குறைய மூன்று நாழிகை வந்த பிறகு, எதிரே நீண்ட மலைத் தொடர் போன்ற ஓர் இருண்ட கரை நெடுந்தூரத்துக்கு நெடுந் தூரம் தென்பட்டது.

அதே சமயத்தில் கண்ணைப் பறிக்கும் மின்னல்களுடனும், அண்டம் அதிரும் இடி முழக்கங்களுடனும் மழை பெய்யத் தொடங் கியது.

மின்னல் வெளிச்சத்தில், நாகநந்தி மேட்டின் ஓரமாக இருந்த ஒரு மரத்தில் குதிரையைக் கட்டி விட்டு அந்தக் கரையின் மேல் ஏறுவது குண்டோதரனுக்குத் தெரிந் தது. அதே இடத்தில் மேட்டின் மீது அவனும் ஏறினான். மழையில் நனைந்த காரணத்தினால் கரையின் மண் சேறாகி வழுக்கத் தொடங்கி விட்டபடியால் மேட் டில் ஏறுவது சுலபமாயில்லை. கடைசியில், கரையின் அடியிலிருந்து வளர்ந்திருந்த மரத் தின் உதவியால் கஷ்டப்பட்டு ஏறிக் குண்டோதரன் கரை உச்சியை அடைந்த போது, பளீரென்று வீசிய மின்னல் வெளிச்சத்தில் ஓர் அபூர்வ பயங்கரக் காட்சி தென்பட்டது.

கரைக்கு அப்பால் இருந்த திருப்பாற் கடல் என்னும் ஏரி புயற்காற்றினால் கொந் தளித்தது. ஒரு மகா சமுத்திரத்தைப் போல் அலை மோதிக் கொண்டு காட்சியளித்தது. கொந்தளித்து எழுந்த அலைகள் மின்னல் வெளிச்சத்தில் வெள்ளை வெளேரென்று ஜொலித்தபடியால், உண்மையிலேயே திருப் பாற்கடல் என்னும் பெயர் அந்த ஏரிக்கு அச் சமயம் மிகவும் பொருத்தமாயிருந்தது.

அதே நேரத்தில் குண்டோதரன் நின்ற இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் அவனுடைய உடம்பின் இரத்தத்தையெல்லாம் சுண்டச் செய்யும்படியான இன்னொரு பயங்கரத் தோற்றமும் தென்பட்டது.

அலைமோதிய ஏரிக்கரையில் கையை உயரத் தூக்கிக் கொண்டு நின்ற நாகநந்தி, 'ஹா ஹா ஹா' என்று பேய்க் குரலில் சிரித்த சப்தமானது, புயல் முழக்கத்தின் ஓசையையும் அலைகளின் ஆரவார ஒலியை யும் அடக்கிக் கொண்டு மேலெழுந்தது.

நாகநந்திக்குப் பக்கத்தில் ஏரிக்கரையைப் பிளந்து கொண்டு ஒரு சிறு கால்வாய் வழியாகத் தண்ணீர் ஓட ஆரம்பித்தது.

நாகநந்தி அடிகளின் காலடியில் ஒரு மண்வெட்டி கிடந்தது!

(தொடரும்)



அருள்வாக்கு

ஏடு என்றால் நடுவிலே நரம்பும் அதற்கு இரண்டு பக்கம் இலையுமாக இருக்கிறதில் ஒரு பக்கம் என்று அர்த் தம். வாழையிலையை இப்படிக் குறுக் காகப் பிளந்து ஒவ்வொரு பாதியையும் ஏடு என்கிறோம். பனை மட்டையில் இருக்கிறதை இப்படியே நடு நரம்பை எடுத்துவிட்டு ஒவ்வொரு பக்கத்தையும் எடுத்து ஏடு என்பதுதான் ஏட்டுச் சுவடி. அதுதான் நீண்ட நாளானாலும் பழுத் துப் போகாத, பழுதாகாத இயற்கை யின் காகிதம்! அதில் எழுத்தாணியை வைத்துக் கொண்டு செதுக்கி எழுத வேண்டும். ஞான சம்பந்தரின் தேவார ஏடு வைகையை எதிர்த்துக் கொண்டு கரையேறிய இடம் இன்றைக்கும் பாண் டிய நாட்டில் திருவேடகம் (திரு ஏடு அகம்) என்ற ஸ்தலமாக விளங்குகிறது. அங்கே ஈச்வரனுக்குப் 'பத்ரிகாபரமேச் வரர்' என்று பெயர். இப்போது, 'பேப் பர்' என்றால் காகிதம் என்பது ஒரு அர்த்தம். 'மாகஸின்' (ஸஞ்சிகை) என் றும் அர்த்தம். 'மாகஸின்' என்பதைப் 'பத்திரிகை' என்கிறோம். தேசரின் பேப்பரான இயற்கைப் பத்திரிகை, கரை யேறின ஊரில் ஸ்வாமியே 'பத்திரிகா பரமேச்வரன்' என்று ஜர்னலிஸ்ட் ஆகியிருக்கிறார். 'பத்ரம்' 'பத்ரிகா' என்றாலும் இலை என்றே அர்த்தம். இலையிலிருந்து வந்ததுதானே ஏடு? அதனால் ஏட்டுக்குப் பத்திரிகை என்று பெயர். இதுதான் அந்தநாள் காகிதமாக இருந்ததால் கடிதாகம் (லெட்டரும்) இதிலேதான் எழுதுவார்கள். அதனால் கடிதாகக்குப் 'பத்ரம்' என்றே பேர் வந்து விட்டது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

இலவச சாராயத் திட்டம்

அன்று காலை செய்தித்தாள்களில் வந்திருந்த ஒரு செய்தி மகா மேன்மை பொருந்திய பல அரசியல் தலைவர்களின் இதயத்தைப் பிழிந்து, நெக்குருகிக் கசியச் செய்து விட்டிருந்தது. ஒரு சாதாரண 'குடி' மகனின் 'கதறல்தான் அது. கள்ளச் சாராயம் குடித்து விட்டு, மருத்துவமனையில் மண்டையைப் போடு முன்பு, ஒரு மகத்தான உண்மையைச் சொல்லி விட்டுப் போயிருந்தான், அந்த மனிதன். நிருபர் 'துருவல்' துரைசாமிக்கு அவன் அருளிய வாக்குமூலம் இதோ:

நிருபர்: "ஏன் கள்ளச் சாராயம் குடிக்கிறீங்க? நல்ல சாராயம்தான் நாடு முழுக்கத் தாராளமாய்க் கிடைக்குதே?"

குடிமகன்: "அட போ தம்பி, அதுக்கும் காசு வேணாமா? எவ்வளவோ முக்கியமான செலவுக்குப் பணம் தாவாலை?"

நிருபர்: சர்க்காரே 'மலிவு விலையில் மது', 'குறைந்த விலையில் நிறைய சாராயம்'னு மக்களுக்குப் பயன்படும் புரட்சித் திட்டங்களை அமுல்படுத்தி இருக்காங்களே அப்படியுமா இது மக்களை அடையவில்லை? தெரிந்தால் சி. எம். ரொம்ப வருத்தப்படுவாரே?"

இதற்குப் பதில் கூறுமுன் வரலாற்றையே மாற்றும் புரட்சிப் பேட்டி கொடுத்து விட்டு வீர மரணம் அடைந்தான் அந்தக் குடிமகன்.

செய்தியைப் படித்த மேன்மைதாங்கிய தலைவருக்கு நெஞ்சு வெந்தது; நீதி கேட்டது. மலிவு சாராயத்தைக் கூட காசு கொடுத்து வாங்கிக் குடிக்க முடியாமல் ஏதோ ஒரு சாராயத்தை ஊற்றிக் கொண்டானே என்று சங்கடப்பட்டார். சின்ன



வயதில் சில்லறையில்லாமல் கஷ்டப்பட்ட நாட்கள் நினைவுக்கு வந்தன.

வெறும் வாயை மெல்லும் எதிர்க் கட்சியினருக்கு 'பப்பிள் கம்' கொடுத்தாற் போலாயிற்றே இந்தச் சாவு? விஷயம் பெரிதாக வெடிக்குமா?

தமது அருமை மக்கள் படும் அவஸ்தையைக் காணச் சகிக்காமல் வேதனையால் மனம் சோர்ந்து கிடந்த போது 'பளீ'ரென்று உதித்த திட்டம்தான் இது:

'இலவச சாராயத் திட்டம்'!

பாக்கெட் சாராயம் குடிக்கக் கூடக் காக இல்லாததால்தானே குறைந்த விலையில் கிடைக்கும் கள்ளச் சாராயம் குடிக்கிறார்கள்? பொது மக்களைக் காப்பது அரசின் கடமையல்லவா? ஆகவே அரசே இலவச வேஷ்டி, இலவச அரிசி, இலவச நீரோத், இலவச பல்பொடி மாதிரி இலவச சாராயத் திட்டம் அமுல்படுத்துகிறது! இதைப் பற்றி விவாதிக்க,வழிமுறைகள் சொல்ல,அதிகாரிகள், மந்திரிகள், கட்சிக்காரர்கள் கலந்துரையாடினார்கள்! 'ஜால்ரா'க்கள் 'ஒத்து' ஊதினார்கள்.

'கள்ளச் சாராயத்தை ஒழிக்கக் காருண்ய அரசின் திட்டம்!''

''சத்துணவுக்குப் பிறகு ஒரு சாதனைத் திட்டம்!''

'குழந்தைகளுக்குச் சத்துணவு!
பெரியவர்களுக்குக் 'கிக்' உணவு!'

நாட்டின் பொருளாதாரத்தை நாசம் செய்து, சமூக விரோதிகளை வளர்க்கும் கள்ளச் சாராயம் காய்ச்சும் கும்பலை ஒழிக்கும் 'ஓஹோ' திட்டம் இது என்று ஒரு பத்திரிகை தலையங்கம் தீட்டியிருந்தது.

''ஆஹா இதுவல்லவோ 'குடியரசு''' என்று பாராட்டினார் மொந்தைக் கவிராயர் ஒருவர். ''ஐயோ, ஐயோ, நாடே குட்டிச்

'டார்லிங்'

சுவராய்ப் போய் விட்டது. மதுவையா மக்களுக்குக் கொடுப்பது மதிகெட்ட செயல்'' என்று தலையங்கம் திட்டியிருந்த அதாவது தீட்டியிருந்த சில பத்திரிகைகளை 'மனிதாபிமானமற்ற மேட்டுக்குடிப் பத்திரிகைகள்' என்று பரிகசித்தார்கள்.

''அண்ணே அண்ணே, இந்தத் திட்டத்தை நமது பெருந் தலைவர் பிறந்த நாள் அன்று அமோகமாக ஆரம்பித்து வைச்சுடலாம்'' என்று ஓர் அருமைத் தம்பி அவசரப்பட்டார்.

''இதற்கு ஒரு வாரியம் ஆரம்பிக்கணும். இலவச சாராய வழங்கு வாரியம்.''

''அதுக்காக மதுவிலக்குத் துறையைக் கலைச்சுடப் போறீங்க! மக்களுக்குச் சாராயத்தின் கேடுகளை எடுத்துரைக்க அது இருந்துட்டுப் போவட்டும். இதுக்கு ஒருத்தர் அதுக்கு ஒருத்தர்னு ரெண்டு பேருங்களை நம்ம ஆளுங்களாப் பார்த்து சேர்மன்களைப் போடலாம்.''

முதல் கட்டமாகப் பொங்கல் மற்றும் சிறப்பு நாட்களில் 500 மில்லி பாலிதீன் பைகளில் வழங்குவதாக முடிவாயிற்று.

தேர்தல்களை நினைவில் கொண்டு முதல்வரின் கை கூப்பிய போஸ் படத்தினைப் பைகளில் அச்சிடலாம் என்று 'கொள்கைப் பரப்பு' ஐடியா கொடுத்தார்.

மருத்துவச் சங்கமும் சில மாதர் சங்கங்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. திட்டமே கெடுதலானது. அரசாங்கப் பணம் விரயமாகிறது என்று குரல் கொடுத்.





''வாழ்க்கையில் பிடிப்பே இல்லையா? ஏன்?''

''கைத்தறிக் கடன் பிடிப்பு, பி. எஃப் பிடிப்பு, பி. எஃப் லோன் பிடிப்பு, சைக்கிள் லோன் பிடிப்பு, பண்டிகை முன் பணப் பிடிப்பு, மூச்சுப் பிடிப்பு தவிர எல்லாப் பிடிப்பும் இருந்தா — வாழ்க்கையில் பிடிப்பு எப்படிங்க வரும்?''

— நந்தி.

''உங்களைப் பார்த்துத்தான் எனக்கும் கதை எழுதணுங்கிற ஆர்வமே வந்தது.''

''அப்படியா?''

''ஆமாம். உங்களோட கதைகளே பிரசுரமாகும் போது என்னோட கதைகள் நிச்சயமாத் திரும்பி வராதுங்கிற நம்பிக்கைதான்!''

— வி. கி. குமார்.



தன.

வேண்டுமானால் ஒன்று செய்வோம். சிகரெட் பெட்டிகளில் அச்சிடுவது போல,

'குடி குடியைக் கெடுக்கும்

குடிப்பழக்கம் நாடடைக் கெடுக்கும்'

என்று கண்ணுக்குத் தெரியாமல் சின்ன எழுத்தில் எழுதி விடலாம் என்று சமாளித்தார்கள்.

குடும்ப உறுப்பினர் எண்ணிக்கையைக் கொண்டு ரேஷன் கார்டு கொடுப்பது போல் குடிக்கும் அளவைக் கொண்டு கொடுக்க வேண்டும்.

'மொடாக்' குடியன்

'படா' குடியன்

'கடாய்' குடியன்

'விடாக்'குடியன்

என்று 'பாக்ஸிங்'கில் நிறைய வெயிட் கிளாஸ்கள் இருப்பது போல் சில பிரிவுகள் பிரிக்கப்பட்டன.

ஒரு சுபயோக சுபதினததில் கடற்கரையில் பிரம்மாண்டமான விழாவில் திட்டம் துவங்கியது. வழக்கம் போல் வானளாவிய வளைவுகள், வண்ணப் போஸ்டர்கள் வழியெல்லாம் வரவேற்றன. பந்தலில் வரவேற்பு விழாக் குழுவினர்கள் முன்பே சரக்கு 'சாம்பிள்' பார்த்து விட்ட படியால், ஆடிக் கொண்டிருந்தனர். மைக்காரர் 'ஆடிய ஆட்டம் என்ன' என்று ரிகார்டு போட்டார்.

விழாத் தலைவரும் 'தண்ணி'கரற்றத் தலைவர். ஆதலால் தெனாலிராமன் குதிரை போல முன்னே இரண்டு அடி எடுத்து வைத்தால் பின்னே இரண்டு தப்படியாக, தப்பு அடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். 'தள்ளாத வயதுங்க' என்றார் ஒருவர். ஒருவழியாக அவரைத் 'தள்ளி'க் கொண்டு போய் மேடையில் ஏற்றினார்கள்.

விழாவைத் துவக்கி வைத்து அவசர அவசரமாய் வரவேற்றுப் பேசினார் அதிகாரி. குடிக்கச் சாராயம் மட்டும் இலவசமாகக் கொடுத்தால் போதாது. தொட்டுக் கொள்ள ஊறுகாய், சிப்ஸ், இரால் ஏதாவது காரமாய் வேண்டுமென்று காரசாரமாய் விவாதித்தார் முதல் பேச்சாளர்.

தலைவரைப் பேச அழைத்தார்கள்.

ஒருவழியாக மைக் அருகே அவரைத் தள்ளி விட ''கோழர்களே, கோழிகளே'' என்று குழற ஆரம்பிக்க,விழா 'ஜாம் ஜாம்' என்று சாரி, 'ஜின் ஜின்' என்று களை கட்டியது.

பத்து வார்த்தைகள்தாம் பேசியிருப்பார். ''ஐயோ, வயிற்றை என்னமோ செய்யுதே, சதி சதி'' என்று புலம்பியபடி கண்ணை மூடி மயக்கமானார்.

அதே நேரத்தில் சாம்பிள் பார்த்தவர்கள் எல்லாம் சரியத் தொடங்கினார்கள். வயிற்றைப் பிடித்தபடி, ஸ்லோமோஷனில் ஒவ்வொருவராகச் சரிய, விழா விழ ஆரம்பித்தது.

இலவச சாராயத்திலும் விஷச் சாராயமா? 'கவர்ன்மெண்ட் சாராயத்தில் கள்ளச் சாராயத்தைக் கலந்தது யார்?'

'கள்ளச் சாராய மன்னனைச் சாராய வாரியத்தில் சேர்மனாகச் சேர்த்தது முறையா?'

'மருத்துவமனையில் மாண்புகள்! கலப்படத்துக்குக் காரணம் யார்?' — பத்திரிகைகள் கேள்வி கேட்டன.

கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் ஒரு கமிஷன் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

எழுத்தறிவித்தவன்

கமலவேலன்

"டேய் முருகா... அந்த டேபிளைத் துடைச்க விடு."

முருகன் வாய் திறவாது மேஜையை நோக்கி நகர்ந்தான்.

"பார்த்துத் துடைடா... முண்டம். சார் மேல பட்டுடப் போகுது."

பட்டன் இல்லாமல் கிழிந்து தொங்கும் காக்கிக் கால் சட்டையின் பட்டையை இடுப்பில் செருகிக் கொண்டே மேஜையைத் துடைத்து விட்டான் முருகன்.

எண்ணிப் பதினாறு பேர்தான் மொத்தமாக உட்கார்ந்து சாப்பிட முடியும். அவ்வளவு சிறிய ஓட்டல். 'வாமன விலாஸ்' என்று சிறிய அளவில் பெயர்ப் பலகையும் நிறம் மங்கித் தொங்கியது. பொருத்தமான பெயர்தான். பதார்த்தங்களின் ருசி ரொம்பப் பிரசித்தம். வாமன விலாஸ் டிபனுக்கு என்று ஒரு ரசிகர் கூட்டமே உண்டு.

சப்ளைக்குக் கிச்சாமி. எடுபிடி வேலைக்கு முருகன். கூட்ட நேரத்தில் முருகன் கிளீனர் கம் சப்ளையராக அவதாரம் எடுத்து விடுவான்.

அதிகாலையில் – கோழி கூவுவதற்கு முன் முருகனின் பணிகள் தொடங்கி விடும். இரவு பத்து மணி அளவில்தான் அவனுக்கு ஒய்வு கிடைக்கும்.

"டேய் முருகா.. தடிக்கழுதை. கிணற்றடியிலே என்னடா அவ்வளவு நேரம். சீக்கிரம் அலம்பி எடுத்துக்கிட்டு வாடா."

"இதோ வந்துட்டேன்."

பளிச்சென்று துலக்கிய டபரா செட்டுகளைக் காப்பி பட்டறையில் கொண்டு வந்து வைத்தான்.

"எருமை மாதிரி வழியை மறைச்சுக்கிட்டு நிக்காதேடா. கையலம்பற தொட்டியைப் பார்த்தியா... தண்ணியே இல்லை. தொட்டியை நிரப்புடா..."

முருகன் உள்ளே செல்லத் திரும்பினான்.

"இதையெல்லாம் சொல்லாமலே செய்யப் பழகிக்கணும். வேளா வேளைக்குக் கொட்டிக்க மட்டும் தெரியுதுல்லே.





○○ வெள்ளைத்துணிகளுக்காகக்கரைக்கப்படும் சொட்டு நீலக் கரைசலைத் துணிகளுக்கு உபயோகித்தபின், அத் தண்ணீரைத் தூரக் கொட்டாமல் வெள்ளைச் சுவரின் மேல் பரவலாகத் தெளித்தால் சுவர், நீலத்தை ஏற்றுக் கொண்டு 'பளிச்'சென்று இருக்கும்!

— எஸ். முகம்மது யூசுப்.

போ... போ...'' கல்லாவில் காசை அள்ளிப் போட்டுக் கொண்டே கடுகடுத்துக் கொண்டிருந்தார் முதலாளி.

முருகன் வாயைத் திறக்கவேயில்லை. காக்கி அரைக்கால் சட்டையின் பட்டையை மறுபடியும் இடுப்பில் செருகிக் கொண்டு தொட்டிக்குத் தண்ணீர் ஊற்றினான்.

''ஐயா! கடலை மாவு தீர்ந்துடுத்து. அவசரமா... ஒரு கிலோ மாவு வேணும்'' வியர்வை சொட்டச் சொட்ட அவதி அவதியாய் ஓடி வந்து சொன்னார் சரக்கு மாஸ்டர்.

''சரி வாங்கிட்டு வரச் சொல்றேன். கொஞ்சம் வாழைக்காய் பஜ்ஜியும் போடுங்க. டேய் இஞ்சிப் பச்சடி.. சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போயி... கடலை மாவு ஒரு கிலோ வாங்கிட்டு வா...''

முருகன் குரங்கு பெடல் போட்டு சைக்கிளில் விரைந்தான்.

புயல் வேகத்தில் சென்று கடலை மாவுடன் திரும்பினான். முகம் முழுதும் முத்து முத்தாய் வியர்வை. மூச்சிரைக்க மீதி சில்லறையைக் கல்லாவில் கொடுத்தான்.

''மாஸ்டர்கிட்டே மாவைக் கொடுத்துட்டு சீக்கிரம் டேபிளைத் துடைச்சு விடு. காலி டபரா செட்டெல்லாம் பார்த்து எடு. போ... மசமசன்னு நிக்காதே...'' சாட்டையைச் சொடுக்கிக் கொண்டேயிருந்தார் முதலாளி.

''பொறுப்பில்லாத பசங்க. இவனுகளை வச்சு வேலை வாங்கறதுக்குள்ளே போறும் போறும்னு ஆயிடுது. சே! சே!'' வாடிக்கையாளர் ஒருவரிடம் குறைப்பட்டுக் கொண்டார்.

பிற்பகல் மூன்று மணி.

ஓட்டலில் கூட்டம் குறைந்து, பரபரப்பு இல்லாத நேரம்.

அந்த நேரம்தான் அருணகிரி காப்பி சாப்பிட வருவது வழக்கம்.

அருணகிரி —

வாமன விலாஸ் ஓட்டலுக்கு எதிரேயுள்ள ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் வேலை பார்ப்பவர். இலக்கிய ரசிகர். இளகிய மனம் கொண்டவர். எப்பவாவது புதுக் கவிதையும் எழுதுவார்.

'வாமன விலாஸ்' டிபன் அவருக்குப் பிடிக்கும். அதை விட பால்மனம் மாறாத — கள்ளங்கபடமற்ற முருகனின் துருதுருப்பு ரொம்பவே பிடிக்கும். அவனிடம் அன்பாகப் பேசுவார்.

'குழந்தைகளை வேலை வாங்குவது சட்டப்படிக் குற்றம். அப்படி வேலை வாங்கும் நிறுவனத்தின் மீது கடும் நடவடிக்கையே எடுக்கலாம். ஆனால் சட்டத்தினால் மட்டும் நமது சங்கடங்கள் தீர்ந்து விடுகின்றனவா...?'

— அருணகிரி ஆழ்ந்து சிந்தித்தார். முருகனின் முன்னேற்றத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும்.

அன்று அந்த எண்ணத்துடன் காப்பி சாப்பிட வந்தார்.

''முருகா...''

''என்ன சார்?''

''நீ படிச்சிருக்கியா?''

''அஞ்சாவது முடிச்சிருக்கேன் சார்.''

''மேற்கொண்டு ஏன் படிக்கலே?''

''வசதியில்லே சார். எனக்கு அப்பா இல்லே. அம்மா ஊர்ல கூலி வேலைக்குப் போகும். இன்னொரு தம்பியும், தங்கச்சியும் இருக்காங்க. அவங்களுக்கெல்லாம் ஒருவேளை கஞ்சிக்கே கஷ்டம் சார்'' சொல்லும்போதே முருகன் அழுது விட்டான்.

''படிக்க ஆசையிருக்கா?''

''ஆசையிருக்கு. அப்புறம் அம்மாவுக்கு யார் பணம் அனுப்புவாங்க?''

''உனக்குச் சம்பளம் எவ்வளவு?''

''ஐம்பது ரூபா சார்...''

''ரொம்பக் குறைச்சலாத் தெரியுதே'' அருணகிரி பச்சாதாபத்துடன் சொன்னார்.

''சம்பளம் கிடக்குது சார். வயிறார மூணு வேளை சாப்பிடலாமே!''

அருணகிரி பேசவில்லை.

சோறு கண்ட இடம் சொர்க்கம் என்று நினைக்கிறான். சிறுவன்தானே. இது சாகவதமல்ல. நிரந்தரமாய் வறுமை நீங்க கல்வி... கல்வி. அது இவனுக்குக் கிடைக்க வேண்டும். அதை அவனுக்கு உணர்த்துவது. எப்படி? உணர்ந்து கொள்ளும் பக்குவம் அவனுக்கு இருக்குமா?

''சார்.... காப்பி ஆறுது'' முருகன் அவரது நினைவுத் தறியின் நூலை அறுத்தான்.

''முருகா... உங்க அம்மாவுக்கு நீயனுப்பற மாதிரி மாசா மாசம் இருபது ரூபா.. நான் அனுப்பி வைக்கிறேன். உனக்குச் சட்டைத் துணிமணி எடுத்துத் தர்றேன். நீ படிக்கத் தயாரா?''

''படிக்கிறேன் சார்... ஆனால்...''

''சொல்லு முருகா.''

''நா... எங்கே தங்கறது? எனக்குச் சாப்பாட்டுக்கு வழி?''

''அதுக்கெல்லாம் நான் ஏற்பாடு பண்றேன். படிச்சா... இன்னும் நல்ல வேலைக்குப் போகலாம். நிறைய சம்பாதிக்கலாம்...''

முருகன் படிக்க ஒப்புக் கொண்டான். அருணகிரி அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் உதவிகளையும் மனம் கோணாது செய்தார்.

முருகனுக்குச் சீருடை, புத்தகங்கள், எழுது பொருள்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்தார். மத்தியானம் பள்ளிக்கூடத்திலேயே சத்துணவுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்.

ஏழை மாணவர்கள் தங்கிப் பயிலுவதற்கான அரசாங்க ஹாஸ்டலில் அவனைச் சேர்த்து விட்டார்.

புதிய சூழ்நிலை; புதிய முகங்கள்.

முருகன் உற்சாகமாய்ப் பள்ளி செல்லத் தொடங்கினான்.

அந்தச் சமயத்தில் அருணகிரிக்குப் பம்பாய் செல்ல வேண்டிய அலுவலக உத்தரவு வந்தது. பம்பாயில் மூன்று மாத காலப் பயிற்சி. அது பதவி உயர்வு பெறுவதற்கான பயிற்சி. கட்டாயம் கலந்து கொண்டே தீர வேண்டும்.

அருணகிரி பம்பாய் சென்று விட்டார்.

பம்பாயிலிருந்து ஊர் திரும்பிய அருணகிரி, அன்று காலையே முருகனைக் காண அவன் படிக்கும் பள்ளிக்கூடத்திற்கு விரைந்தார்.

பள்ளியில் முருகன் இல்லை! அவர் அதிர்ச்சி அடைந்தார்.

முருகன் மீண்டும் 'வாமன விலாஸ்' ஓட்டலில் வேலைக்குச் சேர்ந்து விட்டான் என்று பள்ளியில் சொன்னார்கள்.

சினம் கொண்டவராய் அவனைக் காண ஓட்டலுக்கு ஓடோடி வந்தார்.

சாப்பிடுவோர் நடமாட்டம் குறைந்துபோனதாகக் கூட்ட நேரம்.

''வாங்க... அருணகிரி சார், பம்பாயிலிருந்து எப்ப வந்தீங்க?'' வரவேற்றார் முதலாளி.

அருணகிரியைப் பார்த்தவுடன் முருகன், மிரண்டு போய் உள்ளே ஓடி ஒளிந்து கொண்டான். அதையும் அருணகிரி கவனித்து விட்டார்.

''டேய் முருகா...! யார் வந்திருக்காங்க, பார்...'' ஓங்கிக் குரல் கொடுத்து முருகனை அழைத்தார் முதலாளி.

''உள்ளே போய் உக்காருங்க., சூடா ரவா தோசை போடச் சொல்றேன்.''

அருணகிரி எதுவுமே பேசத் தோன்றாமல் உள்ளே சென்று அமர்ந்தார்.

நீரில் நனைந்த பூனை போல் அவர் முன் முருகன் வந்து நின்றான்.

''ஏண்டா... படிப்பை விட்டுட்டே... என்னை ஏமாத்திட்டியேடா?'' வெறுப்பை உமிழ்ந்தார் அருணகிரி.

''சார் அம்மாவும் படிக்கத்தான் சொன்னாங்க. பள்ளிக்கூடத்துல மத்தியானம் சத்துணவு கிடைக்குது. ஹாஸ்டல்ல காலையிலே கோதுமைப் பொங்கல், ராத்திரி தயிர் சோறு தர்றாங்க...''

''அப்புறம் ஏண்டா... படிப்பை விட்டே...''

''என்னை மன்னிச்சிடுங்க சார். கால் பரீட்சை லீவு நான் ஸ்கூல்ல சேர்ந்த ஒரு வாரத்துல வந்துட்டுது. ஹாஸ்டலையும் மூடிட்டாங்க. லீவுல ஊருக்குப் போனேன். அங்கே போனா வழக்கம் போல பசி... பட்டினி. என்னால இருக்க முடியலே. இங்கே முதலாளி கோபக்காரர்தான்... ஆனால் வயித்துக்கு வஞ்சனையில்லாம சோறு போடுவாரு. அதனால அம்மாகிட்டே கூட சொல்லிக்காம.. மறுபடியும் இங்கே வேலைக்கு வந்துட்டேன் சார். என்னை மன்னிச்சிடுங்க சார்.''

அருணகிரி கலங்கிய தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.



''இவரைத் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக்கலாம். நல்லாப் பேசுவாரு.''

''நல்லா ஏசுவாரா?''

''தேர்தல் பிரசாரத்துக்குத் தொண்டர்கள் ஆளுக்கு ஒரு சைக்கிள் கேக்கறாங்க.''

''எதுக்கு? ஆளுக்கு ஒரு சைக்கிள் செயின் மட்டும் வாங்கிக் குடு, போதும்.''



பக்திப் பண்ணையில் வீர விவசாயம்!

தன்னம்பிக்கை ஊட்டும் புத்தகங்கள் தமிழில் அவ்வளவாக இல்லையே என்று சிலர் அலுத்துக் கொள்கிறார்கள். ஆங்கிலத்தில் உள்ள **"How to lead a successful life"** போன்ற புத்தகங்களைப் படிப்பதைப் பெருமையாகக் கூட நினைக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை தன்னம்பிக்கை இறக்குமதி செய்யப்படுவது மகா கேவலம். அது இந்த மண்ணில் விளைய வேண்டும். நமது மனத்தில் பயிராக வேண்டும். இந்த வீர வேளாண்மைக்கான வித்து சமயப்பண்ணையில் கிடைக்கிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கருத்தில், வாழ முடியும் என்ற நம்பிக்கை தொனிக்க ''நல்ல வண்ணம் வாழலாம்'' — என்று முழங்கிய திருஞான சம்பந்தர் ஆங்கிலேயரா? சூரியன் அடிக்கடி தன்னைப் புதுப்பித்துக் கொள்வது போல், சூரியோதயம் தோறும் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ளச் சொன்னாரே பாரதி, இன்று புதிதாய்ப் பிறந்தோம்'' என்றாரே... அவர் என்ன மேலை நாட்டுச் சிந்தனையாளரா?

இந்த மண்ணின் இலக்கியங்களில், இதிகாசங்களில் பக்தி வடிவான பாட்டுப் பண்ணைகளில் நம்பிக்கை நாற்று நிறையவே இருக்கிறது. கடவுளுக்கு நம்பர் என்று ஒரு பெயர். என்ன பொருள்? நம்மவர், நம்பிக்கைக்குரியவர் என்று பொருள்.

கடவுள் நம்பிக்கை என்பது தன்னம்பிக்கையின் எதிர் என்பது பகுத்தறிவுவாதிகளின் கணிப்பு. சுயமுன்னேற்றத்தின் தடையே கடவுள் நம்பிக்கை என்பது நாத்திகர்கள் தீர்மானம். இதை நான் நிராகரிக்கிறேன்.

தன்னம்பிக்கை தண்ணீர் என்றால், கடவுள் நம்பிக்கை பனிக்கட்டி. தன்னம்பிக்கை தடம் புரண்டால் ஆணவமாகி அழிவு தரும். ஆணவமற்ற தன்னம்பிக்கையே கடவுள் நம்பிக்கை என்பது சமய ஞானிகளின் அனுபவம். என்னால் முடியாது என்று சோர்ந்து விழுந்த பார்த்தனை பகவான் எழுப்புகிறார். இது பகவத் கீதை. பரந்தாமன் மீது வைத்த நம்பிக்கை பார்த்தனுக்குத் தன்னம்பிக்கை ஆனது. பாரதப் போரில் வெற்றி தந்தது.

''என்னால் எதுவும் முடியாது'' — இது கோழைத்தனம். ''என்னால் எல்லாமே முடியும்'' — இது அகங்காரமான முட்டாள்தனம். ''எது என்னால் முடிய வேண்டுமோ, அதனை முடிக்க என்னால் முடியும், கடவுள் கருணை இருந்தால்'' — என்பதே சரியான வாழ்க்கைப் பாதை.

அது ஒரு கதலிவனம். வாழைக்காடு. உரோமங்கள் அடர்ந்த முதிய குரங்கு ஒன்று முழுமுழுதும்படி அடக்க ஒடுக்கமாய் எதிலோ நிலைத்திருக்கிறது. சலனமே வடிவாய் இருப்பது குரங்கின் இயற்கை. அதனாலேயே அலைபாயும் மனத்தைக் குரங்கு மனம் என்றனர். ஆனால் இந்தக் குரங்கு அதிசயக் குரங்கு. சலனமற்ற தியானத்தில் நிலைத்திருக்கிறது.

மனைவிக்குப் பூப்பறிக்க அந்த வனத்தின் வழியே வருகிறான் ஒரு முரட்டு மனிதன். அவன் வலிமையின் வார்ப்பு, மாமிச இரும்பு. உயரமான உருவம். மனத்தில் மட்டும் மென்மை. அவன் ஒரு மானுடப் பலா. இந்த உள்ளமென்மை இல்லை என்றால் பெண்டாட்டிக்குப் பூப்பறிக்க இத்தனை சிரமங்கள் எடுத்துக் கொள்வானா?

அவனது வழியில் ஏதோ கிடக்கிறது. மிதிக்காமல் போகச் சொன்னது அவனது மிருதுவான இதயம். தாண்ட முடியாதபடி பண்பாடு தடுக்கிறது. என்ன அது? ஓ அந்தக் கிழக்குரங்கின் நீளவால்!

இவர்கள் வேறு யாரும் இல்லை. அனுமனும், பீமனும். அனுமனுக்குப் பீமனைத் தெரியும். பீமனுக்கோ இவர்தான் அனுமார் என்று தெரியாது. குரலை உயர்த்தி பீமன் கர்ஜித்தான்.

''ஏ கிழக்குரங்கே, வாலைச் சுருட்டு! இப்படியா வழியில் வாலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள்?'' குரங்கு நகரவில்லை. மீண்டும் உறுமினான்:

''கிழட்டுக் குரங்கே... வாலைச் சுருட்டவில்லை என்றால் ஒரே அடி... ஆமாம்.. சொர்க்கம் போய் விடுவாய்!''

அனுமன் தன் சுருங்கிய விழிகளை மெல்லத் திறந்து பார்த்தார். ''தம்பி நானே சொர்க்கம் போக மாட்டாமல் அலுத்துக் கொண்டுதான் இங்கு இருக்கிறேன். ஏதோ உன் புண்ணியத்தில் அனுப்பி வையேன். போகிறேன்'' என்றார்.

''வாயைப் பார் வாயை. அனுமார் கடல் தாண்டியதில் இருந்து எல்லாக்

சகிசிவம்



குரங்குக்கும் தானே அனுமார் என்று நினைப்பு. வழியை விடு. வாலை எடு. கிழக் குரங்கே!''

''தம்பி, என்னைக் கிழம், கிழம் என்கிறாயே... நாளைக்கு உனக்கு முதுமை வராதா? கொஞ்சம் மரியாதையாகப் பேசு.''

''ஆனாலும் இந்தத் திமிர் உனக்கு ஆகாது. கிழக் குரங்கே வாலை நகர்த்து!''

''அப்பா, கிழம் என்பதால்தான் என் வாலை என்னால் நகர்த்த முடியவில்லை. முதுமை வந்தால் உறுப்புகள் செயல் இழந்து போகும். இந்த வாலை நீயே கொஞ்சம் நகர்த்தி விட்டுப் போயேன்.''

தன்னால் எல்லாம் முடியும் என்றிருந்த பீமன் அலட்சியமாக விரல்களால் வாலை அசைத்தான். முடியவில்லை! இடது கையால் நகர்த்தினான், நடக்கவில்லை! இரண்டு கைகளாலும் நகர்த்தினான் இம்மி கூட வால் அசையவில்லை! அனுமனோ 'ராம்' 'ராம்' என்று ஜபித்தபடி அசையாது இருந்தார்.

பீமனுக்கு வியர்த்துக் கொட்டியது. தோல்வியின் தாக்கம் மனத்தை வாட்டியது. பலம் கொண்ட மட்டும் முயற்சி செய்தும் பலன் மட்டும் பூஜ்யம். தன்னால் முடியாது என்று ஆனதும், ''கண்ணா, என்னைக் கைவிடலாமா?'' என்று மனத்தாலேயே வேண்டினான்.

கண்ணன் கருணையில், எதிரில் இருந்த குரங்கின் சுய வடிவம் பீமனுக்குத் தெரிந்தது. நித்யபிரம்மச்சாரியாய், நவவியாகரணப் பண்டிதனாய் ஸ்ரீராம பக்தனாய் விளங்கிய அனுமனைக் கண்டதும் 'அண்ணா' எனக் கதறிக் கொண்டு அவர் காலில் விழுந்தான் பீமன்.

ஆனந்தக் கண்ணீருடன் அவனை வாரி அணைத்தார் அனுமன். ''தம்பி, நாம் இருவரும் சமமான பலசாலிகள். ஆனால் நீ உன்னை மட்டும் நம்பினாய். நான் ராமனை நம்பினேன். எல்லையற்ற அவன் துணையிருந்தால் எதையுமே ஜெயிக்க முடியுமப்பா!''

அழுது தொழுதான் பீமன். ''அண்ணா, என் ஆணவம் அகன்றது. பாரதப் போரில் அர்ச்சுனன் தேரில் கொடியாய் இருந்து தாங்கள் கூத்தாட வேண்டும். எங்கள் பலத்தோடு உங்கள் ஆசியும் இருந்தால் வெற்றி நிச்சயம்.''

''அப்படியே'' என்றார் அனுமார்.

இராமாயணக் கதையில் அபரிமிதமான பலசாலி அனுமன். மகாபாரதக் கதையில் அபரிமிதமான பலசாலி பீமன்.

இருவருமே வாயு பகவான் பிள்ளைகள்.

அதனால்தான் அண்ணன் தம்பி உறவு வந்தது.

அது ஏன் இந்த இருவர் மட்டும் இத்தனை பலசாலிகள்? காரணம் உண்டு. ஐம்பூதங்களில் காற்று பலமானது. காற்றைக் கட்டியவர்கள் பலசாலிகள். அனுமனும் பீமனும் காற்றின் மைந்தர். அதாவது காற்றைக் கட்டியவர்கள்.

பிராணாயாமம் அல்லது ஏதேனும் ஒரு ஒழுங்கான மூச்சுப் பயிற்சி செய்கிறவர்கள் திடசாலிகள். யோகிகள் காற்றைக் கட்டினால் மனத்தைக் கட்டலாம் என்பது யோகசாரம். கோபம், தாபம், பசி இவை வரும் போது மூச்சுக் காற்றைக் கவனியுங்கள். அது தாறுமாறாகப் போய்க் கொண்டிருக்கும்! உணர்ச்சிவசப்பட்டால் காற்று அலைபாயும். மாறாகக் காற்றை நேராக்கினால் உணர்ச்சி நேராகி, மனம் நேராகி வலிமை பெறும். இது மன வலிமைக்கான வழி.

காற்றின் வலிமை பற்றி சந்தேகம் வேண்டாம். மூட்டை தூக்கும் தோழரைப் பாருங்கள். மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு 100 கிலோ அரிசியை அப்படியே தூக்குவார். கீழே போட்டதும் பெரிய மூச்சு விடுவார். அவரா மூட்டையைத் தூக்கினார்? அவரது அடக்கி வைத்த காற்றுக்கு அவ்வளவு பலம்!

லாரியில் இரும்பு டன் டன்னாகப் போகிறது. எது தாங்குகிறது? லாரியா? டயரா? ட்யூபா? - ட்யூபில் இருக்கும் காற்றுதான் இத்தனை எடையையும் தாங்குகிறது! காற்றை அடக்கினால் உடல் வலிமை, மன வலிமை ஏதேனும் பிராணப் பயிற்சி அவசியம் தேவை.

காற்றின் புதல்வர்கள்தான் அனுமனும், பீமனும். அவர்களில் அனுமன், பீமனை விட வலிமையானவன் என்பது ஏன்? பீமன் ஒழுக்கமானவன்தான். பிற பெண்டிரை விரும்பாத நெறியாளன் என்றாலும், பிரம்மச்சாரி இல்லை. பிரம்மச்சார்யம் அதிக வலிமை தரும் ரகசியம். இல்லறத்தானை விட பிரம்மச்சாரி பலசாலி. அனுமனது உடல் ஆற்றலுக்கும் அது ஒரு காரணம்.

வெற்றியின் காரணம், பீமன் தன்னை மட்டும் நம்பினான். அனுமன் தன் பலத்தோடு ராம நாமத்தை நம்பினான்.

வாழ்க்கையில் முன்னேற தன்னம்பிக்கை வேண்டும். வாழ்க்கை முழுமை பெற கடவுள் நம்பிக்கை வேண்டும். திறமைமிக்க, தன்னம்பிக்கை மிக்க சில தலைவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருந்திருந்தால் இன்னும் நிறைய நன்மை விளைந்திருக்கும். நாட்டு நலன் கருதி அவர்களுக்குக் கடவுள் உண்மை புரியப் பிரார்த்திக்கிறேன். என் பிரார்த்தனை வெற்றி பெறும் என்று நம்புகிறேன், கடவுள் கருணையால்.

(இன்னும் சொல்வேன்)



"கட்சிக் கூட்டத்திலே என்னங்க முடிவாச்சு?"

"ரெண்டு பேருக்கு இங்கேயே முதலுதவி குடுத்துட்டு வீட்டுக்கு அனுப்பறதுன்னும், நாலு பேரை மருத்துவமனைலே 'அட்மிட்' பண்றதுன்னும் முடிவு பண்ணினாங்க...!"



• மதத்தில், பக்தி என்பது முக்திக்கு வழிகாட்டியதாக இருக்கலாம். ஆனால், அரசியலில் அந்தப் பக்தி சர்வாதிகாரத்திற்கு அழைத்துச் செல்லும் அழிவுப் பாதையாகத்தான் இருக்கும். தலைவர்களிடம் அளப்பரிய பக்தி செலுத்தி அவர்களைத் தெய்வமாக்காதீர்கள். அப்படிச் செய்வது அவர்களைச் சர்வாதிகாரியாக மாற்றிவிடும்!

— டாக்டர் அம்பேத்கார்.

தகவல்: மனோபாரதி.


MAY 1991

INTRODUCE YOUR CHILD TO GOOD READING THIS SUMMER!


GIVE HIM **GOKULAM**




OWLS — Part II — a feature



THE UGLY DUCKLING
— a popular tale retold.



PICTURE STORIES



A PICTURE CROSSWORD

AND MORE!

A COLOURFUL CALENDAR ON THE CENTER-SPREAD!

BUY YOUR CHILD A COPY TODAY!

96 PAGES FOR JUST Rs. 3/-

GOKULAM, GUINDY, MADRAS - 600 032.

ஆகாசத் தாமரை

16

சடகோபன் போன பிறகு மஞ்சுளா, சந்தியாவையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அப் பார்வையில் கோபமோ, வெறுப்போ எதுவும் தெரிய வில்லை.

''என்ன அப்படிப் பாக்கறீங்க?''

''ஒண்ணுமில்லே... நீயும் ஒரு பெண்ணா பொறந்துட்டு ஒரு சவாலை ஏத்துண்டு சண்டை போடறே. நானும் அதேதான் செய்யறேன். ஆனா சவால் வேற வேற வகையா இருக்கலாம். நான் சொல்லறது புரியறதா?''

''புரியறது... ஆனா சவாலைச் சவாலுக் காக நான் ஏத்துக்கலே... எது நியாயம்னு நமக்குப் படறதோ, அந்த நியாயத்துக்காகப் பேசறது, சவால்னு சொல்ல முடியாது. அதைச் சவாலா நினைக்கறதே, இப்போ இருக்கிற நம்ப சமூதாயத்தைப் பத்திய விமர்சனம்.''

மஞ்சுளா அவள் சொல்வதை ஜீரணித் துக் கொள்வது போல், சில விநாடிகள் மௌனமாக இருந்தாள். பிறகு, ''எது நியா யம், எது அநியாயம்னு உன்னாலே சொல்ல முடியுமா? அவா அவா செய்யற தொழிலுக் கேத்த மாதிரி, நியாயம், அநியாயங்கிறத் துக்கு அர்த்தம் வேற வேறயா இருக்கும்னு ஏன் சொல்லக் கூடாது?''

''ரொம்ப சௌகர்யமான இலக்கணம். நமக்கிருக்கிற பல பிரச்னைகளுக்கும் காரணமே இப்படி நினைக்கிறதுதான். நம்ப ரெண்டு பேராலேயும் ஒருத்தரை ஒருத்தர் 'கன்வின்ஸ்' பண்ண முடியாது. லெட் அஸ் லீவ் இட். நான் ஒரு முக்கியமான 'கா'ரணத் துக்காக உங்களைப் பார்க்க வந்தேன். அதைப் பத்திப் பேசுவோம்,'' என்றாள் சந்தியா.

''என்ன?''

சந்தியா இரசாயனத்தொழிற்சாலையைப் பற்றிக் கூறினாள்.

''இது ரொம்ப அக்கிரமம். சாவ்லா அவர் 'ப்ளாட்'டை விக்கத் தயாராக இல்லே. அவரை எப்படி வற்புறுத்த முடியும்? அதோட இல்லாம, ரசாயனத் தொழிற் சாலையினாலே ஏற்படப் போற 'பொல்லூஷன்' ஒரு பெரிய பிரச்னையாகப் போறது,'' என்றாள் சந்தியா.

''நான் என்ன செய்யணுங்கிறே?'' என்று கேட்டாள் மஞ்சுளா.

''உங்க செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த 'ஃபாக்டரி' வராம நீங்க பாத்துக்க ணும்.''

'''டு டால் ஆன் ஆர்டர்'. இந்தப் பெரிய உத்தரவை என்னாலே நிறைவேத்த முடியு மான்னு எனக்குத் தெரியலே...'' என்று கூறிக் கொண்டே புன்னகை செய்தாள் மஞ்சுளா.

''நாங்க ஒரு 'வெல்ஃபேர் கம்யூன்' அங்கே அமைக்கலாம்னுருக்கோம். பள்ளிக் கூடம், கிளினிக், விளையாட்டு மைதானம், 'ஓபன் ஏர் தியேட்டர்' பெரிய திட்டம்.. மாடல் வில்லேஜ்...''

''கேட்க நன்னாத்தானிருக்கு... பட்...''

''சொல்லுங்க...''

''நானும் அந்தக் கம்பெனியிலே, பங்கு வாங்கியிருக்கேன். இப்போ 'ஃபாக்டரி' கட்டாதீங்கோன்னு எப்படிச் சொல்றது?''

'''பொல்லூஷன்' பத்தி உங்களுக்குக் கவலையே இல்லையா?''

''இதோ பாரு.. சந்தியா... 'பொல் லூஷன்'னு பாத்தா, நம்மாலே ஒரு தொழிற் சாலையும் கட்ட முடியாது... கெடியாரத் தைப் பின்னாலே தள்ளி வச்சக்கணும்னா, வச்சுக்கலாம்.''

''ஆன்ட்டி, அது ஒரு 'ரெஸிடன்ஷியல் ஏரியா.' அரசியல்வாதிகளும், 'ரியல் எஸ்டேட்'காரர்களும் சேர்ந்துண்டு ஜனங் களை ஏமாத்திக் கொள்ளை கொள்ளையா சம்பாதிக்கிறாங்க...''

''சாவ்லா என்ன சொல்றார்?''

''விக்க முடியாதுங்கிறார். கோர்ட்டுக் குப் போகப் போறார். இந்த 'ஸிவில் கேஸ்' முடியறத்துக்கு ரெண்டு மூணு வருஷமாவது ஆகும். ஆனா அது வரைக்கும் நாங்களும் ஒண்ணும் கட்ட முடியாது. இதுதான் பிரச்னை.''

இவள் கூறுவது உண்மைதான். சாவ்லா கோர்ட்டுக்குப் போனால், பிரச்னை தீரப் பல வருஷங்களாகும். அதற் குள் எத்தனை மந்திரி சபை மாற்றமோ, யாருக்குத் தெரியும்?

'நீ மந்திரியைப் பாரேன்' என்றாள் மஞ்சுளா.

''மந்திரியையா? நீங்க பாத்துப் பேசினா நன்னாருக்கும்.''

''அதான் சொன்னேனே, துரதிர்ஷ்ட வசமா நானும் அந்தக் கம்பெனியிலே 'ஷேர்' வாங்கியிருக்கேன். நான் இப்போ என்னையே 'காண்ட்ரடிக்ட்' பண்ணிக்க முடியாது. நான் ஃபோன் பண்ணிச் சொல் றேன், நீ போய்ப் பாரு...''

இந்திரா பார்த்தசாரதி

''சொன்னா கேக்கக் கூடியவரா? எப்படிப்பட்டவர்?''

''பத்து நா முன்னாலே ஒரு 'மீடிங்'லே பாத்தேன். எனக்குக் கேக்கக் கூடியவர்ன்னு நான் படறது. நாட் எ யங் மேன். அறுபத்திரண்டு வயசிருக்கலாம். மிருதுவான குரல். லக்னௌகாரர்.''

''சரி இப்பொவே சொல்லுங்கோ...''

மஞ்சுளா 'டயரி'யை எடுத்துத் தொலைபேசி எண்ணை ஒரு சிறிய தாளில் குறித்துக் கொண்டு, 'ஃபோன்' செய்தாள்.

அவள் தன்னை அமைச்சரின் செயலரிடம் அறிமுகப்படுத்திக் கொண்ட பிறகு, அவரிடம் பேச வேண்டுமென்றாள்.

அமைச்சரின் குரல் கேட்டது.

''நான்தான் மஞ்சுளா. 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கமிட்டி' கூட்டத்தில் அன்று சந்தித்தோம். உங்களுக்கு நினைவிருக்கலாம்.''

''எஸ்... எஸ்.. நான் என்ன செய்ய வேண்டும், மேடம்?''

''எனக்கு மிகவும் தெரிந்த பெண், சமூக சேவகி, உங்களைச் சந்திக்க விரும்புகிறாள். உங்களுக்கு எப்பொழுது சௌகர்யமாக இருக்கும்?''

''உடனே வரச் சொல்லுங்கள். இன்று மதியம் நான் 'டூர்' போகிறேன். வர பத்து நாளாகும். என்ன விஷயம்?''


''அவள் வந்து சொல்லுவாள்.''

அமைச்சரின் அந்தரங்கச் செயலர் ஒரு பெண், சிந்திப் பெண்ணாக இருக்கலாமென்று சந்தியாவுக்குப் பட்டது.

சற்று அளவுக்கு மீறிய 'மேக்–அப்' ஓர் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வரவேற்பு இடத்தில் அமர்ந்திருக்க வேண்டிய பெண், புழுதி படிந்த 'ஃபைல்கள்' நிறைந்த அரசாங்க அலுவலகத்தில் என்ன செய்கிறாள் என்று நினைத்தாள் சந்தியா.

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு அமைச்சர் சந்தியாவை அழைத்தார்.

மஞ்சுளா சொன்னது சரிதான், அறுபத்



திரண்டு வயசிருக்கலாம். மிகவும் சிறிய உருவம். பெரிய மேஜையின் எதிரே நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் போது, தலை மட்டும் தெரிந்தது.

காது, மூக்கு எல்லாம் மிகத் தடிமனாக இருந்தன.

அந்தச் சிறிய உருவத்துக்கு முகம் மிகப் பெரிதாகத் தெரிந்தது.

''வாருங்கள்... அங்கு போய் உட்காரலாம்'' என்று சோபாவைச் சுட்டிக் காண்பித்தார் அமைச்சர்.

ஷெர்வானி, பைஜாமா அணிந்திருந்தார்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

சந்தியா சொன்னாள்.

''நீங்கள் எத்தனை நாட்களாகச் சமூகச் சேவையிலிருக்கிறீர்கள்? உங்களைப் பார்த்தால் இருபத்தைந்து வயதுக்கு மேலிருக்காதென்று தோன்றுகிறது...''

சந்தியா, பதில் கூறாமல், புன்னகை செய்தாள்.

''உங்கள் வயது?''

''அது முக்கியமா?''

''நோ... நோ... நீங்கள் என் பெண் மாதிரி இருக்கிறீர்கள்...'' என்று கூறிக் கொண்டே சோபாவில் சற்று நகர்ந்து அவள் தோளைத் தட்டினார் அமைச்சர்.

சந்தியா சொன்னாள். ''உங்கள் உதவி தேவை. நீங்கள் அந்த இடத்தை 'ரியல் எஸ்டேட்காரர்கள்' கையில் சிக்காமல் உதவ வேண்டும்''

''எப்படி முடியும்?''

''அது குடியிருப்பு இடம். அரசாங்கம் உத்தரவிட்டு ரசாயன தொழிற்சாலை வராமல் பார்த்துக் கொள்ள முடியும்.''

''ஸ்ரீமதி மஞ்சுளா உங்களுக்கு உறவா?''

''இல்லை.''

''மிகவும் துணிகரமான பெண்மணி. ஒரு பெரிய தொழில் நிறுவனத்தை நிர்வகிக்க வேண்டுமென்றால் அசாத்திய துணிவு வேண்டும்.''

> **நீதிபதி: குற்றம் ருசுவாகலைன்னுதான் விடுதலை பண்ணிட்டேன். அதுக்காக நீ என்னைக் கையெடுத்துக் கும்பிட அவசியமில்லை.**
>
> **இருடன்: அதுக்கில்லைங்க எசமான், அடுத்த தடவை திருடும் போதாவது மாட்டிக்காம திருடணும்னு ஆசீர்வாதம் பண்ணுங்க...!**
>
> **— செங்குன்றம் ரமேஷ்ராம்.**



சந்தியா பேசாமலிருந்தாள்.

''நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்?''

சந்தியா சொன்னாள்.

''இத்தனை படிப்பு படித்து விட்டு எதற்காக இப்படி சமூக சேவை என்று அலைகிறீர்கள்? ஏதாவது லாபம் உண்டா? என்னால் உங்களுக்கு நல்ல வேலை தர முடியும். உங்கள் படிப்புக்கு ஏற்ற வேலை, திறமைக்கு ஏற்ற வேலை. அமெரிக்கா போகிறீர்களா?''

சந்தியா கோபத்தை அடக்கிக் கொண்டு, சிறிது நேரம் பேசாமலிருந்தாள்.

''நீங்கள் இப்பொழுது விவாதிக்க வந்திருக்கும் பிரச்னை ஒரு பெரிய விஷயமல்ல. இதை என்னால் உடனே தீர்த்து விட முடியும். ஆனால் உங்களுடைய திறமையெல்லாம் இந்த மாதிரி சின்னச் சின்ன விவகாரங்களைத் தீர்த்து வைப்பதில்தான் விரயமாக வேண்டுமா? உங்களுக்கு ஆற்றல் இருக்கிறது, உங்களுக்கு அழகு இருக்கிறது...'' என்று சொல்லிக் கொண்டே சந்தியாவின் இடக்கையை லேசாகப் பற்றினார் அமைச்சர்.

சந்தியா அமைச்சரின் கையைத் தட்டி விட்டு, மிக நிதானமான குரலில் சொன்னாள்: ''உங்களால் பிரச்னையை மிகச் சுலபமாகத் தீர்த்து வைக்க முடியுமென்றால், செய்யுங்கள்.''

''நான் கல்யாணமாகாதவன். என் தம்பிக்கு உங்கள் வயதில் ஒரு பெண் இருக்கிறாள். அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். படிக்கிறாள்.''

''நான் அமெரிக்காவுக்குப் போக விரும்பவில்லை. இந்தியாவில்தான் இருக்க விரும்புகிறேன்...

''நல்லதாய்ப் போயிற்று. என்னுடன் இருந்து விடுங்கள். என் மகள் மாதிரி...''


''எதற்காக? முதல் தடவையாகச் சந்திக்கிறோம். அதற்குள் என்னை உங்கள் வாரிசாக ஏற்றுக் கொண்டு விட்டீர்களே?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் சந்தியா.

''இதுதான் எனக்குப் புரியவில்லை. நம் இருவருக்குமிடையே பாரம்பரியமாக ஓர் ஒட்டுறவு இருந்திருக்க வேண்டும். நம்மை ஏதோ ஒன்று கூட்டி வைத்திருக்கிறது...'' என்று கூறிக் கொண்டே, இப்பொழுது சற்று ஆவேசத்துடன் சந்தியாவின் இரு கைகளையும் பற்றினார் அமைச்சர்.

அடுத்த கணம், அவர் கன்னத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சந்தியா எழுந்து நின்றாள்.

''உன்னைப் போல எத்தனை பேர்களை நான் பார்த்திருக்கிறேன் தெரியுமா, மகள் உரிமை கொடுத்து விட்டுப் பெண்டாள நினைக்கும் அயோக்கியர்களை? என் கோபத்துக்கு நீ தகுதியில்லை என்று நினைத்துத்தான் இதுவரை பேசாமலிருந்தேன். எதற்கும் ஒரு வரம்பு வேண்டும். உன் உதவியை ஒரு பெண் நாடி வந்



''தலைவர், அமைச்சராகிறதுக்கு முந்தியே இவ்வளவு பாதுகாப்போடு போறாரே?''

''சும்மாவா...! போன தடவை ஜெயிச்ச பிறகு மறுபடி முதல் முறையா இப்பத்தானே தொகுதிப் பக்கம் போறார்!''

— சீர்காழி வி. ரேவதி.

தாளென்றால், அவளை உடனே படுக்கை அறைக்கு அழைக்கிறாயே, வெட்கமாக இல்லை?'' என்று அந்த நிலையிலும் உணர்ச்சிவசப்படாமல், நிதானமான குரலில், ஆனால் கண்டிப்புடன் பேசினாள் சந்தியா.

''என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு தாறுமாறாகப் பேசுகின்றீர்கள்... உங்கள் தந்தை ஸ்தானத்திலிருக்கும் என்னைப் பற்றி இப்படி அவதூறாகப் பேசுகின்றீர்களே, உங்களை என்னால் போலீஸில் ஒப்படைக்க முடியும். தெரியுமா?''

''செய்யுங்கள்... நான் கவலைப்படவில்லை.''

''என் அதிகார வரம்பு உங்களுக்குத் தெரியாதென்று நினைக்கின்றேன்.''

''என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாதென்று நினைக்கின்றேன். தில்லியிலிருக்கும் எல்லா மாதர் அமைப்புக்களும் உங்கள் வீட்டை முற்றுகையிடுமாறு செய்ய என்னால் முடியும். தேர்தலை நம்பி வாழ்க்கை நடத்தும் உங்களுக்கு இது தேவைதானா என்று நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.''

''உட்காருங்கள். ஏன் எழுந்து விட்டீர்கள்? நீங்கள் வந்திருக்கும் காரியத்தைப் பற்றிப் பேசுவோம்...'' என்றார் அமைச்சர் புன்னகையுடன்.

''விஷயத்தைச் சொல்லிவிட்டேன். நீங்கள் ஒரு நொடியில் தீர்த்து வைப்பதாகச் சொன்னீர்கள். அதற்கான விலையையும் கூறினீர்கள். அந்த விலை என்னால் தர முடியாது என்பதுதான் உங்கள் துர்பாக்கியம்.''

''என்ன சொல்லுகிறீர்கள், வீணாக மனத்தைக் குழப்பிக் கொண்டு? படித்திருக்கிறீர்கள். சமூக சேவகி என்கிறீர்கள், இன்னுமா என்னைப் புரிந்து கொள்ளவில்லை?''

''புரிந்து கொண்டதினால்தான் பேசுகிறேன். சரி, எனக்கு நேரமாகிறது... பிரச்னைக்குத் தீர்வு காண்பது உங்கள் கையிலிருக்கிறது.''

''என் கையிலில்லை. நீங்கள் சற்று முன்னால் சொன்னது போல், தேர்தலின் போது கையேந்திச் செல்லும் நிலையில் நாங்கள் இருக்கிறோம். எங்கள் கஜானாவை நிரப்பும் காமதேனுக்களை நாங்கள் பகைத்துக் கொள்ள முடியுமென்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இது நான் மட்டும் எடுக்கும் முடிவல்ல. என்னை விட அதிகாரம் மிக்க பெரியவர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்..''

''இதை நீங்கள் அப்பொழுதே சொல்லியிருந்தால் நான் போயிருப்பேன்...''

''என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பமும் ஏற்பட்டிருக்காது என்கிறீர்கள். அப்படித்தானே?''

''இல்லை. நான் அப்படிக் கூற மாட்டேன். உங்கள் மீது எனக்குக் கோபமோ, அல்லது இதை ஒரு மனக் கசப்பான அனுபவம் என்றோ நான் நினைக்கவில்லை. வீதியில் நடக்கும் போது, நாம் அணிந்திருக்கும் ஆடையில் தூசு ஒட்டிக் கொண்டால் நாம் என்ன செய்கிறோம். அந்தத் தூசைத் தட்டி விடுகிறோம். அவ்வளவுதான், இல்லையா?''

''ஸ்ரீமதி மஞ்சுளா நினைத்தால் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்.

அவர் தான் சொன்னதைப் பொருட்படுத்தவேயில்லை என்பதைச் சந்தியாவால் உணர முடிந்தது. இதற்குக் காரணம், இன்று அவருக்கு ஏற்பட்டது முதல் அனுபவமாக இருக்காது என்று அவளுக்குத் தோன்றிற்று. 'மாதர் அமைப்புக்கள்' என்றதும் பயந்து விட்டார். ஒரு வகையில் பார்க்கப் போனால், இவர்கள் யாவரும் பரிதாபத்துக்கு உரியவர்கள்.

''என்ன பேசாமலிருக்கிறீர்கள்?'' என்றார் அமைச்சர்.

''ஸ்ரீமதி மஞ்சுளா எப்படி இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியுமென்று எனக்குப் புரியவில்லை. அவர்தாம் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தார். அவருக்கு உங்களைப் பற்றித் தெரியாதென்று நினைக்கிறேன்.''

''ஸ்ரீமதி மஞ்சுளா காமதேனுவாக இருக்க விரும்பினால்...'' என்று அவர் கூறி முடிப்பதற்குள், சந்தியா இடைமறித்தாள்.

''அவருக்கும் இந்த ஃபாக்டரியில் பங்கு இருக்கிறது. முடிவு உங்களுடையதாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.''

''அது நடக்காது'' என்றார் மந்திரி தீர்மானமாக.

''அப்படியானால், போராட்டந்தான் நடத்த வேண்டும்'' என்றாள் சந்தியா எழுந்து கொண்டே.

(தொடரும்)

○ பாலசுப்பிரமணியன், சென்னை.*

? அ. இ. மு. க. ஆட்சிக்கு வந்தால் மது விலக்கு வருமா? அப்படி வராதபட்சத்தில் கூட்டணி கட்சியான காங்கிரஸின் நிலை எப்படி இருக்கும்?

! காக்டெய்ல் பார்ட்டியில் கலந்து கொண்டு கையில் லிம்காவை வைத்துக் கொண்டு நிற்பவனைப் போலிருக்கும்!

○ ரேவதி சுந்தரராஜன, சென்னை.

? டி. என். சேஷன் இ. காங்கிரஸ் அனு தாபியாகச் செயல்படுவது போல் தெரி கிறதே?

! அதான் தாமரைச் சின்னம் பற்றிய அலசலைத் தேர்தலுக்கு அப்புறம் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டாரே!

○ த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? கலைஞர் தேர்தலில் போட்டியிடாததன் மர்மம் என்ன?

! நாம் போட்டியிடுவதை விட வேட் பாளர்களுக்காகப் பிரசாரம் செய்வதி லேயே நேரத்தைச் செலவிட விரும்புவதாக வும் தமது தொகுதியையும் ஆர்வம்மிக்க வேட்பாளருக்கு விட்டுக் கொடுக்க விரும்பு வதாகவும் அவர் கூறியது சரிதான். ஆனால் சந்தர்ப்பம் சரியில்லை. பலமான நிலையில் இப்படிப் பேசியிருந்தால் பெருந்தன்மை யாகக் கருதப்பட்டிருக்கும்; இப்போது சற்று பலவீனமான நிலையில் அதுவே பயமாகக் கருதப்பட இடமளித்து விட்டது. துரதிர்ஷ் டம்தான். மறுபடி போட்டியிடுவதாக அறிவிப்பு வந்து விட்டதென்றாலும் இடை யில் கட்சிக்கு ஏற்பட்டு விட்ட நலிவைச் சீர்செய்வது கஷ்டம்.

○ இரா. வனையாபதி, தோட்டக்குறிச்சி.

? ஜனதா தள கட்சியிலிருந்து அருண் நேரு அண்டு கம்பெனியார் ஜகா வாங்கு வது குறித்து...?

! காங்கிரஸிலிருந்து விலகி வி. பி. சிங் ஜனமோர்ச்சா ஆரம்பித்த போது அவருடன் இருந்தவர்கள் இவர்கள்

வைஜயந்திமாலாவைக் காங்கிரஸ் கைவிட்டு விட்டதே?



என்பதை எண்ணும்போது இப்போது இவர்கள் நடத்தை விசனத்துக்குரியதுதான். முக்கியமாக மண்டல் அறிக்கை குறித்தும் வேறு சில சமுதாயப் பொருளாதாரக் கொள்கைகளிலும் வி. பி. சிங்குக்கும் இவர் களுக்கும் இடையே கருத்து மாறுபாடுகள் உள்ளன. இதே நேரத்தில் இக் கொள்கை களில் வி. பி. சிங்குடன் கருத்து ஒற்றுமை காண்கிற ராம்விலாஸ் பாஸ்வான், ஷரத்யாதவ் போன்றோரின் செல்வாக்கு உயர, இவர்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள். வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் கமிட்டிகளில் கூட இவர்கள் இடம்பெற வில்லை. இதனாலெல்லாம் வெறுப்புற்று இவர்கள் ஒதுங்குகிறார்கள். ஆனால் ஒன்று. தேர்தல் முடிந்த பிறகு 'கட்சி மாறு கிறேன்' என்று கூட்டமாகப் புறப்படாமல், இப்போதே விலகி விடுவதுதான் யோக்கிய மானதாக இருக்கும்.



* விசனமும் குழப்பமும்



[illegible]



[illegible]

○ எஸ். நாரம்புநாதன், கரண்டை.


? ஜெயலலிதாவை எதிர்த்து தி. மு. க. சார்பில் நடிகை லட்சுமி போட்டியிடப் போகிறாராமே?

! அப்படி நடந்தால் இன்னொரு வெ. ஆ. நி.யாகி விடுவார்.

○ கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

? அஸ்ஸாமிலும் பஞ்சாபிலும் தேர்தலை நடத்த சிபாரிசு செய்யும் சந்திரசேகரின்

நீங்கள் கேட்டவை — தராசு



* பாக்கியசாலி — 2

* நகர வாங்கினோர்...!



* காங்கிரஸ் அறுதாரா??



* [illegible]



துணிச்சலான நடவடிக்கை பற்றி?

! விரைவில் நடத்தப்பட வேண்டியது தான். தயங்கித் தயங்கி ஒத்திப் போட்டுக் கொண்டிருப்பது தவறுதான். ஆனால் நாட்டின் பிற பகுதிகளில் தேர்தல் முடிந்து, பரபரப்பு ஓய்ந்த பிறகு, அந்த மாநிலங்களைக் கவனிப்பதுதான் புத்திசாலித்தனம். அப்போது வாக்காளர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க முடியும்; கவனத்தைச் சிதற விடாமல் அம் மாநிலங்களைக் கண்காணிக்க முடியும்.

o கே. சோமசேகர், காவேரிப்பட்டினம்.

? சிவாஜி தலைமையில் உள்ள ஜனதா தளம் என்ன ஆகும்?

! வீர வசனம் பேசி முறைத்துக் கொண்டு போனாலும் வாலைக் குழைத்துக் கொண்டு திரும்ப வந்து ஒண்டிக் கொள்ளும்.

o எஸ். இளையவன், படுகை.

? இந்தத் தேர்தல் எப்படி இருக்கும்?

! பணத்தின் செல்வாக்கு வாக்காளரை மயக்கும்; அதிகார துஷ்பிரயோகம் நடக்கும்; வன்முறை ஆங்காங்கே எட்டிப் பார்க்கும்; சொற்பொழிவுகளில் ஆபாச வசை மொழிகள் தலைவிரித்தாடும்; சினிமா மோகம் சிந்தனையைக் குழப்பும்; வாக்குறுதி மழை பாமர உள்ளங்களைக் குளிர்விக்கும்; இத்தனையையும் தாங்கிக் கொண்டு ஜனநாயகம் உயிர் பிழைக்கும்; துளிர் விட்டு நாளடைவில் தழைக்கும்.

o கே. ரமேஷ்பாபு, சேலம்.

? அரசியல்வாதிகள் தொகுதி மாறிப் போட்டியிடுவது ஏன்?

! அதே தொகுதியில் மீண்டும் நின்றால் அடிக்க வர மாட்டார்களா!

o டி. கே. சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்.

? தகுதியுள்ளவர்களுக்கு வாக்களித்தால் வோட்டுக்கள் சிதறி ஒரு நிலையான ஆட்சி ஏற்படுவதைப் பாதிக்காதா?

! தகுதியுள்ளவர்கள் மட்டுமே எம். எல். ஏ.க்களாகவோ அல்லது எம்.பி.க்களாகவோ தேர்ந்தெடுக்கப்படும் போது, அவர்களுக்கு ஒரு நிலையான ஆட்சி வழங்கும் தகுதி இல்லாமல் போய் விடுமா?

o சி.த. கருணாநிதி, மருதூர் தெற்கு.

? தேர்தல் ஆரம்பமாகும் இந்த வேளையில் தூக்கம் வராமல் அவதிப்படுகிறவர்கள் தலைவர்களா? தொண்டர்களா?

! வாக்காளர்களை மறந்து விட்டீர்களே!

o விஜயலக்ஷ்மி சுவாமிநாதன், திருச்சி.

? நாட்டைப் பற்றிக் கவலைப்படாத நிலை எப்போது வரும்?

! இப்போதே அந்த நிலைதானே!

o இரா. செல்வபாண்டியன், புத்தாம்பூர்.

? தென் சென்னையில் வைஜெயந்தி மாலா பாலி இ. காங்கிரஸில் கைவிடப்பட்ட நிலையில், அவருக்கு வேறு ஏதேனும் தொகுதி கிடைக்குமா?

! பம்பாயில் ஒரு பத்திரமான தொகுதி தருவதாக ராஜீவ் வாக்களித்திருக்கிறார். என்றாலும் தென் சென்னை போல் அவரால் அங்கே ஐஸ் மேல் நைஸாக நடக்க முடியாது!

o முஸ்தபா, தக்கோலம்.

? இந்தியாவில் மிகவும் பாக்கியசாலிகளான இருவரைக் குறிப்பிடவும்?

! 1. அறுபது கோடி கமிஷன் பெற்ற முன்னாள் பிரதமர், 2. 'அவர் அறுபது கோடி கமிஷன் பெற்றால் என்ன பெரிய பாவம்? நாட்டை அது எப்படி பெரிய அளவில் பாதிக்கப் போகிறது? நெடு காலத்திலிருந்தே கமிஷன்கள் வழங்கப்படுவது சகஜம்தானே?' என்று அதை நியாயப்படுத்துகிற இந் நாள் பிரதமர்.

---

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

பாலசுப்பிரமணியன்,
1/237, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
காந்தி நகர்,
சென்னை — 600 052.

நேற்றுவரை நந்தவனம்

3

''எங்கேடா உன் சூட்கேஸ்?''

நாகு, கையில் மஞ்சளில் நனைத்த புது வேஷ்டியை மடித்துச் சுருட்டி வைத்துக் கொண்டு இரைகிறார்.

''ஏன்... என்ன வேணும்?''

''எனக்கு ஒண்ணும் ஆக வேணாம். சித்தப்பாவும், பிள்ளையுமாய் நான் முழுக்க உட்கார்ந்து 'பேக்' பண்ணினீங்களே.. முகூர்த்த வேஷ்டி, பாலிகைக் கிண்ணம் இதையெல்லாம் எடுத்து வச்சுக்க வேண்டாமா? நல்லவேளை, பாட்டி வாசலுக்கு வந்து ஞாபகப்படுத்தினா...''

கீர்த்தி – அவரது கையில், சணலில் கோத்துக் கட்டியிருக்கும் மண்ணாலான பாலிகைக் கலசங்களையும், மஞ்சளில் நனைத்த புது வேஷ்டியையும் பார்த்து விட்டு இரைந்து சிரிக்கிறான்.

நாகு மாமாவின் முகம் கடுக்காயாய்ச் சிறுக்கிறது.

''என்னடா சிரிப்பு?''

''இல்லே... இதுக்காகவா இத்தனை பதற்றம்.. நீங்க ஓடி வந்த வேகத்தைப் பார்த்தா என்னமோ பாட்டிக்குத்தான் ஏதோ ஆயிடுச்சன்னு நினைச்சேன். மாமா, அல்ப விஷயத்துக்கெல்லாம் இப்படி டென்ஷனானா எப்படி?''

''அது என் பிறவிக் குணம். விட்டுத் தள்ளு. சூட்கேஸ் எங்கே...''

மீரா, சூட்கேஸை நாகுவிடம் தருகிறாள். கழுத்தில் தாலிச் சரட்டோடு பின்னிக் கிடந்த சங்கிலியில், சேஃப்டி பின்னில் மாட்டியிருந்த சாவியைக் கழற்றித் தர – கீர்த்தி, அவள் செய்கையையே வைத்த கண் வாங்காமல் பார்க்க, சித்தப்பாதான் அவனது கவனத்தைத் திருப்ப, தொண்டையைச் செருமுகிறார்.

''...க்கும். கீர்த்தி... ரொம்பவும் பின் ஸீட்டுக்குப் போகாதே... முன்னாலேயே இடம்பிடி...''

''பதினொண்ணு, பன்னெண்டாம் நம்பர் ஸீட் பிடிடா. முன்பக்க ஸீட்டுல உட்காராதே. யாரோ எம். எல். ஏ. வரப் போறதாப் பேசிட்டிருக்காங்க. அப்படி வந்தா நாம எழுந்திருக்க வேண்டியிருக்கும்.''

நாகு, பெட்டியைத் திறப்பதில் முனைந்திருந்தாலும், சித்தப்பாவின் பேச்சுக்கும் பதிலளிக்கிறார்.

''என்ன சாவி இது... அரை வேக்காட்டு முறுக்கு மாதிரி வளையறது...''

கீர்த்தி, மீராவை பஸ்ஸில் ஏறச் சொல்லி, ஜன்னலோரமாய்ப் பார்த்து உட்கார வைக்கிறான்.

''மீரு... யார் வந்து எழுப்பினாலும் நகராதே!''

''உம்...''

''நான் போய்க் கொறிக்கறதுக்கு ஏதாவது வாங்கிட்டு வர்றேன்...''

மீரா, தனது கைக்கடியாரத்தைப் பார்க்கிறாள்.

மணி ஏழரை.

''இப்பத்தானே சாப்பிட்டோம்? அம்மா வேற முறுக்கு அதிரசம்னு கல்யாண பட்சணங்களா ஒரு பை நிறையக் கொடுத்திருக்கா...''

''இரைஞ்சு சொல்லாதே. நாகு மாமா காதுல விழுந்து வைக்கப் போறது. ஏற்கெனவே பட்சணமெல்லாம் சிக்கு நாத்தம் வர்றதுன்னு கத்திண்டிருக்கார்.''

அவன் சொல்லி முடிப்பதற்குள் நாகு மாமா, ஒரு கையில் பெட்டியும், இன்னொரு கையில் சாவியுமாய் வந்து சேர்ந்து விட்டார்.

''டேய், உன் மாமனார் வாங்கித் தந்தப் பெட்டியைத் திறக்க அவர்தான் வரணும். இந்தா, இந்தப் பாலிகை கிண்ணத்தை எல்லாம் கூடையில் வை..''

''இப்பவே இதையும் எடுத்துட்டுப் போகணுமா?''

''நீ ஸ்திரமா எங்கே இருக்கப் போறியோ அங்கேதாண்டா இதெல்லாம் இருக்கணும்.. சம்பிரதாயம்..''

நாகு இன்னும் ஏதோ சொல்ல, கீர்த்தியின் அப்பாவும், சித்தப்பாவும் குறுக்கிட்டுத் தர்க்கம் செய்ய...

இதற்குள் தபதபவென வண்டிக்குள் கூட்டம் ஏற ஆரம்பிக்க –

மீரா, குழந்தை போல அவர்களை ஒரு வித சுவாரஸ்யத்துடன் கவனிக்கிறாள்.

'இந்த கும்பலில் நம்மைப் போல, புதுசாய்க் கல்யாணமான ஜோடி ஏதாவது இருக்கா...'

பஸ்ஸைச் சுற்றியுள்ள பிரயாணிகளில் வழியனுப்ப வந்தவர்கள் – பிரயாணிகள்

அனுராதா ரமணன்

என்று இனம் பிரித்துப் பார்க்க முடியாத நெரிசல்.

தனியார் பஸ்ஸானதினால் — டிரைவர் ஸீட்டுக்கு நேர் எதிரில் — மேலே வரிசையாய்ப் பிள்ளையார் லட்சுமி சரஸ்வதியிலிருந்து ஏசுநாதரும், குர்ரானின் புனித வாசகமும் வண்டியுள் ஏறுபவர்கள் எல்லாரையும் ஆசீர்வதிக்கும் பாவனையில் பார்த்துக் கொண்டிருக்க...

நெருக்கமாய்த் தொடுத்த மல்லிகைச் சரமும், ஊதுவத்தி மணமும், எல்லாவற்றையும் மீறி — 'மாமா உன் பொண்ணைக் கொடு' என்று டேப்பின் அலறலும் கொஞ்சம் புதுசாகவே இருக்கிறது மீராவுக்கு.

இத்தனை வயசுக்கும் அவள் — இது மாதிரி பஸ்ஸில் தொலை தூரப் பயணம் செய்ததில்லை.

கல்லூரியின் சார்பாக டில்லி வரையில் விமானத்தில் கூடப் பறந்திருக்கிறாள்.

அதையே அவள் அப்பா — சுமார் ஒரு மாதம் வரையில் வந்து போன மனிதர்களிடமெல்லாம் சொல்லிச் சொல்லித் தம்பட்டம் அடிக்காத குறைதான்.

''நம்ம மீரா பிளைட்டுல போயிட்டு வந்துட்டா தெரியுமோ? இன்னும் நானே போனதில்லே. ஒரு தரம் சான்ஸ் வந்தது. ஆபீஸ்லே போகச் சொன்னாங்க. என் ஒய்ஃபுக்கு பயம். வேண்டாம்னு பிடிவாதம் பிடிச்சு, அழுது ரகளை பண்ணிட்டா. மீராவையும் அனுப்ப மாட்டேன்னு ஒரே புலம்பல்தான். நான்தான் ஒரு அதட்டல் போட்டேன். இப்படியே பொத்திப் பொத்தி வச்சிட்டிருந்தா, நாளைக்கு மாப்பிள்ளை ஃபாரின்லேயிருந்து வந்தா — அவன் கூட அனுப்பி வைக்க வேண்டியதுதானே. அப்ப மாட்டேன்னு சொல்ல முடியுமான்னு... அனுப்பி வச்சா பாருங்கோ அவளுக்குச் சின்னதா, தலைசுத்தல் வயித்துப் புரட்டல் கூட இல்லையாம். அதெல்லாம் சில பேரோட தேக வாகுன்னு நினைக்கிறேன்..''

மீரா, டில்லி விமானப் பயணத்தின் போது கிடைத்த சின்னச் சின்ன ஜாம் பாக்கெட்டுகளையும், பிளாஸ்டிக் ஸ்பூன், சாக்லேட்டுகளையும் தன் தம்பிக்குக் கொண்டு வந்து கொடுத்ததையும் — அவன், அவற்றை வெகு நாள் வரை பத்திரமாய் வைத்திருந்ததையும் நினைத்துப் பார்க்கிறாள்.. சிரிப்பு வருகிறது.

"என்ன உனக்குள்ளேயே சிரிச்சுக்கிறே?''

கீர்த்தி கேட்கிறான்.

''உம்? ஒண்ணுமில்லே... நீங்க பிளேன்லே போயிருக்கீங்களா?''

அவள், பஸ்ஸின் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி நிற்கும் கணவனைப் பார்த்துக் கேட்கிறாள்.

''அய்யாவுக்கு உள்ளூர் பிளேன் எல்லாம் வசதிப்படாதும்மா. போறதா இருந்தா அமெரிக்கா, லண்டன், ஜப்பான் மாதிரி தொலைதூரப் பயணம்தான். இருக்



கட்டும்; ஒரு சான்ஸ் அடிக்காமயா போயிடும்?''

''அய்யய்யே... அப்படியின்னா நீங்க பிளேன்லே போனதே இல்லையா?''

அவளின் ரகசியமான சீண்டலில், கொஞ்சம் முகம் சிவக்கிறான் அவன்.

''நீ மட்டும் போயிருக்கியோ?''

''உம்... டில்லி வரைக்கும்.''

''ப்பூ... இதுக்குத்தானா இந்த அலட்டல்? பாரு, நாம பெங்களூருக்குப் பிளேன்லே போறோம்..''

அவள் சிரிக்கிறாள்.

''குழந்தை மாதிரி இது என்ன போட்டி.. இங்கே இருக்கிற பெங்களூருக்கு இருக்கவே இருக்கு பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்.. அங்கேயிருந்து உங்க அத்தானோட ஃபார்முக்கு சைக்கிள் ரிக்ஷா...''

மீராவின் கண்கள், இதைச் சொல்லும் போது குறும்பில் 'பளிச்' சிடுகின்றன.

''இரு... உன்னை பஸ் புறப்பட்டதுக்கு அப்புறம் கவனிச்சுக்கறேன்.''

அவன், ஜன்னல் கம்பியில் பதிந்திருந்த அவளுடைய மருதோன்றிச் சிவப்பேறிய விரல்களை — தனது உள்ளங்கையால் பொத்த —

''இந்த வீட்டுக்கு வாராவது வர்றாங்களா?''

மீரா, வெடுக்கெனத் தன் விரல்களை உள் பக்கமாய் இழுத்துக் கொண்டு திரும்பிப் பார்க்கிறாள்.

சராசரி உயரத்துக்கும் சற்றே அதிகமாய், கஞ்சி மொட மொடப்பு சேலை கசங்காமல் ஒரு கையால் நளினமாய்ப் பிடித்தபடி ஒரு பெண்...

வசீகரமான நீண்ட கண்களிருந்தும், சிரிப்பில்லாத சிடுசிடுப்பான முகம்.

''வர்றாங்க...''

மீரா, கொஞ்சம் தயக்கத்துடன் சொல்ல, அவள் 'சட்'டென அதே வரிசையின் இன்னொரு பகுதிக்கு நகருகிறாள்.

''வர்றாங்க, வரல்லைங்கறதைப் பளிச்சுனு சொல்லக் கூட இத்தனை யோசனை...''

மெல்லிய குரலில் அந்தப் பெண் முனகினாலும் — வார்த்தைகள் மிகத் தெளிவாய்...

கீர்த்திக்குள் வழக்கமான கோபம் எகிறுகிறது.

''அது என்ன... இவ கேட்டா உடனே 'டக்'குனு எழுந்து பதில் சொல்லணும்னு ஏதாவது சட்டம் இருக்கா என்ன.. இரு... உள்ளே வந்து ரெண்டு தட்டு தட்டறேன்.''

''ஐயோ... வேண்டாம்...''

மீரா, அவனது விரல்களைச் சேர்த்துப் பிடித்துக் கொள்ள சமய சந்தர்ப்பம் தெரியாத நாகு — இருவருக்கிடையேயும் மூக்கை நுழைக்கிறார்.

''கீர்த்தி... அவங்க யாரு தெரியுமோ?''

''யாரா இருந்தா எனக்கென்ன?''

''என்னடா அப்படிச் சொல்லிட்டே? டாக்டர் தெய்வநாயகின்னு கேள்விப்பட்டதில்லே? உங்க சித்திக்குக் கடைசி பிரசவம், அத்தையோட தலைச்சன் பிரசவம் — எல்லாம் இவங்கதான் பார்த்தாங்க. நல்ல கைராசிக்கார டாக்டரம்மான்னு ஊரே சொல்லும்...''

''.......''

''அது மட்டுமில்லே... எம். எல். ஏ. தருமராஜனோட மூத்த மருமக.. அதாண்டா.. உன்னோட காலேஜிலே ஒரு வருஷம் படிச்சானே குமரன்...''

''ஆமா...''

''அவனோட பெண்டாட்டி. ஒரு குழந்தை கூட இருக்கு. இந்த டாக்டரம்மாவுக்கும் அவனுக்கும் ஒத்து வரல்லே. இவங்க படிச்சவங்க... செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு.. எம். எல். ஏ. தருமராஜனைத் தெரியுமில்லே? மோசமான ஆளு. வீட்டுக்கு வந்த பொண்ணுகிட்டே எப்படி நடந்திட்டாரோ என்னமோ!''

''ஆனாலும் குமரன் நல்லவனாச்சே மாமா...''

''என்னத்தை நல்லவன்? காலேஜ்லே பரீட்சை சமயத்துல கேள்வித்தாளை அவுட்டாக்கினவன் நல்லவனா? இவனால காலேஜே சீரழிஞ்சதுன்னுதானே — இவனைக் காலேஜை விட்டுத் தூக்கினாங்க. அப்பன் புத்தியில் பாதியாவது இவனுக்கும் இருக்காதா... மகாலட்சுமி மாதிரி டாக்டர் பெண்டாட்டி... அவளை டைவர்ஸ் பண்ணிட்டு, மோட்டார் சைக்கிள்லே ஊரைச் சுத்தறான்...''

என்னதான் நாகுமாமா சொன்னாலும் மீராவுக்கு அந்தப் பெண் மீது — பரிவோ, பச்சாதாபமோ பிறக்கவில்லை. அதற்குக் காரணம் — அவள் சொல்லி விட்டுப் போன வார்த்தைகளாகக் கூட இருக்கலாம்.

கீர்த்திக்கு எதுவுமே மூளையில் பதியவில்லை. அவனது கவனமெல்லாம் — நாகுவையும், அப்பா, சித்தப்பாவையும் சீக்கிரமாய் அந்த இடத்தை விட்டுக் கிளப்புவதிலேயே இருக்கிறது.

''சரி... சரி... இந்த மாதிரி பிரைவேட் பஸ் எல்லாம் சொன்னா — சொன்ன நேரத்துல கிளப்ப மாட்டாங்க. அப்பாவுக்கு எட்டு மணிக்கெல்லாம் சாப்பிட்டு, ஒம்பது மணிக்கெல்லாம் படுத்துப் பழக்கம். மணி இப்பவே ஏழே முக்கால்... வண்டி ஏத்தியாச்சு இல்லே? கிளம்புங்களேன்...''

''போய்ச் சேர்ந்து லெட்டர் போடும்மா.

''அந்த ஸ்கூலில் பணம் பயங்கரமாப் பிடுங்கறாங்க.''

''அப்படியா?''

''ஆமாம்... பில்டிங் ஃபண்டோட மட்டுமில்லாம கட்டிடத்தை அவ்வப்போது ரிப்பேர் பண்ண ரிப்பேர் ஃபண்ட், வொயிட் வாஷிங் ஃபண்டெல்லாம் கூடக் கேட்கிறாங்க!''

— வி. சி. குமார்.

அவன் சோம்பேறி.. நீதான் போடணும்...''

இது அப்பா..

இத்தனை நேரம் வரையில், முதுகுக்குப் பின்னால் இரு கைகளையும் கட்டிக் கொண்டு, கிழக்கேயும், மேற்கேயும் பார்த்துக் கொண்டிருந்தவர், அவசரமாய்ச் சொல்கிறார்.

''கீர்த்தி... கையில இருக்கற பணம் போதுமா. ஹனிமூன் போறப்ப — கணக்கு பார்த்துச் செலவழிச்சிட்டிருக்க முடியாது. எதுக்கும் இந்தப் பணத்தை வச்சுக்க. நீ வச்சுக்காதே... மீராகிட்டே கொடுத்து வை...''

மீரா, கீர்த்தியின் தந்தையையே ஒரு கணம் இமைக்காமல் பார்க்கிறாள். 'சட்' டெனக் கண் கலங்குகிறது.

'எல்லா அப்பாக்களுமே இப்படித்தான் மேலே பாறையாகவும், உள்ளுக்குள் பஞ்சாகவும் இருப்பார்களோ..?'

நாகு இதற்குள் பஸ்ஸுக்குள் வந்து — எம். எல். ஏ. மருமகளிடம் இரண்டு வார்த்தை பேசி விட்டு, மீராவிடம் கீர்த்தியின் முகூர்த்த வேஷ்டியும், பாலிகை கிண்ணங்களும் அடங்கிய பிளாஸ்டிக் பையைத் தருகிறார்.

''உள்ளே வைக்க முடியலை..''

''பரவாயில்லே...''

''அந்தப் பாலிகைக் கிண்ணமெல்லாம் உடையக் கூடாது. குடித்தனம் நடத்தப் போற வீட்டுல — பரண் இருந்தா ஒரு பக்கமாப் போட்டு வை...''

''..........''


''மஞ்ச வேஷ்டி அப்படியே இருக்கட்டும். இன்னும் திருப்பதி பிரார்த்தனை ஒண்ணு இருக்கு. அப்ப முகூர்த்த வேஷ்டியோட அவனும், கூறைப் புடவையோட நீயுமாத் தான் போகணும்...''

''சரி மாமா...''

நாகு, அவசரமாய்த் தம் கண்களைத் துடைத்துக் கொண்டே சொல்கிறார்.

''அம்மா... ஏதோ கோபத்துல அப்பப்போ சீன வெடிச்சரம் மாதிரி வெடிக்கிறேனே தவிர — எனக்கு இந்தக் குழந்தை மேல அலாதிப் பிடிப்பு உண்டு... கொஞ்சம் பிடிவாதக்காரன் என்னை மாதிரி. நீதான் அனுசரிச்சிண்டு போகணும்.''

''......''



அவர், இவ்வளவு பேசியதே அதிகம் என்பது போல, பிளாஸ்டிக் பையை அவளிடம் கொடுத்து விட்டு பஸ்ஸை விட்டிறங்க...

கீர்த்தி, தனது சூட்கேஸை எடுத்து வந்து தலைக்கு மேலே உள்ள லக்கேஜ் வைக்கும் இடத்தில் வைத்து விட்டு, மீராவின் பக்கத்தில் அமருகிறான்.

''ஏய்.. வசதியா உட்கார்ந்துக்கோ..''

''நான் வசதியாத்தான் உட்கார்ந்திருக்கேன்...''

''நடுவுல இருக்கற கைப்பிடியைப் பின்னால தள்ளி விடட்டுமா...''

அவன், அவளைப் பார்த்து விஷமமாய்ச் சிரிக்கிறான்.

''ஏன்னா, கைப்பிடி இருக்கிறது எனக்கு வசதியா இல்லே...''

அவனது ஆர்வமும், கண்களில் மின்னும் காதலும் மீராவுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

ஒரு பெண்ணைத் தொடுவதிலும், அவளுடன் இப்படிப் பேசியே தன் வசம் இழுத்துக் கொள்வதிலும் ஆணுக்கு இத்தனை தீவிரமா...!

இதே ஆர்வமும், ஏக்கமும் கடைசி வரை இருக்குமா...?

எப்படி இருக்கும்? நாலு பேர் எதிரில் பஸ்ஸில் மனைவியை ரகசியமாய்ச் சீண்டுகிற புதுக் கணவன் — சரியாய் ஒரே வருஷத்தில் — இரண்டு படுக்கையறை கொண்ட ஃபிளாட்டில் கூடத் தன்னந்தனியனாய் — பெண்டாட்டியின் மூச்சுக் காற்றைக் கூட விரும்பாதவனாய் மாறுவதில்லையா என்ன...?

இதோ — இந்த டாக்டரம்மாவும் அவள் கணவனும் கூட கல்யாணமான புதுசில், இப்படியெல்லாம் அசடு வழிந்திருப்பார்கள் இல்லையா...?

கீர்த்தி — அவளது பஞ்சு போன்ற இடுப்பில் — மிருதுவாய்த் தடவுகிறான்..

''அதுக்குள்ள தூக்கமா?''

''உம்ஹூம்...''

''வீடியோவுல நல்ல லவ் சப்ஜெக்டா போட்டாத் தேவலை...''

''இல்லே... திருவிளையாடல் போடப் போறாங்க.. இப்பத்தான் ஒரு ஆள் கேசட்டைக் கொண்டு வந்து கண்டக்டர் கிட்ட கொடுத்துட்டுப் போனான்..''

''போச்சுடா...''

கீர்த்தி அலுத்துக் கொண்ட அதே நேரத்தில் — பஸ்ஸில் பயணிகள் ஏறுமிடத்தில் ஒரே பரபரப்பு...

கீர்த்தியும் ஆவலுடன் எட்டிப் பார்க்கிறான்.

''எம். எல். ஏ. தருமராஜன்தான் வி. ஐ. பி. ஸீட்டுக்கு வர்றாரு.. நான் அப்பவே சொல்லலே...''

பின்னால் யாரோ பேசிக் கொள்கிறார்கள்.

டாக்டர் தெய்வநாயகி, வண்டியை விட்டு இறங்க முயற்சி செய்கிறாள்.

தொடரும்

கிரெடிட் கார்ட்:

வசதியா? வேதனையா?

மாதத்தின் முதல் வாரம். விதான் டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸில் கலகலப்பாய்க் கூட்டம். கவர்ச்சியாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள மளிகைப் பொருள்களைத் தேர்ந்தெடுத்து, தள்ளு வண்டியில் அல்லது கூடையில் நிரப்பிக் கொண்டு 'பில்' கவுண்டருக்கு வருகிறார்கள் வாடிக்கையாளர்கள். ''அம்மா! ப்ளீஸ், இது எனக்கு...'' என்றபடி பெரிய சாக்லேட் பொட்டலத்தை எடுத்துக் கூடைக்குள் போடுகிறான் ஒரு சிறுவன். அநேகமாக அத்தனை பேரும் பணத்துக்குப் பதிலாக நீட்டுவது கிரெடிட் கார்ட் என்கிற கையடக்கமான பிளாஸ்டிக் அட்டையைத்தான்!

கையை விட்டுப் பணம் கொடுக்காமல் கார்டைக் காட்டிப் பொருள்களை வாங்கிச் செல்வது ஒரு மிகப் பெரிய சௌகரியம் என்பதை மறுக்க முடியாது. பெரிய தொகையைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலையின்றி 'ஷாப்பிங்' செய்யலாம்.

ஊர் ஊராகச் சென்று வர்த்தகம் வளர்க்கும் பெரிய அதிகாரிகள் அல்லது விற்பனைப் பிரிவைச் சேர்ந்தவர்கள், 'பணம் போதுமா? ஊர் திரும்ப டிக்கெட்டுக்குக் குறையுமா?' போன்ற சில்லறைக் கவலைகள் இன்றி முழு மூச்சுடன் வர்த்தக அபிவிருத்தியில் ஈடுபடலாம்.



டேவிட் — குடும்பத்துடன்

இல்லத்தரசிகள் அவசரமாக, அவசியமான பொருள்கள் வாங்க வேண்டி வந்தால் மாதக் கடைசியாயிற்றே என்று தயங்க வேண்டாம்!

ஆனால்....

கையை விட்டுப் பணம் கொடுக்க வேண்டாம் என்னும்போதே தேவைக்கதிகமாகப் பொருள்களை வாங்கும் அபாயமும் கிரெடிட் கார்டினால் உருவாகி விடுகிறதல்லவா...?

சில கிரெடிட் கார்ட் உரிமையாளர்களிடம் இக் கேள்வியைக் கேட்டோம்:

''எனக்குக் கிரெடிட் கார்ட் கிடைத்த புதிதில் ஒரு 'ஜோரில்' பல பொருள்களைச் சக்திக்கு மீறி வாங்கத்தான் செய்தேன். ஆனால் சில மாதங்கள் கழித்து என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டு விட்டேன்'' என்கிறார் சுஜாதா.

'விதான்' கடையில் தள்ளு வண்டியுடன் ஷாப்பிங் செய்து கொண்டிருந்த டேவிட்,

''நான் மர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளேன். வியாபார நிமித்தமாக வெளியூர்களில் செலவுகள் நேரும்போதும் சரி, வீட்டுக்காகப் பொருள்கள் வாங்கும் போதும் சரி, செலவுக் கணக்கை எழுதி வைத்துக் கொள்ளும் தலைவலி கிரெடிட் கார்டினால் ஒழிகிறது. என்னென்ன செலவுகள் செய்தோமோ அவற்றுக்கான பில்களை ஒன்று சேர்த்துக் கிரெடிட் கார்ட் நிறுவனமே நமக்கு மாதா மாதம் அனுப்பி வைக்கும். போன மாதம் இன்னின்ன செலவுகள் செய்துள்ளோம் என்பது தெளிவாகத் தெரிவதால் அடுத்த மாதத்துக்கு பட்ஜெட் தயாரித்துக் கொள்ளலாம்'' என்கிறார்.

“**பெ**ரிய தொழிலதிபர்கள், செலவுக் கணக்கு வைத்துக் கொள்ள நேரமில்லாத

MasterCard

உயர் அதிகாரிகள் போன்றவர்களுக்கு கிரெடிட் கார்ட் வசதியாக இருக்கலாம். ஆனால், அதையே வீட்டுச் செலவுக்குப் பயன்படுத்துவதில் சில வேதனைகள் உண்டு'' என்கிறார் பத்மாவதி.

''எழுபத்தைந்து ரூபாய்க்கு ஒரு புடைவை வாங்க பட்ஜெட் போட்டுக் கொண்டு கடைக்குப் போகிறோம். ஆனால் எழுபத்தைந்து ரூபாய் புடைவையை விட நூறு ரூபாய் புடைவை அதிகம் பிடித்திருக்



• சாந்தி — கிரெடிட் கார்ட் கருவியுடன்



• பட். (படம்: சுபா)

கிறது. கிரெடிட் கார்ட் வசதியிருப்பதால் தயங்காமல் நூறு ரூபாய் சேலையை வாங்கி விடுகிறோம். கிரெடிட் கார்ட் வசதியினால், அவசியச் செலவே ஆடம்பரச் செலவாக மாறும் அபாயம் நிறைய இருக்கிறது... ஆனால் இந்த பலவீனத்தைப் பலர் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்...'' என்கிறார்.

ஒரு தனியார் நிறுவனத்தில் உயர் பதவி வகிக்கும் கோபாலன் கிரெடிட் கார்ட் வைத்துக் கொள்ள வசதியிருந்தும் அதை நாடவில்லை. காரணம் கேட்ட போது சொன்னார்: ''அநாவசியச் செலவுகள் அதிகரிக்கும் என்ற பயம்தான். கிரெடிட் கார்ட் வைத்துக் கொள்வதால் செலவு செய்ய வேண்டிய மனோதத்துவ ரீதியான நிர்ப்பந்தத்துக்கும் ஒருவர் உள்ளாகக்கூடும். கிரெடிட் கார்ட் வசதியைப் பெறுவதற்கே ஒரு தொகையைச் செலுத்த வேண்டும். தவிர ஆண்டுதோறும் அதைப் புதுப்பித்துக் கொள்ள ஒரு தொகை. 'ஒரு வசதிக்காக நாம் இவ்வளவு செலவு செய்யும் போது அந்த வசதியை நாம் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பானேன்?' என்று தோன்றும். அவ் வசதியைப் பயன்படுத்திக் கொள்வதோ மேன்மேலும் செலவுகளுக்குத் தான் வழிவகுக்கும். கிரெடிட் கார்டை வாடிக்கையாளர்களுக்கான வசதி என்று வங்கிகள் விளம்பரப்படுத்துகின்றன. இது உண்மைதான் என்றாலும் வியாபாரப் பெருக்கத்துக்கும், அதிகப் பணம் புரள்வதற்கும் உதவ வங்கிகளுக்கும் சில கடைகள், ஹோட்டல்கள், போன்றவற்றுக் கும் இடையேயான ஒப்பந்தம் இது என் பதை மறுக்க முடியாது. வாடிக்கையாளர் களை அதிகம் செலவு செய்ய வைப்பதன் மூலம்தானே இந்த நோக்கம் வெற்றி பெற

• பண்டாரி



முடியும்?'' என்கிறார் கோபாலன்.

கோபாலன் ஒரு பொருளாதார நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கிரெடிட் கார்ட் பற்றி மேலும் கூறுகிறார்:

''கிரெடிட் கார்ட் செல்லுபடியாகிற கடைகளைக் கவனியுங்கள்... அவை அநேகமாக ஏர்–கண்டிஷன் வசதியுடைய, மேல் தட்டு மக்கள் நாடும் கடைகளாக இருக்கும். பொருள்கள், வாங்கத் தூண்டும் வகையில் கவர்ச்சிகரமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இக் கடைகளில் பொருள்களின் விலையும் சற்றுக் கூடுதலாகவே இருக்கும். இத்தகைய கடைகளில் கிரெடிட் கார்டை நீட்டி 'ஷாப்பிங்' செய்வதில் ஒரு 'த்ரில்' ஏற்படுகிறது. கிரெடிட் கார்டே வி. சி. ஆர். போல் ஒரு கௌரவச் சின்னமாகி விட்டது என்று கூடச் சொல்லலாம்.''

மேல்தட்டு மக்கள் நிர்ணயிக்கும் கௌரவச் சின்னங்கள்தான் நடுத்தர வர்க்கத்தினரின் 'இலட்சியக் கனவு'களாகி விடுகின்றன. அதனால் இன்று நடுத்தர வர்க்கத்தினர் மேலும் மேலும் கிரெடிட் கார்ட் வசதியை நாடுவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. அலுவலக நிமித்தம் அடிக்கடி வெளியூர் போகும் மத்தியதரக் குடும்பத் தலைவர் தமது கிரெடிட் கார்டை வீட்டுச் செலவுக்கும் உபயோகிக்கிறார். அவ்வப்போது ஐந்து நட்சத்திர ஓட்டலில் கூட அவரால் குடும்பத்துடன் உணவு கொள்ள முடிகிறது! இந்த வசதியினால் பின்னால் வேதனை ஏற்படாமல் இருக்குமா? சந்தேகம்தான்.

விதான் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸின் பில் போடும் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் சிலரைச் சந்தித்த போது மத்தியதர வகுப்பினர் கிரெடிட் கார்ட் ஷாப்பிங் செய்வது அதிகரித்து வருவதாகவே சொன்னார்கள்.

சராசரி மதிப்பீட்டில், கிரெடிட் கார்டுக்குப் பொருள்கள் வாங்குவோர் பணம் கொடுத்து வாங்குவோரை விட அதிகத் தொகைக்கு வாங்குவதாகச் சொன்னார் பில் கவுண்டர் சிப்பந்திகளுள் ஒருவரான பிரசன்னா (அட்டைப் படம்).

இதே பணியில் உள்ள சார்லஸ், ''கிரெடிட் கார்டுக்குப் பில் தயாரிக்கத்தான் அதிக நேரம் செலவாகும்'' என்றார். ''வாடிக்கையாளர் கொடுக்கும் கார்டின் எண்ணை வாரா வாரம் வங்கிகள் அனுப்பும் 'செல்லாத கார்டுகள்' (hot card அல்லது pickup card என்று இதை ஆங்கிலத்தில் சொல்கிறார்கள்) பட்டியலுடன் ஒப்பு நோக்கி, அந்தக் கார்ட் எண், அப்பட்டியலில் இடம்பெறவில்லை என உறுதி செய்து கொள்ள வேண்டும். பிறகு கார்டை ஒரு சிறிய கருவியின் அடியில் பொருத்தி இயக்கினால் அதன் எண்ணும், வாடிக்கையாளர் பெயர் போன்ற இதர விவரங்களும் ஒரு சிறிய தாளில் பதிவாகும். அத் தாளுடன் அந்த வாடிக்கையாளரின் பில் பிரதியை இணைத்துத் தனியே வைக்க வேண்டும். 'காஷ் பில்லு'க்கு மூன்று முதல் ஐந்து நிமிடங்கள் செலவானால் கிரெடிட் கார்ட் பில்லுக்குப் பத்து முதல் பதினைந்து நிமிடங்கள் ஆகலாம்'' என்றார் சார்லஸ்.

சாந்தி என்ற சிப்பந்தி செல்லாக் கார்டு ஒன்றினைக் கைப்பற்றிய தமது அனுபவத்தை விவரித்தார்: ''கடை மூடும் நேரத்தில் ஒரு பெண்மணி வந்து சுமார் நாலாயிரம் ரூபாய்க்குப் பொருட்கள் வாங்கினார். அவர் கார்டை 'ஹாட் கார்ட்' பட்டியலுடன் ஒப்புநோக்கிய போது அதன் எண் அதில் இடம்பெற்றிருந்தது. நீண்ட நாட்களாகக் கிரெடிட் கார்டுக்கு வாங்கிய பொருட்களுக்கான தொகையை வங்கிக்குச் செலுத்தாதவர்கள்; சில ஏமாற்றுப் பேர் வழிகள் போன்றோரது கார்டு எண்கள் தான் அந்தப் பட்டியலில் இருக்கும். இத்தகைய கார்டுகளைக் கைப்பற்றி உரிய வங்கிக்கு அனுப்ப உதவும் சிப்பந்திக்கு நூறு ரூபாய் ஊக்கத் தொகை தருகிறது வங்கி.

கவனக்குறைவாக ஒரு ஹாட் கார்டை ஏற்றுக் கொண்டு பில் போட்டு, விட்டால் கடைக்காரருக்கு நஷ்டம்தானா...? விதான் உரிமையாளர் பண்டாரி கூறினார்.

''வங்கியில் பணம் தராவிட்டாலும் நாங்கள் வாடிக்கையாளரிடம் நேரில் சென்று பணம் வாங்கி விடுவோம். ஆனால் இத்தகைய கவனக்குறைவு நிகழ்வது மிக

ஃப்ரிஜ் பரிசு: கூப்பன் நெ. 2

ஃபிரிஜ் பரிசு பெற இந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து கத்தரித்துப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். கதை முடியும் வாரம் எல்லாக் கூப்பன்களுடன் 5 – 10 வரி விமர்சனமும் எழுதி அனுப்புங்கள். ஆறுதல் பரிசுகளும் உண்டு!

'நேற்று வரை நந்தவனம்' தொடர்கதையில் இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்ட.....

தவறு: ____________ திருத்தம்: ____________

____



* சார்லஸ்

அபூர்வமே. கிரெடிட் கார்ட் கொண்டு வருபவர்கள் கடைக்குள் வந்ததுமே கார்டுகளைச் சிப்பந்திகளிடம் கொடுத்து விடும்படி கேட்டுக் கொள்கிறோம். நிதானமாகப் பரிசோதித்த பின்னரே பில் போடுகிறோம்.''

கிரெடிட் கார்டு பெற விரும்புவோரிடம் என்ன தகுதிகளை வங்கிகள் எதிர்பார்க்கின்றன? 'கான் கார்ட்' வெளியிடும் கனரா வங்கியின் துணைப் பொது மேலாளர் ஹெச். ஆர். பட் கூறுகிறார்:

''நாங்கள் முன் பணம் எதுவும் வசூலிப்பதில்லை. வாடிக்கையாளர் குறைந்தபட்சம் மூவாயிரம் ரூபாய் மாத வருமானம் உடையவராக இருக்க வேண்டும். மற்ற வங்கிகள் நிர்ணயித்துள்ள தொகையை விட இது குறைவுதான். ஆண்டுதோறும் கார்டைப் புதுப்பித்துக் கொள்ள ஒரு தொகை செலுத்த வேண்டும். ஐயாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை வாங்கலாம். நாற்பது முதல் ஐம்பது நாட்கள் வரை கெடு கொடுத்துத் திரும்ப வசூலிப்போம். இதைத் தவிர, வெளியூர் செல்ல நேர்ந்தால் அங்குள்ள கனரா வங்கி கிளையில் உங்கள் கார்டைக் காண்பித்து ரூ. 2500 வரை பணமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

''எங்கள் கார்டை ஏற்றுக் கொள்ளும் நிறுவனங்களிடம் 3.5 முதல் ஐந்து சதவிகிதம் வரை கமிஷன் வாங்குகிறோம். வாடிக்கையாளர்கள் கார்டைத் தொலைத்து விட்டால் எங்களிடம் உடனே தகவல் கூற வேண்டும். அப்போதுதான் அந்தக் கார்ட் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க முடியும்.''

கிரெடிட் கார்ட் துறையில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கும் தனியார் நிறுவனம் மெர்கன்டைல் கிரெடிட் கார்ப்பரேஷன். இந்தியாவிலேயே முதன் முதலாகத் துணிந்து வங்கி சார்பற்ற கிரெடிட் கார்டுகளை (Mercard) வழங்கியது. இந்தியா முழுவதிலும் பதினைந்தாயிரம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆறாயிரம் நிறுவனங்கள் மெர்கார்டை ஏற்கின்றன.

மெர்கன்டைல் கிரெடிட் கார்பரேஷனின் விற்பனைப் பிரிவு மேலாளர் ராஜ்குமார் கூறுகிறார்: மெர்கார்டு மூலம் மாதா மாதம் 1.25 கோடி ரூபாய் பணம் புரள்கிறது. ஹாட்லிஸ்ட் செய்யப்படும் மெர்கார்டுகள் மிகக் குறைவு. நாங்களே சந்தேகாஸ்பதமான வாடிக்கையாளர்கள் பேரில் ஒரு கண் வைத்திருப்போம். தேவையானால் வீட்டில் சென்று சோதனையிட்டுக் கார்டைப் பறிமுதல் செய்ய ஒரு பிரிவே உள்ளது. வங்கிகளால் இந்த நேரடிக் கண்காணிப்பைச் செய்ய முடியாது.''

கிரெடிட் கார்ட் முறையினால், அவற்றை வெளியிடும் வங்கிகள், நிறுவனங்கள், மற்றும் அவற்றை ஏற்கும் வர்த்தக நிறுவனங்கள் லாபமே அடைகின்றன. ஆனால் கிரெடிட் கார்டை உபயோகிப்பது வட்டிக்குக் கடன் வாங்கி ஷாப்பிங் செய்வதற்கு நிகர்தானே? வட்டி விகிதம் வேண்டுமானால் சற்றுக் குறைவாக இருக்கலாம். ஆனால், மாதாந்திர கிரெடிட் கார்ட் பில் கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால் பதினெட்டு சதவிகித வட்டி வசூலிக்கப்படுகிறது என்பதை மறந்து விடக் கூடாது. பல மேற்கத்திய நாடுகளில், ஒன்றுக்கு மேற்பட்ட கிரெடிட் கார்டுகளை வைத்துக் கொண்டு அதன் காரணமாகவே திவாலானவர்கள் பலர் உண்டு!

— சீதா ரவி, பகவதி

அட்டை வண்ணப்படம், படங்கள்: **உத்ரா**

அட்டையில்: **சுசித்ரா மாதவ நாராயண், சிறுவன் சித்தார்த்**

நன்றி: **விதான்**

அது என்ன

50



* அரபாத்

வளைகுடாப் போர் சமயத்தில், ''பாலஸ்தீனியப் பிரச்னைக்கும் ஒரு முடிவு காணப்பட வேண்டும்,'' என்ற நிபந்தனையை எழுப்பினார் ஸத்தாம் ஹுஸேன். குவெய்த் ஆக்கிரமிப்புப் பிரச்னையிலிருந்து கவனத்தைத் திசை திருப்ப அவர் இவ்வாறு பேசியபோதிலும், பல அராபிய நாடுகளின் ஒத்துழைப்பையும் இந்தப் போரில் பெற்றிருந்த அமெரிக்கா, அதை இழக்க விரும்பாமல், தானும் பாலஸ்தீனப் பிரச்னையில் அக்கறை கொண்டிருப்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டது. ஈராக்கினால் தாக்கப்பட்டபோதிலும் மறுதாக்குதல் நடத்தாமல் சகித்துக் கொண்ட இஸ்ரேலும் பாலஸ்தீனப் பிரச்னை தொடர்பான பேச்சு வார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாக அறிவித்தது.

இந்தச் செய்திகளையெல்லாம் படித்த கல்கி வாசகர் பி. டி. பிரகாசம், 'அது என்னங்க பாலஸ்தீனப் பிரச்னை?' என்று கேள்வியெழுப்பி, ''அது தொடர்பாக விளக்கமான கட்டுரை வெளியிடுங்களேன்'' என்று யோசனை தெரிவித்திருந்தார். அந்த யோசனையை ஏற்று நாம் சேகரித்த தகவல்களின் தொகுப்பு:

மெடிடரேனியன் கடலுக்கும் ஜோர்டன் நதிக்கும் இடையே அமைந்துள்ள குறுகலான பிரதேசம் பாலஸ்டைன் என்று வழங்கப்பட்டது. இந்தப் பகுதி பல படையெடுப்புகளைக் கண்டது. ஆதி காலந்தொட்டு எகிப்தியர்கள், பபிலோனியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள் என்று பலரும் பாலஸ்தீனை ஆக்கிரமித்துத் தங்கள் அரசை ஸ்தாபித்தனர். இவர்களெல்லாம் புயல் போல் வந்து போன போது பாலஸ்தீனில் நங்கூரம் பாய்ச்சித் தங்கியவர்கள் ஹீப்ரு பழங்குடிகள் (யூதர்கள்). கி. மு. 1100 ஆண்டுவாக்கில் பாலஸ்தீனின் பெரும்பகுதி இவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. அடுத்த 1200 ஆண்டுகளுக்குப் பாலஸ்தீனைத் தாய்நாடாகக் கொண்டாடினார்கள். கி. பி. 66இல் ரோமர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய போதுதான் யூதர்கள் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டனர். உலகெங்கிலும் விரிந்து பரந்திருந்த ரோம சாம்ராஜ்யத்தின் பல நாடுகளிலும் அடிமைகளாக விற்கப்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகெங்கிலும் இருந்த யூதர்களிடையே ஒரு விழிப்புணர்வு தோன்றியது. தாய்நாடான பாலஸ்தீனுக்குத் திரும்ப வேண்டும் என்ற வேகம் உண்டாயிற்று. இதற்காக **zionism** என்ற ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார் ஹங்கேரியைச் சேர்ந்த தியோடோர் ஹெர்ஸ்ல். **(Theodor Herzl)**

ஆனால், இதற்குள்ளாகப் பாலஸ்தீன் மேலும் பல நாட்டவரின் தாக்குதலுக்குள்ளாகி, கைமாறித் துருக்கர்களின் பிடிக்கு வந்து விட்டிருந்தது. முதல் உலகப் போர் ஆரம்பமானதும் துருக்கர்களைப் பாலஸ்தீனிலிருந்து வெளியேற்ற முற்பட்டது பிரிட்டன். இதற்காக அப்பகுதியில் வாழ்ந்த அரேபியர்களின் உதவியை நாடியது. பிரதியுபகாரமாக, சுதந்திர பாலஸ்தீன் நாடு தருவதாக வாக்களித்தது.

இந்த அரேபிய மக்களும் யூதர்களைப் போலவே பாலஸ்தீனியப் பழங்குடிகள்தான். இவர்களைப் பற்றிய குறிப்பு

* ஜெருசலம்...



பாலஸ்தீன் பிரச்னை?

பைபிளில் உள்ளது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பாலஸ்தீனை முஸ்லிம் படைகள் சூறையாடிய போதுதான் இவ்வினத்தில் பெரும்பாலோர் முஸ்லிம் களாக மதம் மாறியிருந்தார்கள். ஆனா லும் பாலஸ்தீனின் பால் யூதர்களுக்கு இருந்த தீவிரமான பற்றுதல் இந்த அரேபியர்களுக்கும் இருந்தது.

முதல் உலகப் போர் முடிவுறும் தறு வாயில், வாக்களித்தபடி சுதந்திரம் தர முடியாத நிலைமை உருவாயிற்று. இதற் குக் காரணம், அதே சமயத்தில் யூதர் களும் பாலஸ்தீனை நோக்கித் திரும்ப ஆரம்பித்தமைதான். அமெரிக்க யூதர் களின் ஆதரவு பிரிட்டனுக்குத் தேவைப் பட்டதால், zion இயக்கத்தை அவர்கள் ஆத ரிக்க வேண்டியதாகி விட்டது. இந்தச் சூழலில் யூதர்களும் உரிமை கொண்டாடும் ஒரு பிரதேசத்தை அரேபியர்களின் சுதந்திர நாடாக எப்படி அறிவிக்க முடியும்?

பிரிட்டன் வாக்குத் தவறியதுமே பாலஸ்தீனில் யூதர்களுக்கு எதிரான கிளர்ச்சிகள் தொடங்கின. இரண்டாம் உலக யுத்தமும் ஆரம்பித்தது. ஹிட்லரின் கொடுமைகள் தாளாமல் பாலஸ்தீனுக்கு ஓடி வந்த யூதர்கள் அங்கேயும் அரேபியர் களின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிய தாகி விட்டது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில், பாலஸ்தீனிலிருந்து தனது துருப்புக்களை விலக்க முடிவு செய்த பிரிட்டன், பிரச் னையை ஐ. நா. சபைக்கு எடுத்துச் சென் றது. அமெரிக்காவின் பலத்த சிபாரிசின் பேரில், பாலஸ்தீனைப் பிரித்து, யூதர் களுக்குத் தனி நாடாக இஸ்ரேலை ஸ்தா பிதம் செய்வதென்று முடிவாகியது. யூதர்கள் ஏற்ற இத் திட்டத்தை அராபியர் கள் நிராகரித்தனர். இரு தரப்பினருக்கு மிடையே பகைமை வலுத்தது.

1948, மே மாதம் பதினாலாம் தேதி இஸ்ரேல் தனி நாடெனப் பிரகடனம் செய்யப்பட்டது. மறுநாளே பிரிட்டிஷ் படைகள் அப் பகுதியிலிருந்து விலகின. அதே நாளில் எகிப்து, சிரியா, ஜோர் டன், இராக் ஆகிய நாடுகளிலிருந்து அராபியத் துருப்புக்கள் இஸ்ரேலைப் பலமாகத் தாக்கின. இந்தத் துருப்புக் களை விட இஸ்ரேலியத் துருப்புக்களின் எண்ணிக்கை மிகக் குறைவேயென்ற போதிலும் இஸ்ரேல் வென்றது. பாலஸ் தீனப் பிரதேசத்தில், ஐ. நா. இஸ்ரேலுக் கென ஒதுக்கியிருந்த 55 சதவிகித நிலப் பரப்பை, இந்தப் போராட்டத்தின் இறுதியில் 78 சதவிகிதமாக விஸ்தரித் துக் கொண்டார்கள் இஸ்ரேலியர்கள்! மிகுதியை ஜோர்டனும் எகிப்தும் இணைத்துக் கொண்டன!

உலகெங்கிலுமிருந்து 5,00,000 யூதர்கள் துணிந்து இஸ்ரேலில் குடியேறி னார்கள். சுமார் ஆறு முதல் ஏழு லட்சம் அரேபியர்கள் பயந்து வெளியேறினார் கள். இதர அரபு நாடுகளில் குடியேறி னார்கள். அந்த நாடுகளிலெல்லாம் பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் சிறிதும் பெரிதுமாக ஆரம்பமாயின. இந்த ரகசிய இயக்கங்கள் தங்களையே வீழ்த்தக்கூடும் என அஞ்சிய சில அரபுத் தலைவர்கள் **Palestine Liberation Organisation (PLO)** என்ற பகிரங்க இயக்கத்தை ஆரம்பித்தனர். 'யூதர்களைக் கடலுக் குள் விரட்டியடிப்போம்' என்று அதன் தலைவர்கள் அறைகூவல் விடுத்தனர்!

ஆனால் நடந்த கதை வேறு! கொரில்லா யுத்த முறைகளில் தேர்ந்த பி. எல். ஓ. வீரர்கள் 1967இல் இஸ்ரேலைத் தாக்கிய போது செமர்த்தி யாக நொறுக்கப்பட்டார்கள். முன்பு பிரிட்டன் ஆக்கிரமித்திருந்த முழு பாலஸ்தீனிய பகுதி (அதாவது ஜார்ட னின் வெஸ்ட் பாங்க், எகிப்தின் காஜா ஸ்டிரிப்) தவிர, சினாய் தீபகர்ப்பம், சிரியாவிலுள்ள 'கோலன் ஹைட்ஸ்' ஆகிய பகுதிகளையும் ஆறே நாட்களில்

* ....சில காட்சிகள்.



அடுத்த இதழில்...

- ஜெ. அலையை நிறுத்த முடியுமா?



இஸ்ரேல் கைப்பற்றி விட்டது.

பி. எல். ஓ. வின் போராட்டம் தொடர்ந்தது. அவ்வப்போது இஸ்ரேல் தாக்கப்பட்டது. 1974இல் பி. எல். ஓ. தலைவர் அராஃபத் ஐ. நா. சபையில் சொற்பொழிவு ஆற்ற அழைக்கப்பட்டார். இதனால் பி. எல். ஓ. வுக்கு உலகளாவிய அங்கீகாரமும் ஐ. நா. சபையில் பார்வையாளர் அந்தஸ்தும் கிட்டியது. பாலஸ்தீனியர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க அரசும் பகிரங்கமாகப் பேச ஆரம்பித்தது. பாலஸ்தீனில் அராபியர்கள் வாழும் பகுதிகளுக்குச் சுயாட்சி வழங்கலாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது. இதனைப் பி. எல். ஓ. ஏற்கவில்லை. தனி நாடு மட்டுமே ஏற்கக்கூடிய தீர்வு என்றது.

யூதர்களும் சரி, அரேபியர்களும் சரி, நீண்ட நெடுங்காலமாகப் பல்வேறு தரப்பினரால் துன்புறுத்தப்பட்ட இனத்தவர்கள். யூதர்கள் தஞ்சம் புகுந்த நாடுகளிலெல்லாம் கொடுமைக்குள்ளானார்கள். கிறிஸ்துவர் இஸ்லாமியர் ஆகிய இரு இனத்தவருமே யூதர்களைச் சமய நம்பிக்கையற்றவர்கள் எனக் கருதி அவர்களைப் பகிஷ்கரித்தனர். ஆனால் கடுமையான உழைப்பும் தேர்ந்த அறிவாற்றலும் கொண்டிருந்த அந்த மக்கள், அத்தனையையும் சகித்துக் கொண்டு மீண்டு வந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பாலஸ்தீனுக்குத் திரும்பி, அங்கிருந்த சதுப்பு நிலங்களையும் கட்டாந்தரைகளையும் பண்படுத்தி விளை நிலங்களாக்கினார்கள். மலைச் சரிவுகளில் காடுகள் வளர்த்து வளம் சேர்த்தார்கள். ஹீப்ரு மொழிக்குப் புனர்வாழ்வு அளித்தார்கள்.

பாலஸ்தீனியர்களும் வீரம் மிக்கவர்கள். இஸ்ரேல் உருவான போது வெளியேறிய சுமார் எட்டு லட்சம் பேரும் சிதறிப் போய் அகதிகளாக வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் தங்களுக்கென்று ஒரு தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொண்டார்கள். பல அரபு நாடுகளில் முக்கிய அரசாங்கப் பொறுப்புகளில் இருந்து வருகிறார்கள்.

பி. எல். ஓ. தலைவர் யாஸிர் அராஃபத் 1924 இல் ஜெருசலத்தில் பிறந்த சுன்னி முஸ்லிம். 1948 இல் அகதியாக காஜாவுக்கு வந்தார். கெய்ரோவில் பொறியியல் படித்தார். 1956 இல் பாலஸ்தீனிய மாணவர் இயக்கத் தலைவரானார். 1968 இல் பி. எல். ஓ. தலைவரானார். ஆயுதப் போராட்டம் பி. எல். ஓ. வின் முக்கிய கொள்கைகளுள் ஒன்று.

ஆக, பாலஸ்தீனப் பிரச்னை என்பது ஒரே பூமியைச் சேர்ந்த, இரு இனத்தவர்களிடையேயான பிரச்னை. இரு பாலருக்கும் மதரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஜெருசலம் நகரம் இஸ்ரேலில் அமைந்து விட்டதும் எரிகிற நெருப்பில் எண்ணெயாய் இருக்கிறது. இரு இனத்தவரும் ஒரே மாதிரியான துன்பங்களை அனுபவித்தபோதிலும் அவர்களுக்கிடையே பரஸ்பர இரக்கமோ ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுக்கும் குணமோ துளியும் இல்லை என்ற உண்மை உலக சிந்தனையாளர்களையெல்லாம் வியப்பில் ஆழ்த்துகிறது.

சமீபத்திய வளைகுடாப் போருக்குப் பிறகு இஸ்ரேலியருக்கும் அராபியருக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடந்து, பிரச்னைகளுக்குத் தீர்வு ஏற்படலாம் என்று கருதப்பட்டது. அமெரிக்க வெளி உறவு அமைச்சர் ஜேம்ஸ் ஏ. பேக்கர் இதற்காகப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். ஆனபோதிலும் வேற்றுமைகள் குறையும், சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது. ஏதோ, 'மாநாடு நடந்தால் பங்கு பெறுகிறோம்' என்று இருதரப்பினரும் கூறுகின்றனரே தவிர, மாநாட்டில் என்ன பிரச்னைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என்பதில் கூட கருத்து ஒற்றுமை இல்லை!

இஸ்ரேல் என்ற ஒரு நாடு இருப்பதையே அராபியர்கள் ஒப்புக் கொள்ள மறுக்கும் போது, தாங்கள் கைப்பற்றியுள்ள பகுதிகளை விட்டுக் கொடுக்க இஸ்ரேல் பாதுகாப்பு நோக்கில் தயங்குகிறது. 'வாழு, வாழ விடு' என்ற கொள்கையை இருதரப்பினரும் ஏற்றாலன்றி அமைதிக்கு வழியில்லை.

தொகுப்பு: **நமது நிருபர்கள்**

நன்றி: **டாக்டர். சி. ஏ. பெருமாள், டாக்டர். ஜி. கே. பிரசாத், அமெரிக்கத் தகவல் நிலையம்.**

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை – 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் – சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா – உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா – உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.





Nestlé
Milkmaid
SWEETENED CONDENSED MILK

REGISTERED NO. M. 4392
Registered as Newspap... in ... lanka